உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# அபிராமி அந்தாதி

(உரையுடன்)

ஸ்ரீ அபிராமி பட்டர் இயற்றியது

திருப்பனந்தாள், காசி மடத்து வெளியீடு

1944

காசி மடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

ஸ்ரீ அபிராமிபட்டர்

அருளிச்செய்த

# அபிராமி அந்தாதி

திருப்பனந்தாள் - காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி ஸ்வாமிகள்

திருவுள்ளப்பாங்கின்படி

கலைமகள் ஆசிரியர் :

ஸ்ரீ வித்வான் - கி. வா. ஜகந்நாதன், B. O. L.

எழுதிய உரை முதலியவற்றுடன்

சென்னை :

சாது அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றது

தாரண, வைகாசி

1944

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | .... | v |
| 2. | ஆசிரியர் வரலாறு | .... | vii |
| 3. | ஆராய்ச்சி | .... | xiii |
| 4. | அபிராமி அந்தாதி | | |
| | காப்பு | .... | 1 |
| | நூல் | .... | 2 |
| | பயன் | .... | 66 |
| 5. | செய்யுள் முதற்குறிப் பகராதி | .... | 67 |

Library of India

# முன்னுரை

தமிழில் தெய்வங்களைத் தோத்திரம் செய்து வழிபட எத்தனையோ கருவிகள் இருக்கின்றன. தெய்வத் திருவிளையாடல்களை நன்கு விளக்கும் புராணங்கள் ஒருபால் இருப்ப, அத்தெய்வங்களைப் பாட்டுக்கு விஷயமாக வைத்துப் பலவகையான பிரபந்தங்களைப் பாடியிருக்கிறார்கள் தமிழ்ப் பெரும் புலவர்கள். தேவாரம் முதல் இந்தத் தோத்திர இலக்கியங்கள் கங்கை வெள்ளம்போலத் தமிழில் பெருகி வந்திருக்கின்றன. தமிழ்ப் புலமை நிரம்பிய புலவர்களும், தெய்வபக்தி தழைத்த அடியார்களும், யோகியரும், ஞானியரும் தத்தம் வழிபடு கடவுளைப் பாராட்டி இயற்றிய நூல்கள் அளவிறந்தன.

அவற்றுள் அபிராமி அந்தாதி ஒன்று. இது திருக்கடவூரில் வாழ்ந்திருந்த அபிராமி பட்டர் என்ற தேவி உபாஸகரால் இயற்றப்பெற்றது; அத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அபிராமி அம்பிகையின் புகழாக அமைந்தது. காப்புச் செய்யுள் ஒன்றும், பயன் ஒன்றும் உள்ளிட்டு நூற்றிரண்டு செய்யுட்களை உடையது. இடையிலுள்ள நூறு செய்யுட்களும் அந்தாதியாக அமைந்து இறுதிப் பாடலும் முதற் பாடலும் மண்டலித்து வந்துள்ளன. வரப்பிரசாதியும் மெய்ஞ்ஞானச் செல்வருமாகிய அபிராமிபட்டர் தேவியின் திருவருளில் மூழ்கித் திளைத்தவராதலின் அவருடைய வாக்காகிய இந்நூலைப் பாராயணம் செய்தலால் பலவகை நன்மைகள் உண்டாகுமென்று கருதி இந்நாட்டில் பலர் அங்ஙனம் செய்து வருகின்றனர்.

பக்திச் சுவையும், அநுபவாதிசயப் பெருக்கை வெளியிடும் முறையும், எளிய நடையும் அமைந்த இந்நூலை உரை

யுடன் வெளியிட வேண்டுமென்ற தம் திருவுள்ளக் கருத்தைக் காசி மடத்துத் தலைவர்களாகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி ஸ்வாமிகளவர்கள் குறிப்பித்தார்கள். அவர்கள் திருவுள்ளக் கருத்தின்படி இந்நூல் ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் குருபூஜைத் தினமாகிய இந்த நன்னாளில் வெளியாகின்றது.

திருப்பனந்தாளில் தாடகையென்னும் பெண்ணுக்காக வளைந்தருளிய செஞ்சடையப்பர் குங்கிலியக்கலய நாயனாருக் காக மீண்டும் நிமிர்ந்தருளினர். சிவபிரான் நிமிர்ந்தமையால் குங்கிலியக்கலய நாயனாரது அன்பின் ஆற்றல் வெளியாயிற்று. அவருக்குச் சிறப்பையளித்த இத்தலத்தில் உள்ள காசி மடத்தி லிருந்து அந்நாயனாருக்குப் பிறப்பையளித்த திருக்கடவூர்த் தல சம்பந்தமான பிரபந்தம் வெளிவருதல் பொருத்தமேயாகும்.

குறுகிய காலத்திற்குள் இதற்கு உரை எழுதி அச்சிட்டு வெளியிடும்படி நேர்ந்தமையால் இதில் சில குறைபாடுகள் இருக்கலாம். தமிழ் நயம் தேரும் அன்பர்கள் அவற்றைக் களைந்து நற்றிறமே தெரிந்து, கொள்வார்களென்று நம்பு கிறேன்.

இதற்கு உரை எழுதும் வாய்ப்பை எனக்கு அளித்த திருப்பனந்தாள் காசி மடத்துத் தலைவர்களாகிய காசி வாசி ஸ்வாமிகள்பால் மிக்க நன்றி பாராட்டுகிறேன். தமிழ்க் கல்வி வளர்ச்சியின் பொருட்டு அவர்கள் தொடங்கியிருக்கும் நற்செயல்கள் பல. வழிவழியே தமிழ்த் தொண்டாற்றும் நிலைய மாகிய காசி மடத்துத் தலைமையைத் தாங்கி அத்திருத் தொண்டை மேலும் மேலும் பெருகச் செய்யத் திருவுள்ளம் பூண்ட ஸ்வாமிகளை வாழ்த்திப் பரவுதல் தமிழ் நாட்டார் கடமையாகும்.

இங்ஙனம் :

9—6—1944

கி. வா. ஜகந்நாதன்.

# ஆசிரியர் வரலாறு

சோழ நாட்டில் காவிரி நதியின் தென்கரையில் உள்ள தேவாரம் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாகிய திருக்கடவூரில் சற்றேறக்குறைய 250 ஆண்டுகளுக்குமுன் அந்தணர் வகுப்பில் அபிராமி பட்டர் என்பவர் உதித்தார். அவருடைய இயற் பெயர் இன்னதென்று தெரியவில்லை. பரம்பரையாகச் சங்கீதப் பயிற்சியும், தேவிஉபாஸனையும் அமைந்த குடும்பத்தினராதலின் அவ்வந்தணர் இளமை முதலே திருக்கடவூரில் எழுந்தருளி யுள்ள ஸ்ரீ அபிராமியம்மையை மிக்க அன்புடன் வழிபட்டு வரலாயினர். தமிழிலும் வடமொழியிலும் சங்கீதத்திலும் அவர் கற்றுத் தேர்ந்தார். அபிராமி யம்பிகை விஷயமாக ராகமாலிகையில் ஒரு கீர்த்தனம் பாடியதோடு அவ்வப்போது தம் உள்ளத்தே தோற்றிய பக்தி விளைவினால் பல துதிகளை அவ்வம்பிகையின்மீது பாடி வந்தார்.

உபாஸனையில் சிறந்து நின்ற அவர் சரியை, கிரியை என்னும் இரண்டு சோபானமும் கடந்து யோகநிலையில் யாமளை யின் திருக்கோலத்தை ஆதார பீடங்களில் கண்டு கண்டு இடைப்பட்ட கிரந்திகளைத்தாண்டிச்சென்று பிரம்மரந்திரத்தில் ஸஹஸ்ரார கமலத்தில் ஒளி மயமாக எழுந்தருளியிருக்கும் லலிதாம்பிகையின் திருவருளின்பத்தில் திளைத்துப் பித்தரைப் போல ஆனந்தாதிசய வெறிமூண்டு உலவினர். அவருடைய அநுபவ நிலையை உணராத சிலர், 'இவர் ஏதோ தேவதையை உபாஸித்து அந்தணருக்கு மாறுபாடான ஆசாரங்களை மேற் கொண்டு பித்துப் பிடித்து அலைகிறார்' என்று ஏசத் தொடங் கினர். அவர்கள் ஏசுவதைக் காதில் வாங்காமல் அபிராமி சமயம் நன்றென்று கடைப்பிடித்து 'உள்ளத்தே விளைந்த

கள்ளால் உண்டான களியிலே' பெருமிதத்தோடு மிதந்து வந்தார் அப்பெரியார்.

அக்காலத்தில் தஞ்சையில் இருந்து அரசுபுரிந்த மகாராஷ்டிர மன்னராகிய சரபோஜி அரசர் தை அமாவாசைத் தினத்தன்று காவிரிப்பூம்பட்டினம் சென்று புகார் முகத்தில் ஸ்நானம் செய்து மீண்டவர், இடையில் திருக்கடவூரில் தங்கினர். தங்கித் திருக்கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்தபொழுது வழக்கம்போல அபிராமியின் சந்நிதியில் அபிராமி பட்டரைக் கண்டார். யோகம் கைவரப் பெற்று மதமத்தராகிய அவருடைய தோற்றத்தைக் கண்டு அதிசயித்த மன்னர், "இவர் யார்?" என்று அருகில் உள்ளவர்களை வினவியபொழுது அவர்கள், "இவர் ஒரு பித்தர்; வேத நெறி கடந்து பரிவார சக்தியாகிய ஒரு தேவதையை வழிபடுகின்றவர்" என்று சொன்னார்கள். அது கேட்ட மன்னர் ஏதாவது ஒரு வியாஜங்கொண்டு அபிராமிபட்டரோடு பேச எண்ணி, "இன்று புச்ச அமாவாசை உண்டா? எவ்வளவு நாழிகை இருக்கிறது?" என்று கேட்டார். சந்திரமண்டலத்து அமுதமயமாய் வீற்றிருக்கும் அம்பிகையைத் தம்முள்ளே தரிசித்து அங்கே சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்ற திருக்கோலத்தில் ஈடுபட்டிருந்த பட்டர், மன்னருடைய வார்த்தைகள் காதில் அரைகுறையாக விழவே விழித்துக்கொண்டு, "இன்று பௌர்ணமி" என்று சொன்னார். அருகில் இருந்தவர்கள் பிரமித்தனர். அவரைப்பற்றிக் குறை கூறியவர்கள் தாம் கூறிய கருத்தை மன்னர் நேரிலே உணர்ந்து கொண்டாரென்று மகிழ்ச்சி யடைந்தனர். சரபோஜி மன்னர் அவர்கள் கூறிய வார்த்தைகள் உண்மையென்றே எண்ணிப் பட்டரை மதியாமல் போய்விட்டார்.

அபிராமி பட்டர் உலக உணர்ச்சி பெற்றபோது தாம் தவறாகப் பௌர்ணமியென்று சொல்லிவிட்டதை எண்ணி

வருத்தமுறலானுர். தம்மைக் குறை கூறுவார் சொல் உண்மை யென்று தோற்றும்படி வந்த நிலைக்கு இரங்கினுர். "நன்றே வரினுந் தீதே விளைகினும் நானறிவ, தொன்றேயும் இல்லை" என்ற பக்குவமுடையவராதலின் "இனி என் செய்வது! எல்லாம் அம்பிகையின் திருவருள்!" என்றெண்ணி உடனே அபிராமி விஷயமாக இவ்வந்தாதியைப் பாடத் தொடங்கினுர். தம்மை உலகினர் பழி கூறுவதையும், அபிராமியின் உயர்வை யும், தாம்பெற்ற அநுபவச் சிறப்பையும் இவ்வந்தாதிப் பாடல் களில் வெளியிடத் தொடங்கினுர்.

சரபோஜி அரசர் அபிராமி பட்டரைக் கவனியாமல் சென்ருலும் பட்டருடைய தோற்றம் அவர் உள்ளத்தேபதிந்து கிடந்தது. அன்று முன் இரவிலே சிறிது துயில் வரவே பரிபூரணமான சந்திரன் உதயமானுற் போலவும், அபிராமி யம்மை தம் திருத்தோட்டைக் கழற்றி வீசியருள, அதுவே அமாவாசை யிருட்டில் சுடர்விட்டுத் தண்ணிலவு பொழிந்து மதிபோல விளங்குவதைப் போலவும், அபிராமி பட்டர் தம் அருகே நின்று 'அதோ, பாருங்கள்; முழுமதி கதிர் வீசு கின்றது' என்று காட்டுவதுபோலவும் கனவு கண்டார். அந்தக் கனவில் அம்பிகையின் தரிசனம் ஒருவாறு பெற்றமையால் அவர் உடலம் புளகித்து ஆனந்தம் மேலிட விழித்துணர்ந் தார். கனவிலே பெற்ற இன்பம் பின்னும் அவரைக் கவர்ந்தது.

அப்பொழுதுதான் மன்னருக்கு அபிராமி பட்டர் மிகச் சிறந்த சிவஞானியென்பதும், செயற்கரிய செய்யும் பெரியா ரென்பதும் புலப்பட்டன. உடனே பட்டரின் வீடு நோக்கிச் சென்று அவரை வழிபட்டு, "தங்கள் பெருமையை அறியாமல் இருந்த பிழையைப் பொறுக்கவேண்டும்" என்ருர். அம்பிகையின் திருவருளை நினைந்து வியந்த அபிராமி பட்டர், "எல்லாம் அவள் திருவருள்!" என்று கூறினர்.

அப்போது சரபோஜி அரசர் அவரை வணங்கி, அவருக்குச் சில விளைநிலங்களை மானியமாக அளிக்க எண்ணி அக்கருத்தைக் கூறவே பட்டர் அதற்கு இணங்கவில்லை; "தங்கள் சந்ததியாரின் நன்மையை உத்தேசித்தாவது ஒன்றை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று வற்புறுத்தி வேண்டிக் கொண்டார். பட்டர் ஒருவாறு உடன்படவே, அரசர் அக்கிராமத்திலும் அருகிலுள்ள கிராமங்களிலும் வருஷம் ஒன்றுக்கு வேலிக்கு எட்டு நாழி நெல் அவருடைய சந்ததிக்கு அளிக்கும்படி சுரோத்திரிய உரிமை அளித்துச் சாஸனம்செய்து கொடுத்தார். இவ்வுரிமையை இன்றும் அந்தப் பரம்பரையினர் அநுபவித்து வருகின்றனர்.

அபிராமி பட்டர், நூறு பாடல்கள் பாடி அந்தாதியை நிறைவு செய்தார். அவர் இந்த நூலையன்றித் திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள கள்ளவாரணப் பிள்ளையார் பதிகம் ஒன்றும், அபிராமியம்மை பதிகம் ஒன்றும், அமுதகடேசர் பதிகம் ஒன்றும் இயற்றினாரென்பர்.

அபிராமிபட்டரைப் பற்றிக் கர்ணபரம்பரையாகச் சில வரலாறுகள் வழங்கி வருகின்றன. அவை வருமாறு :

சரபோஜி மகாராஜாவிடம் அபிராமிபட்டர் நிதானம் தவறி, "இன்று பௌர்ணமி திதி" என்று விடை கூறினார். அதைக்கேட்ட அம்மன்னர், சிலர் அவரைப்பற்றிக் குறை கூறியது உண்மை என்று கருதிச் சிறிது கோபமடைந்து, "நீர் போய்வரலாம்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

தம் வீட்டிற்கு வந்த அபிராமிபட்டர் தாம் வாய் சோர்ந்து கூறியதை நினைந்து, 'நம்மை ஆட்கொண்ட அபிராமவல்லியே இந்தப் பிழையினின்றும் காப்பாற்ற வேண்டும்' என்று எண்ணித் திருக்கோயிலுக்குச் சென்று ஒருவகை அரிகண்டம் பாடத் தொடங்கினாராம். அம்பிகையின் சந்நிதியில் ஒரு குழி வெட்டி அதில் அக்கினியை மூட்டி அதற்கு

மேல் ஒரு விட்டத்திலிருந்து நூறு கயிறுகளால் ஆகிய ஓர் உறியைத் தொங்கவிட்டார். பின்பு அதன்மேல் ஏறியிருந்து, " அம்பிகை எனக்குக் காட்சி தந்து எனக்கு வந்த பழியை மாற்றுவிடின் இந்த அக்கினியில் விழுந்து உயிர் விடுவேன் " என்று சங்கற்பம் செய்துகொண்டு, " உதிக்கின்ற " என்று ஆரம்பித்து இவ்வந்தாதியைப் பாடலானார். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அபிராமி அம்பிகையின் திருக்காட்சி பெறுமை காரணமாக உறியில் ஒவ்வொரு கயிறுக அரிந்து கொண்டு வந்தார். "விழிக்கே அருளுண்டு" என்ற 79-ஆவது பாடல் முடிந்தபோது மாலைக்காலம் வந்துவிட்டது. அப்பொழுது அபிராமியம்பிகை அவருக்குக், காட்சி கொடுத்தருளித் தனது திருத்தோடு ஒன்றைக் கழற்றி வான மண்டலத்தில் வீச, அது சென்று சந்திரனைப்போலச் சுடர்விடலாயிற்று. அம்பிகை பட்டரை நோக்கி, " அன்ப, நீ மன்னனிடம் கூறிய சொல் மெய்யாகும்படி செய்துவிட்டோம். இந்தப் பிரபந்தத்தை நீ நிறைவேற்றுவாயாக. இதனை அன்புடன் பாராயணம் செய்பவர்கள் நம் அருளை அடைவார்கள்" என்று கூறி மறைந்தருளினாள்.

அம்பிகையின் திருக்காட்சியாலும் அவள் அருளிச் செய்த இன்மொழியாலும் தம்மை மறந்து பேரின்பவாரிதியில் ஆழ்ந்துநின்ற பட்டர் அந்த ஆனந்தாதிசயத்தை, "கூட்டியவா என்னை" என்ற 80-ஆவது பாடலிற் புலப்படுத்தி மேல் இருபது பாடல்களைப் பாடி நிறைவேற்றி இறுதியில் ஒரு பயனும் இயற்றினார்.

அந்த இரவில் அம்பிகையின் திருத்தோடு வானத்தில் ஒளி விடுவதைக் கண்டு சரபோஜி அரசரும் பிறரும், " அமாவாசையை அடுத்த பிரதமையாகிய இன்று பூரண சந்திரன் உதயமாயிற்றே! அற்புதம் அற்புதம்!" என்று ஆச்சரியமுற்றார்கள் ; " இஃது அம்பிகையின் திருவிளையாடல் ; தன் அடியார்

வார்த்தையை மெய்ப்பிக்கும்பொருட்டு இயற்றிய அற்புதம்" என்று தெளிந்தனர். பிறகு மன்னரும் பிறரும் அபிராமிபட்டரை அணுகி அடிவிழுந்து பணிந்து, "நாங்கள் செய்த அபராதத்தைப் பொறுக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அரசர், முன்பு சொன்ன மானியத்தை என்றும் பரம்பரையாக அநுபவித்துக் கொள்ளும்படி பட்டருக்கு வழங்கினர்.

இவ்வரலாற்றின் உண்மை யாதாயினும், சரபோஜி அரசர் முதலில் அபிராமிபட்டரின் பெருமையை உணராமல் அசட்டையாக இருந்தாரென்றும், பிறகு அவர் உணர்ந்து கொள்ளும் வண்ணம் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது என்றும் நாம் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

# ஆ ர ா ய் ச் சி

திருக்கடவூர் என்பது தஞ்சாவூர் ஜில்லாவில் காவிரியின் தென்கரையில் மாயூரம் - தரங்கம்பாடி இருப்புப் பாதையில் இருக்கும் ஒரு தலம். இத்தலம் மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூவகைச் சிறப்புக்களையும் உடையது. தேவர்களெல்லாம் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து ஒரு குடத்தில் கொணர்ந்து இத்தலத்தில் வைத்தனர். மீட்டும் எடுக்க முயன்றபோது அக்குடமே லிங்காகாரமாக ஆகிப் பதிந்து விளங்குவதைக் கண்டனர். பிறகு அமுதம் வேண்டித் திருமாலைத் தலைவராகக் கொண்டு சிவபிரானைப் பூசித்தனர். திருமால் அருச்சனை புரிந்து வழிபடுகையில் அம்பிகையை வணங்க மறந்தமையின் சிவபிரான் திருவருள் கிடைக்கவில்லை. இப்பிழையை உணர்ந்து சிவாலயத்தில் தனியே எழுந்தருளியுள்ள அபிராமியைப் பூசித்துப் பின்னர்ச் சிவபிரானையும் பூசிக்கவே, எம்பெருமான் எழுந்தருளி அமுதம் கிடைக்கும்படி திருவருள் புரிந்தனர். அமுத கலசமே திருவுருவாக எழுந்த இறைவருக்கு அமிர்தகடேசர் என்ற திருநாமம் உண்டாயிற்று. கடம் அமைந்த தலமாதலின் இத்தலத்திற்குக் கடவூர் என்ற திருநாமம் அமைந்தது.

சிவஞானம் வேண்டிப் பூசித்த பிரமதேவருக்குச் சிவபிரான் மௌனவித்தை அளித்தருள அதிலிருந்து தோற்றிய வில்வ விருட்சமே இத்தலத்துக்குரிய விருட்சமாயிற்று. அதனால் வில்வாரணியம் என்ற திருநாமமும் இத்தலத்திற்கு உண்டு.

சிவபெருமான் வீரத்திருவிளையாடல் புரிந்த அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேய முனிவரைக்

கொல்லவந்த காலனை உதைத்து அடியாருக்கு மரண பயமின்மையை வெளிப்படுத்திய சிறப்புடையது இது. மூவர் தேவாரமும் பெற்றது.

"மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே"

என்பது முதலிய தேவாரத் திருப்பதிகங்களில் திருநாவுக்கரசர் இவ்வீர விளையாட்டைப் பாராட்டுகின்றார்.

இங்கே எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் கள்ளப் பிள்ளையார் என்பது; கள்ள வாரணப் பிள்ளையாரெனவும் வழங்கும். குங்கிலியக்கலய நாயனாரும், காரி நாயனாரும், உய்ய வந்த தேவரும் அவதரித்த தலமும் இதுவே.

இத்தலத்தின் ஆலயம் திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பாதுகாப்பில் உள்ள கோயில்களுள் ஒன்று.

இங்கே எழுந்தருளிய அபிராமியம்பிகை மிக்க சக்தி பெற்ற மூர்த்தி. தேவர்கள் அமுதம்பெற இத்தேவியின் திருவருளும் இன்றியமையாமல் இருந்தமையின் இந்நூலில் ஆசிரியர், "விண்மேவும் புலவருக்கு, விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே" (90) என்று பாராட்டுகின்றார். இத்தலத்தில் அடியார்களாகிய மனிதரும், அமுதம் வேண்டிய தேவரும், மார்க்கண்டேயர் முதலிய முனிவரும் வழிபட்டதை எண்ணியே, "மனிதருந் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி, குனிதருஞ் சேவடிக் கோமளமே" (4) என்று போற்றுகின்றனர். மாயா முனிவர் என்றது காலன்கைப் பாசத்திற் படாமல் சிரஞ்சீவியாக மரணமின்மை பெற்ற மார்க்கண்டேய முனிவரையென்றே கொள்ளலாம்.

கூற்றங் குமைத்த குரைகழற்காலையுடைய கடவூர் எம்பெருமானும் அபிராமியம்மையும் தம்முள் வேறல்ல ராகையால், காலன் பயமின்றிச் செய்யும் திருவருட் பெருக்கை அம்பிகையின் பாலுஞ் சார்த்தி இவ்வாசிரியர் கூறுவர். "இறைவரும் நீயும்.......வந்து, வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே" (18), "அந்தகன்கைப், பாசத்தில் அல்லற் படஇருந் தேனை.............ஆண்டுகொண்ட, நேசத்தை யென்சொல்லுகேன்!" (32), "அடுங் கால னெனைநடுங்க, அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென்பாய்" (33), "ஆவி வெங் கூற்றுக்கிட்ட, வரம்பை அடுத்து மறுகும்போது....... வந்தஞ்ச லென்பாய்" (49), "கதித்தகப்பு, வேலைவெங் கால னென் மேல்விடும் போது வெளிநில் கண்டாய்" (86.)

அபிராமி என்ற திருநாமத்தின் சொற்பொருள் பேரழகுடையவள் என்பது; "எம்பெரு மாட்டிதன் பேரழகே" (70), "அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி" (71) என்பன இப்பொருளை நினைந்து பாடியனவே.

ஆசிரியர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சோபான முறையில் அம்பிகையை வழிபட்டு அவ்வந் நிலையில் அம்பிகையின் திருவருளை நுகர்ந்தவர். ஆதலின் அருச்சித்துப் பூசிக்கும் உருவத் திருமேனியைக் கண்டு களித்தல் தொடங்கி, ஒளியே வெளியாகித் தன்னை மறந்து கருவி கரணங் கழன்று நிற்கும் ஆனந்தானுபவம் வரையிலுள்ள நிலைகளையெல்லாம் உணர்ந்து பாராட்டுகின்றார். அம்பிகையின் திருவுரு அழகையும் திருமேனிச் சோதியையும் தரிசித்து வாயாரப் பாடுகின்றார். பலபல இடங்களில் வெவ்வேறு அமிசங்களை நிறுவிப் பலபல கோலத்தில் நின்று அருள் புரிபவள் பராசக்தி. அதனை உணர்ந்து அப்பெருமாட்டியின் அதிசயமான வடிவுகளை யெல்லாம் புகழ்ந்து பேசுகிறார். அம்பிகையோடு பிரிவின்றி நின்ற சிவத்தையும் இணைத்துக்

காட்டுகின்றார். அம்பிகையின் அடியார்களது இயல்பையும் அருளால் அவர்கள் அடையும் பேற்றையும் பலபடியாக எடுத்துரைக்கின்றார். இவற்றைச் சிறிது கவனிப்போம் :

அபிராமியின் எழுதரிய திருமேனியின் ஒளி இருநிலமும் திசை நான்கும் பரந்து ஒளிர்வதைக் கண்டு இன்புற்றவர் ஆசிரியர். ஒளியும் மென்மையும் மணமும் உடைய அத்திரு மேனியைத் தரிசித்து ஒளியே என்றும், கோமளமே என்றும், பரிமள யாமளையே என்றும் துதித்துக் களிக்கின்றார். உதிக்கின்ற செங்கதிரும், சிந்துரமும், மாணிக்கமும், மாதுளம் போதும், குங்கும நீரும், கமலமும் போன்ற அம்பிகையின் திருமேனி சில சமயங்களில் மின்னாயிரம் ஒருங்கு வந்தாற் போலப் பளிச்சிடுகின்றது. இப்படிச் செந்நிறம் பெற்றதோடு அம்பிகை பச்சைப் பசுங்கொடியாகவும், பொன்னிறம் பூண்ட பிங்கலையாகவும், வெண்ணிற மேனியினளாகவும், நீலநிறமுள்ள காளியாகவும் சில சமயங்களில் தோற்றமளிக்கின்றாள்.

அடியார்களுக்குப் பற்றுக்கோடாகிய அம்மையின் திருவடி மலர்களை, "எமக்கென்று வைத்த சேமம்" என்று போற்றுகின்றார். அவை மூவர் துதிப்பன ; மறை பழகிச் சிவந்தன ; மறைக்கும் அந்தமாவன ; மாலயன் தேட மறை தேட வானவர் தேட நின்றன. அத்திருவடியைத் தாமரையென்றும் பல்லவமென்றும் ஆசிரியர் புகழ்கின்றார். தம்முடைய தலையில் அத்திருவடியை வைத்து ஆட்கொண்ட சீலத்தை இவர் பெருமிதத்தோடு பாராட்டுகிறார். "நின் திருவடியை வைப்பதற்குச் சிவபெருமான் திருமுடியையும் வேதங்களையும்விட அடியேன் முடை நாய்த்தலை சாலநன்றோ !" (60) என்று உருகுகிறார். அந்தச் சரணாரவிந்தங்கள் வேதமாகிய சிலம்பை அணிந்து விளங்குகின்றன.

மேல், அம்பிகையின் சின்னஞ்சிறிய மருங்கை வருணிக்கின்றார். துடியும் வஞ்சிக்கொடியும் மின்னலும் நுண்ணூலும் ஒத்து விளங்குவது அது. செய்யபட்டும் பன்மணிக் கோவையும் இடையிற் புனைந்த கோலத்தைக் காட்டுகிறார் ஆசிரியர். மால் வரையும் உயர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்தியையும், அருள்கூர் தருணம்புயம் போன்ற தனபாரங்களையும் அழகு படப் புனைகிறார். அரும்பு போலவும் செப்புப் போலவும் மேருமலைபோலவும் விளங்கிப் பொன்னிறம் பெற்ற நகில்கள் எந்தைதன் கருத்தன; அவர் கண்ணன; இறைவர் வலிய நெஞ்சை ஆட்டுவிக்கும் இயல்பு படைத்தன. அவற்றின்மேல் சண்பகமாலையும் கடம்பமலரலங்கலும் முத்துமாலையும் பூண்டு கோலமளிக்கிறாள் அம்பிகை. சிலபொழுது பாம்புமாலையை அணிந்த அகிமாலினியாகவும் இருக்கிறாள்.

அம்பிகையின் திருக்கரங்கள் நான்கும் கோகனதத்தைப் போன்ற அழகுடையன. அவற்றில் முறையே பாசமும் அங்குசமும் மலர்ப்பாணம் ஐந்தும் கரும்புவில்லும் ஏந்தியிருக்கின்றாள். வளையணிந்த திருக்கைகளில் சூலம் வைத்த கோலமும், வீணை ஏந்தும் திருக்கோலமும் உடையவளாகி விளங்கும் நிலையும் உண்டு. அம்பிகையின் திருத்தோள் மூங்கிலை வென்று விளங்குவது.

அவளுடைய வதனம்புயத்தில் சிந்துரத்திலகம் ஒளிவிடுகிறது. வாய் பவளக் கொடிபோல்வது. அதனிடையே நிலவும் தவளத்திருநகை மயிலிறகின் அடிக்குருத்தை நினைப்பிக்கின்றது. அத்திருவாயாகிய பவழத்தையும் முறுவலாகிய நிலவையும் துணைவிழியில் எழுதிப் பார்த்திருக்கும் இயல்புடையவர் ஆசிரியர்.

அம்பிகையின் இன்சொல் பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழி; பண்களிக்குங் குரல். அவள் திருச்

செவியில் தாளக்கொப்பும் வயிரக்குழையும் ஒளிர்கின்றன. இயற்கை மணம் வீசும் தேவியின் கன்னங்கரிய குழலில் கடம்ப மலரும் பிச்சிப் பூவும் அழகு பெறுகின்றன; மதியை அக்கூந்தலில் அணிந்திருக்கின்றாள்.

இத்தகைய திருமேனிக்கோலத்தைச் சமுதாய சோபை யோடு தியானிப்பதையன்றித் தனித்தனியே 'நயனம்புயமும், வதனம்புயமும், கராம்புயமும், சரணம்புயமும்' தஞ்சமாகத் தியானித்துக் 'கோகனதச் செங்கைக் கரும்பும் மலரும் எப் போதும் சிந்தை வைத்து' அபிராமியின் கோலமெல்லாம் குறித்து இன்புற்றவர் இவ்வாசிரியர். இந்தத் தியானம் வீறுபெறப்பெற இவர் எங்கும் அம்பிகையின் திருக்கோலத் தையே காணும் அநுபவத்தைப் பெற்றதை,

> "பார்க்குந் திசைதோறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
> டார்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்புமென் அல்லலெல்லாம்
> தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
> வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே"

என்ற அழகிய பாடலால் தெரிவிக்கிறார்.

திருவுருவத் தியானத்தோடு, திருநாமங்களைப் பலபல உருவத்தில் சொல்லி யின்புறும் இயல்புள்ளவர் இவர். "கற்றதுன் னாமம்" (12) என்று சொல்கிறார். அவை நான்மறைசேர் திருநாமங்கள் என்பர். அவற்றைச் சொல்லு வதில் இவருக்கு ஒரு தனியின்பம் முகிழ்க்கிறது. "தீவினை யுடைய அடியேன் தொடுத்த சொற்கள் பொருளற்றனவாயி லும் இடையிடையே நின் நாமங்களை விரவ வைத்திருக் கின்றேன். அவற்றைக் கூறுமளவிலாவது இவை தோத்திர மாகும்" (66) என்று இவர் உரைக்கின்றார். அம்பிகையை

வருணித்தும், இயல்புரைத்தும் சுருக்கமாகவும் பெருக்கமாகவும் இவர் எடுத்தாண்ட திருநாமங்கள் பல. அவை வருமாறு:

அகிமாலினி, அண்டமெல்லாம் பூத்தவள், அணங்கு, அணிக்கு அழகு, அணுகாதவர்க்குப் பிணி அதிசயமான வடிவுடையாள், அந்தரி, அபிராமவல்லி, அபிராமி, அம்பிகை, அம்புயாதனத்தம்பிகை, அம்மை, அமரர் விருந்து, அரு, அருமருந்து, அருட்கடல், அருள், அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அழியாத கன்னிகை, அனைத்தையும் நீங்கி நிற்பாள், ஆடகத் தாமரை ஆரணங்கு, ஆத்தாள், ஆரணங்கு, ஆனந்தவல்லி, இசைவடிவாய் நின்ற நாயகி, இமயத்துப் பிறந்தவள், இமயப் பிடி, இமவான் பெற்ற கோமளம், இறைவர் செம்பாகத்து இருந்தவள், இறைவி, உடையாள், உண்மை, உலகெங்குமாய் நின்றுள், உள்ளத்தே விளைந்த கள், எந்தை துணைவி, எம்பிராட்டி, எம்பெருமாட்டி, எழுதரிய மேனிமயில், ஏதமிலாள், ஒளி, ஒன்பது கோணங்களில் உறைபவள், ஒன்று, கடம்பு சாத்தும் குழல் அணங்கு, கமலத்திரு, கலாவயிரவி மண்டலி, கறைக்கண்டனுக்கு மூத்தவள், கன்னி, கனங்குழை, காளி, கியாதி உடையாள், கிளி, குணக்குன்று, குவளைக்கண்ணி, கோமள யாமளை, கோமளவல்லி, சகலகலா மயில், சங்கரனார் மனைமங்கலம், சங்கரி, சடையோன்புடையாள், சண்டி, சாம்பவி, சாமளை, சித்தி, சித்திதருந் தெய்வம், சிந்துரமேனியள், 'சிந்துரானன சுந்தரி, சிவகாமசுந்தரி, சிவம், சுந்தரவல்லி, சுந்தரி, சூலினி, செங்கண்மால் திருத்தங்கைச்சி, செங்கலச முலையாள், செம்பட்டுடையாள், செய்யாள், ஞாலமெலாம் பெற்ற நாயகி, தலைவி, தவள், தாய், திரிபுரசுந்தரி, திரிபுரை, திரு, தெருள், தேவரைப் பெற்ற அம்மை, தையல், நாயகி, நாராயணி, நான்முகி, நீலி, நுண்ணூல் இடையாள், பசும்பெண் கொடி, பஞ்சசாயகி, பஞ்சபாணி, பஞ்சமி, பணிமொழி, பயிரவி, பராசக்தி, பராபரை, பரிமளப் பச்சைக்கொடி, பலவுரு, பனிமொழி, பாசாங்குசை,

பாலினும் சொல் இனியாள், பிங்கலை, பிணிக்கு மருந்து, புத்தி, புரத்தை, புவனம் கரந்தவள், புவனம் காத்தவள், புவனம் பதினான்கையும் பூத்தவள், பூங்குயில், பூங்குழலாள், பூதங்களாகி விரிந்த அம்மை, பூரணாசல மங்கலை, பைங்கிளி, போகம், மங்கலை, மண்டலி, மணி, மணி புனைந்த அணி, மணியின் ஒளி, மதிச்செஞ்சடையாள், மருள், மலைமகள், மறையின் அரும்பொருள், மறையின் பரிமளம், மனோன்மணி, மாத்தவள், மாதங்கி, மாதுளம்பூ நிறத்தவள், மாலினி, மின்கொடி, முக்கண்ணி, முகுந்தற்கு இளையவள், முகிழ்நகை, முத்தி, முத்திக்கு வித்து, முதல்வி, முப்புரை, மூவருக்கும் அன்னை, மெல்லியல், யாமளவல்லி, யாமளை, வஞ்சகர் நெஞ்சடையாள், வல்லி, வாணுதல், வாணுதற்கண்ணி, வாராகி, விழுப்பொருள், வெளி, வெளியாள், வேதப்பரிபுரை முதலியன.

ஒன்றாகிப் பலவாகிய உருவம் உடையவளாகி இருந்தும் அம்பிகை அருவே உருவானவள். அகில சராசரங்களும் வானாதி பூதங்களுமாகி நின்றும் அவற்றினின்றும் நீங்கினவள். வேதத்தின் முதலும் இடையும் அந்தமும் பொருளுமாக இருந்தும் மறைதேட நின்றவள். பிணியாகி நலிவாளும் அவள்; அப்பிணிக்கு மருந்தாகி அருள் மலிவாளும் அப்பிராட்டியே. பொருளாகவும் அப்பொருள் முடிக்கும் போகமாகவும் அப்போகத்தைச் செய்யும் மாயையாகவும் மாயா மலத்தை நீக்கும் தெருளாகவும் இலங்குவாள். ஆனந்தமாய் அறிவாய் அமுதமாய் இன்பந் தருவாள். புத்தியும் முக்தியுமாவாள். உலகுக்கு மருந்தாகவும் அமரருக்கு விருந்தாகவும் உதவுவாள். இசைவடிவாய் நிற்பாள்; ஒளியாய் ஒளிர்வாள்; வெளியாய் விரிவாள். திங்களுக்குள்ளிருந்து தண்ணொளி வீசுவாள்; செஞ்சுடர்க்குள் ளிருந்து தேசு தருவாள். பிரமனிடம் கலைமகளாகவும், திருமாலிடம் திருமகளாகவும் இருப்பவர்கள் அவளுடைய சத்தியம்சங்களே யாவர். புவனம் பதினான்

கையும் பூத்துக் காத்துக் கரக்கும் அப்பராசக்தி பிறப்பும் இறப்பும் அற்றவள்.

இமவரையன் மகளாகத் திருவவதாரம் செய்தவள்; மகிடன் தலைமேல் நிற்பவள்; பிரம கபாலந் தரிப்பவள். முகுந்தற்கு இளையவள். கறைக் கண்டனுக்கு ஒரு வகையில் மூத்தவள்; ஒரு வகையில் அன்னையும் ஆவாள்.

எம்பெருமானுடன் ஒன்றியும், தனியே இணைந்தும் அம்மை செய்யும் ஆடல்கள் சொல்லத்தரமோ! சிவத்திற்கும் சக்திக்கும் பேதமில்லையென்பதை நன்கு உணர்ந்த இப்பெரியார் "சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும்" ஆக அம்பிகையை வழிபடுகிறார். சொல்லும் பொருளுமென நடராசப் பெருமான் அருகில் ஒன்றி இருப்பாள் தேவி; திருமணக்கோலத்தில் இறைவருடன் வீற்றிருப்பாள்; அவருடைய ஒரு கூற்றை மெய்யினின்றும் பறித்துக் குடி புகுவாள்; மன்மதனை எரித்த அப்பெருமானுடைய அழியா விரதத்தை அண்டமெல்லாம் பழிக்கும்படி அவர் பாகத்தைக் கொண்டு, அச்செயலால் அவர் மதியை வவ்வி, ஒரு மகனும் அவருக்கு உண்டாகும்படி செய்த வல்லபமுடையாள்; அப்பிராட்டியின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு இறைவர் பணிந்து அவளது சரணாரவிந்தத்தை முடிக்கண்ணியாகச் சூடுகின்றார்; அப்போது அவளுடைய கோபம் மிகாதிருக்கும்பொருட்டுத் தம் கரத்திலுள்ள அக் கினியையும் சிரத்திலுள்ள கங்கையையும் கரந்து விடுகிறார். இங்ஙனம் அருள்விளையாடல் புரியும் அவ்விருவரும் ஒருங்கே வந்து திருவருள் புரிதலை இவ்வாசிரியர் பல இடங்களில் சொல்கிறார்.

"புனிதரும் நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே" (4)

"உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்திங்
கெமையும் தமக்கன்பு செய்யவைத் தார்" (31)

“ புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநம் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்அடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே ” (41)

“ .........நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும்.” (89)

அபிராமியின் தொண்டர்கள் ஆகமபத்ததியை ஓர்ந்து மறை சொல்லிய வண்ணம் தொழுது வாழ்த்தும் இயல்புடையவர்கள் ; அவர்களுக்கு ஒரு தீங்கும் இல்லை ; அவர்களுக்குத் தனம், கல்வி, தளர்வறியா மனம், தெய்வ வடிவு, வஞ்சமில்லா இனம், இன்னும் நல்லன எவை உண்டோ அவை எல்லாம் அபிராமியின் கடைக்கண்கள் தரும் ; ரத கஜ துரக பதாதிகள், மகுடம், சிவிகை, கனகம், ஆரம் முதலிய சின்னங்களைப்பெற்ற அரச பதவியைப் பெறுவார்கள். அவர்கள் படையாத தனமே இல்லை. இந்திர பதவியும் பெற்று வானுலக இன்பம் அத்தனையும் அடைவர். பிறகு வீட்டையும் அடைவர்.

இறைவியின் திருவருளால் மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் தவம் முயன்று யமவாதனையினின்றும் நீங்குவார்கள் ; பிறவிவேரை அறுத்துவிடுவார்கள். அச்சிவஞானிகள் ‘ எமதெல்லாம் உனதே ’ என்று எல்லாவற்றையும் அம்பிகைக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டுத் தன்னந்தனியிருந்து விழிநீர் மல்கிப் புளகமரும்பித் ததும்பிய ஆனந்தமாகித் தேனில் விழுந்த வண்டுபோலத் தேவியின் திருவருள் விலாசப் பரவெளியில் அமுதுண்டு கிடப்பர். அவர்கள் ஏது செய்தாலும் அதுவே தவமாகிவிடும்.

இத்தகைய தொண்டர்கள் கூடிய அவையத்தைப் பகலிரவாக நண்ணியவர் அபிராமிபட்டர் ; அவர்களுடன் கூடி

முறை முறையே தேவியின் பரமாகம பத்ததியைப் பண்ணியவர். அவர்கள் பின்னே திரிந்து அவர்களைப் பேணுவதற்குப் பூர்வ ஜன்மங்களில் தவம் செய்திருக்கவேண்டும்; 'முன்னே தவங்கள் முயன்று கொண்டேன்' என்று இவர் பெருமிதம் அடைகிறார். அவ்வடியார் பெருமையை எண்ணாதவர்கள் நரகுக்கு உறவாகியவர்களென்று கருதி அவர்களை நண்ணாதவர் இவர். குடில்கள்தொறும் பலிக்கு உழலுகின்றவர்களைப் பார்க்கும்போதெல்லாம், 'ஐயோ! இவர்கள் அம்பிகையை மாத்திரைப்போதுகூட மனத்தில் நினையாதவர்கள் போலும்!' என்று இரங்குபவர். பழிக்கே சுழன்று வெம் பாவங்களே செய்து பாழ்நரகக் குழிக்கே அழுந்தும் கயவர் கூட்டத்தை விரும்பாதவர்.

வாக்கு, மனம், காயம் மூன்றினாலும் அம்பிகையைப் பக்திபண்ணி இன்புற்ற பெரியார் இவர். அம்பிகையின் திருக்கோலத்தையன்றி மற்றவற்றை நெஞ்சில் இருத்தாதவர். உருகி அம்பிகையின் பாதத்திலே மனத்தைச் செலுத்தியவர். பலிபெறும் துர்த்தேவதைகளைத் தாம் பூசிப்பதாகப் பிறர் கூறுவதைக் கேட்டவராதலின் தம் நிலையை இவர் ஒருபாட்டில் வெளிப்படுத்தியிருக்கிறார் :

"வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணேன் உனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணேன்" (64.)

'இறைவியின் புகழைப் பாடவும் நாமம்கற்கவும் பக்தி பண்ணவும் நான் என்ன புண்ணியம் செய்தேன்' என்று பூரிக்கின்றார். 'அம்பிகையின் சீறடி சென்னிவைக்க ஒரு பெரிய தவம் எங்களுக்குக் கிடைத்ததே; என்ன ஆச்சரியம்!' என்று வியக்கின்றார். 'கன்னியைக் காணும் அன்பு பூணுதற்கு.

எண்ணிய எண்ணம் முன்செய்த புண்ணியம் அன்றோ?" என்று உவகை பூக்கிறார்.

"அம்மையே, நான் நடுக்கடலுள் சென்று விழுந்தாலும் கரையேற்றுகை நின் திருவுள்ளம். நான் மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்று. உன்னையும் போற்றி, ஒருவர் தம்பால் பாமாலை கொண்டு சென்று பொய்யும் மெய்யும் இயம்பவைத் தாயே; இது நின் அருளுக்கு அடுக்குமா? பரமென்று உன்னை அடைந்துவிட்டேன்; ஆகையால் பக்தருக்குள் தரம் அன்று என்று தள்ளத்தகாது. என் ஆவி தளர்விலதாகிய கதியை அடையும் வண்ணம் கருதி யருளவேண்டும். அடியேன் இனிப் பிறவாமல் வந்து ஆண்டுகொள்வாயாக. அதன் பொருட்டு நான் நின்று ஏத்துகின்றேன். இனி யான் பிறந் தால் நின்குறையே அன்றி யார் குறை? காலன் நான் நடுங்கும்படி வந்து அழைக்கும்பொழுது நீ தரிசனம் தந்து அஞ்சலென்பா யாக!" என்று ஒருநிலையில் மனமுருகி வேண்டுகிறார் இத் தேவி உபாஸகர்.

தாம் அம்பிகையால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற செய் தியை மனமுருகி நினைக்கின்றார்:

"அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்" (30)

"ஆசைக் கடலில் அகப்பட் டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதமென்னும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்!" (32.)

தம்முடைய ஔவியத்தைத் தீர்த்து, பாசத்தொடரை அரித்து, நெஞ்சத்து அழுக்கையெல்லாம் அருட்புனலால் துடைத்து, ஆசையை அடங்கச்செய்து, வினையை ஓட்டி, பிறவியை உடைத்து, மறலி வருகின்ற வழியை மறிக்கச்

செய்த அம்மையின் திருவருட் சிறப்பை எண்ணி எண்ணி வியக்கின்றார். அத்திருவளே துணையாக இவர் அடைந்த ஆனந்தானுபவத்தை அங்கங்கே புலப்படுத்துகிறார். அம்பிகையின் தரிசனத்தால் விழியும் நெஞ்சும் களிநின்ற வெள்ளம் கரைகாணுமல் பெருகக் கருத்தினுள்ளே தெளிந்து நின்ற ஞானம் திகழ்கின்றதாம். மனத்தில் இருள் சிறிதும் இன்றி ஒளி வெளியாகி யிருக்கும் அருள் விலாசத்தைக் கண்டு "ஏதென்றறிகிலேன்!" என்று வேசாறி நிற்கிறார். அம்பிகையை உள்ளவண்ணங் கண்டு களித்ததை நினைந்து மகிழ்கிறார். "அகிலாண்டமும் நின், ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும், களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரை புரண்டு, வெளியாய் விடினெங்ங னேமறப் பேன்நின் விரகினையே" என்பதில் இவருடைய இன்பப் பெருக்கின் தலையளவு குறிப்பிக்கப்படுகிறது.

எல்லாம் கடந்து நின்ற அம்மை தமக்கு அருள்செய்து ஆனந்தானுபவத்தைப் பெறச்செய்தது தம் பக்குவத்தையும் மிஞ்சியதென்ற எண்ணம் இவருக்கு மீதூர்ந்து நிற்கின்றது. "பூதங்களாகி விரிந்த அம்மையே, நீ இரங்கத்தக்க எளியேன் அறிவெல்லைக்கு உட்பட்டது பெரிய அதிசயம்" என்று வியக்கின்றார். பக்குவமில்லாத காலத்தில் தம்மை ஆண்டுகொண்டதை நினைந்து, "எனக்கு வம்பே பழுத்த படியே" (22) என்று சொல்கிறார். "என் புன்மொழி நின்திருவடிக்கு உரிய தானது நகைப்பதற்குரியது" (26) என்கிறார். தம் பக்குவத்தை அம்பிகை நினையாமலே ஆண்டுகொண்டாள் என்று தெரிவிப்பாராகி, "நாயேனையுமிங் கொருபொரு ளாக நயந்து வந்து, நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய்" (61) என்று பாடுகிறார்.

இப்படியெல்லாம் எளிதிலே பெரிய இன்பங்களைக் கூட்டுவிக்கும் அபிராமியம்மையின் உபாஸனை யாவற்றிலும் சிறந்ததென்பார்; "அபிராமி சமயம் நன்றே" (94) என்று பாராட்டிப் பேசுவது காண்க. தாம் இன்பம் பெறுவதற்குக் காரணமான நெறியை இவர் உயர்த்தி வற்புறுத்திக் கூறுவது இயல்பே.

"கொள்ளேன் மனத்தில்நின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே அனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே அளியவென் கண்மணியே"

என்று வீறுபெறப் பேசவைத்த சமயம் இவர் சமயம்.

இந்நூலின்கண் தில்லை, சீகாழி, திருவெண்காடு, காஞ்சீபுரம், மதுரை என்னும் திருத்தலச் செய்திகள் வருகின்றன. சிவபிரான் தில்லையிலும் திருவெண்காட்டிலும் நடனம் செய்தருளியதும், அம்பிகை சீகாழியில் திருஞானசம்பந்தருக்குப் பால் அருத்தியதும், காஞ்சீபுரத்தில் சிவபெருமான் திருமேனி குழையத் தழுவியதும் இருநாழி நெல் கொண்டு அறம் வளர்த்ததும், மதுரையில் கடம்ப வனத்தில் எழுந்தருளியிருப்பதும் ஆகிய வரலாறுகள் இந்நூலில் சுட்டப்பெறுகின்றன. தேவார திருவாசகக் கருத்தும் சொல்லும் சிலசில இடங்களில் உள்ளன.

பரம்பரையாக வேதநெறியில் ஒழுகும் குடும்பத்திற் பிறந்த இவ்வாசிரியர் வேதத்திலும், ஆகமத்திலும், லலிதா ஸஹஸ்ரநாமம் முதலிய தேவீபரமான கிரந்தங்களிலும் உள்ள செய்திகளை அங்கங்கே எடுத்தாண்டிருக்கிறார்.

இந்நூல் நடை வடசொற்கள் இடையிடையே விரவிச் செம்பாகமாக அமைந்திருக்கின்றது. அம்பிகையின் திருநாமங்களை மிகுதியாகப் பொருத்தி ஆசிரியர் பாடுகிறார். எளிய நடை

யில் பெரும்பாலும் ஆற்றொழுக்கே அமைந்து இயலுகின்றன செய்யுட்கள். எதுகை நயம் பொருந்திய பாடல்கள் சில உண்டு:

"மின்கொடி மென்கடிக் குங்கும தோயம்" (1)

"முப்புரை செப்புரை செய்யும் புணர்முலை" (5)

"சுந்தரி யந்தரி" (5)

"வந்தரி சிந்துர வண்ணத்தினாள்" (8)

"வானவர் தானவ ரானவர்கள்" (14)

"அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசை" (31)

"வண்டு கிண்டி" (76)

"விருந்தாக வேலை மருந்தான தைநல்கும்" (90)

"புண்ணிய ரெண்ணிலர்." (97)

ஒரு செய்யுளில் மடக்கு அமைந்துள்ளது:

"**உடையாளை** ஒல்குசெம் பட்டுடை **யாளை** ஒளிமதிச்செஞ்
**சடையாளை** வஞ்சகர் நெஞ்சடை **யாளைத்** தயங்குநுண்ணூல்
**இடையாளை** எங்கள்பெம் மானிடை **யாளை**யிங் கென்னையினிப்
**படையாளை** யுங்களை யும்**ப**டை **யா**வண்ணம் பார்த்திருமே."

சின்னஞ்சிறிய, பென்னம்பெரிய, கன்னங்கரிய, தன்னந்தனி, தங்கைச்சி, ஆத்தாள் என்ற வழக்குச் சொற்கள் இந் நூலில் வந்துள்ளன.

அன்போடு படிப்பவர் நெஞ்சில் அபிராமியின் திவ்வியத் திருஉருவம் தோற்றும்படியும், மேலும்மேலும் படிப்பாருக்குப் பக்தி நலம் பழுக்கும்படியும் செய்வது இந்த நூல். அங்ஙனம்

செய்வதற்குரிய சொல்நடையும் பொருள் ஆற்றலும் இதில் நிரம்ப அமைந்து கிடக்கின்றன. உண்மையான ஞானம் பெற்று அதனால் வரும் ஆனந்தானுபவத்தை உடையவர்க் கன்றி இத்தகைய பொருட் சிறப்புடைய வாக்கு அமைதல் மிகவும் அருமை. அடிதோறும் ஆசிரியருடைய உயர்ந்த அநுபவநிலை கொப்புளித்துக் குமிழியிட்டு மணக்கின்றது. அந்த மணத்தை நுகரவைத்த ஆசிரியர் 'அபிராமி சமயத்'தை இதன் மூலமாக நமக்குக் காட்டுகிறார். நாம் உட்புகுந்து தெளிந்து பயன் பெறுவோமாக!

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# அபிராமி அந்தாதி

## காப்பு

### (கட்டளைக் கலித்துறை)

**தா**ரமர் கொன்றையுஞ் சண்பக மாலையுஞ் சாத்துந்தில்லை
ஊரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும்பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

(உரை) மாலையாகப் பொருந்திய கொன்றையையும் சண்பகமலர் மாலையையும் முறையே அணிந்தருளுகின்ற தில்லையெம்பெருமானுக்கும், அப்பெருமான் வாமபாகத்தில் உறைகின்ற உமாதேவியாருக்கும் திருக்குமரனே, கரிய நிறம் பொருந்திய திருமேனியுடைய கணபதியே, ஏழு உலகங்களையும் பெற்ற சிறப்புடைய அபிராமியம்மையின் விஷயமான அந்தாதி யென்னும் இப்பிரபந்தமானது எப்போதும் என் உள்ளத்துக் குள்ளே நிலைபெறும்படி திருவாய்மொழிந் தருளுவாயாக.

தார் - மார்பின் மாலை. கொன்றை சிவபெருமானுக்கும் சண்பகம் அம்பிகைக்கும் உரிய மாலைகள்; சாம்பேயகுஸுமப்ரியை என்பது அம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று. உலகேழும் பெற்றது: "புவியேழையும் பூத்தவளே" (12) என்பர் பின். ஊரருக்கும் உமைக்கும் மைந்தனே என்க. உமை: இங்கே, சிவகாமசுந்தரி; "சேரும் தலைவி சிவகாம சுந்தரி" (68) அந்தாதி யென்றது இங்கே அந்தாதிப் பிரபந்தத்துக்குரிய சொற்பொருள் வளத்தை. கணபதியின் திருநிறம் வெண்மையென்றும் சிவப்பென்றும் கூறுவதும் உண்டு. அந்தாதி நிற்கக் கட்டுரை என்க. கட்டுரைத்தல் - பொருந்தும்படி திருவாய்மலர்ந்தருளுதல், என்றது தம் உள்ளத்துள்ளே நின்று சொற்பொருள்களைத் தோற்றுவிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தபடி.

## நூல்

உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன் விழுத்துணையே.

(உரை) உதயமாகின்ற செங்கதிரவனும், நெற்றியில் அணியும் சிந்துரத் திலகமும், ஞானம் உடையவர்கள் நன்கு மதிக்கின்ற மாணிக்கமும், மாதுள மலரும், தாமரை மலரில் எழுந்தருளிய திருமகள் துதிசெய்கின்ற மின்னற் கொடியும், மெல்லிய வாசனையையுடைய குங்குமக் குழம்பும் ஆகிய பொருள்களைப் போன்றனவென்று நூல்கள் கூறுகின்ற திருமேனியையுடைய அபிராமியம்மை எனது மேன்மையான துணை ஆவாள்.

உதிக்கின்ற செங்கதிர் - பால சூரியன்; கண் கொள்ளும் வடிவினதாதலின் இதனை உவமை கூறினர். 'உத்யத்பானுஸஹஸ்ராபா' என்பது அம்பிகைக்குரிய ஆயிரந் திருநாமங்களுள் ஒன்று. "வந்துதித்த வெயிலா யிருக்கும் விசும்பில்" (99) என்பர் பின். உச்சித் திலகம்: "சிந்துர வண்ணப் பெண்ணே" (6), "சிந்துர வண்ணத்தினள்" (8), "சிந்துர மேனியள்" (43) என்று பின்னும் கூறுதல் காண்க.

உணர்வு - மணிநூல் ஆய்ந்த அறிவு ; மெய்ஞ்ஞானமெனலும் ஆம். மாணிக்கம் : "மணியே மணியின் ஒளியே" (24); "மாணிக்கவல்லி" (**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**, 1). மாதுளம்போது : "மாதுளம் பூநிறத் தாளை" (பயன்); "தாடிமீகுஸுமப்ரபா" (**லலிதா ஸஹஸ்ரநாமம்**, 560) மின்கொடி : "மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற, அன்னாள்" (55), "மின்போலு நின்றோற்றம்" (61.) விழுத்துணை - விழுப்பமாகிய துணை ; எல்லாவிடத்தும் எக்காலத்தும் துணையாக இருத்தலின் விழுத்துணை என்றார். க

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ் சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்பஞ் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே.

(**உரை**) எமக்கு உயிர்த்துணையும், யாம் தொழும் தெய்வமும், எம்மைப் பெற்ற அன்னையும், வேதமென்னும் மரத்தின் கிளையும், முடிவில் உள்ள கொழுந்தும், கீழே பதிந்த வேரும், குளிர்ச்சியையுடைய மலரம்புகளையும் கரும்பு வில்லையும் மெல்லிய பாசாங்குசத்தையும் திருக்கரத்தில் ஏந்திய திரிபுரசுந்தரியே ஆகும் உண்மையை யாம் அறிந்தோம்.

துணை முதலியவற்றை, எல்லா உயிருக்கும் துணையென்பது முதலாகக் கொள்ளுதலும் பொருந்தும். தொழும் தெய்வம் - வழிபடு கடவுள். கொழுந்து : "பழமறையின் குருந்தே வருக" (**மீனாட்சி**. வருகை. 10). பணை - வேதசாகைகள். கொழுந்தென்றது வேதாந்தமாகிய உபநிடதங்களை. வேர் என்றது வேதத்துக்கு மூலமாகிய பிரணவத்தை; வேதத்துக்கெல்லாம் உற்பத்தி ஸ்தானம் எனலுமாம்; "வேதஜனனி" (**லலிதா ஸஹஸ்ரநாமம்**, 338) என்பது அம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று. "அருமறைக்கு, முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்வி" (55) என்பர் பின். பாசாங்குசம், பூங்கணை, கருப்புச்சிலை : 85, பயன். உ

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்துகொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்

பிறிந்தேனின் னன்பர் பெருமையெண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே.

(உரை) அருட்செல்வ முடையாய், வேறு யாரும் அறியாத இரகசி யத்தை நான் அறிந்தேன் ; அங்ஙனம் அறிந்தமையால் அதுகொண்டு நின் திருவடியினிடத்தே அடைந்தேன் ; நின் அடியார்கள் பெருமையை எண் ணாத பாவம் மிக்க மனங்காரணமாகக் குப்புறவிழும் நரகலோகத்தின் தொடர்புடைய மனிதரை அஞ்சி விலகினேன்.

நின் திருவடிக்கண் அடைக்கலம் புகுதல் எல்லா நன்மைகளேயும் கூட்டுவிக்கும் என்ற உண்மையை அறிந்தேனென்பார், மறையை அறிந் தேன் என்றார். செறிதல் - புகலாகப் புகுதல் ; இடைவிடாது தியானித் தலுமாம். திரு : மஹாலக்ஷ்மி என்பது லலிதாம்பிகையின் திருநாமங் களுள் ஒன்று. பிறிந்தேன் : எதுகைபற்றி இடையின ரகரம் வல்லின மாயிற்று. கருமம் - இங்கே தீவினை. ௩

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடைமேல்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

(உரை) பூவுலக வாசிகளாகிய மனிதர்களும் பொன்னுலக வாண ராகிய தேவர்களும் இறவாத பெருமையையுடைய முனிவர்களும் வந்து தலை வணங்கும் செம்மையாகிய திருவடிகளும் மெல்லியல்பும் உடைய தேவியே, கொன்றைக் கண்ணியை அணிந்த நீண்ட சடாபாரத்தின் மேல் பனியை உண்டாக்குகின்ற சந்திரனேயும் பாம்பையும் கங்கையை யும் கொண்ட தூயவராகிய சிவபிரானும் நீயும் என் அறிவினிடத்தே எக்காலத்திலும் இணைந்து எழுந்தருள்வீர்களாக !

மாயா முனிவர் - தவத்தாலும் சித்திகளாலும் மரணம் ஒழிந்த முனிவர் ; நாரதர் முதலிய இருடிகள் ; தாபஸாராத்தியா என்பது அம்பி கையின் திருநாமங்களுள் ஒன்று. கோமளம் - மென்மை ; 33 குறிப்புப் பார்க்க. ௪

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேல்
திருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே.

**(உரை)** அடியேங்களுக்குத் திருவருள் புரிவதற்குப் பொருந்திய திரிபுரையும், செப்பை உவமையாகச் சொல்லும் இணைந்த தனங்களின் பாரத்தினால் தளர்வுற்ற வஞ்சிக்கொடியைப் போன்ற திருவிடையை யுடைய மனோன்மணியும், நீண்ட சடையையுடைய சிவபிரான் உண்ட விடத்தைத் தன் திருக்கரத்தால் கண்டமட்டமாக்கி அமுதமாக்கிய அம்பிகையும், தாமரை மலரின்மேல் அழகுபெற வீற்றிருந்தருளும் சுந்தரியும், அந்தரியும் ஆகிய அபிராமியம்மையின் திருவடி என் தலைமேலது. அதனை நான் வணங்குகின்றேன்.

முப்புரை - திரிபுரை. திரிபுரை என்பதற்குப் பலவாறு பொருள் கொள்வர். புரை - மூத்தவள்; மும்மூர்த்திகளுக்கும் மூத்தவளென்பர் ஒரு சாரார். திரிபுரார்ணவம் என்னும் நூல், 'பிங்கலை, இடைகலை, சுழுமுனை என்னும் மூன்று நாடிகளிலும் இருப்பவளாதலினாலும், மனம் புத்தி சித்தம் என்னும் மூன்றிலும் உறைபவளாதலினாலும் திரிபுரை யென்னும் திருநாமம் வந்தது' என்று கூறும். முத்தேவர், மும்மறை, முத்தீ, முச்சக்தி, மூன்று ஸ்வரம், மூவுலகு, மூங்கரம் முதலிய மூவகைப் பிரிவுகளுக்கெல்லாம் உரியவளாதலின் இப்பெயர் வந்ததென்று கௌடபாத சூத்திர உரை கூறும். சந்திரகண்டம், அக்கினி கண்டம், சூரியகண்டமென்னும் முப்பிரிவையுடைய சக்கரத்துக்குத் தலைவி யென்பது ஒரு பொருள். மனோன்மணி: லலிதாம்பிகையின் திரு நாமங்களுள் ஒன்று. மனத்தை ஞானநிலைக்கு எழுப்புபவள் என்பது பொருள். புருவ மத்திக்கு மேலே பிரமரந்திரத்திற்குக் கீழ் உள்ள இந்து முதலிய எண்வகை நிலைகளில் இறுதிநிலை உன்மனி அல்லது மனோன் மனியாம். இதன்கண் உறைதலின் தேவிக்கு இப்பெயர் வந்ததென்றும், பற்றற்ற மனம் இயங்குதலற்று நிற்கும் நிலை உன்மனியாதலின் அந் நிலையில் அருள்புரிதல் பற்றி இங்ஙனம் வழங்கப்பெறுவாளென்றும் கூறுவர்.

நஞ்சு அமுதாக்கிய அம்பிகை: "எவ்விடத்துந் தாமாகி யிருந்து வருக் கருந்தவரும், வெவ்விடத்தை யமுதாக்கும் விரைக்கொடியைப் பாடுவனே" (**மீனாட்சியம்மை குறம்**). அம்பிகை - தாய். அம்புயமேல் திருந்திய சுந்தரி - தாமரையின்மேல் எழுந்தருளின அபிராமி; பத்மாஸனா என்பது தேவியின் திருநாமங்களுள் ஒன்று. சுந்தரி, அபிராமி: ஒரு பொருளன. அந்தரி - பராகாச வடிவையுடையவள்; அந்தரம் - ஆகாசம்; பராகாசா என்பது அம்பிகையின் திருநாமம். சிதாகாசத்தில் உறைபவளெனலும் ஆம். 'தஹராகாசரூபிணீ' என்பது ஒரு திருநாமமாதலின் இங்கே தஹராகாச உருவினள் என்பதும் பொருந்தும். இதயத்துள்ளே உள்ளது தஹராகாசம்.

பாதம் இரண்டாயினும் ஒன்றுபோல வைத்துப் பேசியபடி; தொகுதி ஒருமை. ௫

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய துன்றிரு மந்திரஞ் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே.

**(உரை)** சிந்துரத்தின் செந்நிறம் வாய்ந்த திருமேனியையுடைய தேவி, என் சிரத்தின்மேல் முடிபோலத் திகழ்வது நின்பொலிவு பெற்ற திருவடியாகிய தாமரை மலர்; நெஞ்சத்துள் நிலைபெற்று இருப்பது உன் அழகிய மந்திரம்; நின்னையே தியானிக்கும் நின் அடியார்களுடன் கலந்து முறைப்படி அடுத்தடுத்து நான் பாராயணம் செய்வது உன்னுடைய மேலான ஆகமபத்ததியேயாகும்.

மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங்களாலும் வழிபடுவதைக் கூறுகின்றார். பொன் - பொலிவு. முறை முறை யென்ற பன்மை பலகாலும் பாராயணம் செய்தலை அறிவித்தது. பரம ஆகமபத்ததி - சாக்தாகம வழிவந்த நூல்கள். சதாசாரபத்ததி யென்பதுபோல நூல்கள் பத்ததி யென்ற பெயரோடு வழங்குதல் காண்க. ௬

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர்விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனும்

மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கி யென்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே.

(உரை) தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட பிரமதேவனும், சந்திரனைத் திருமுடியில் தரித்த நின் கணவராகிய சிவபெருமானும், திருமாலும் வழிபட்டு எந்நாளும் தோத்திரம் செய்யும் செம்மையாகிய திருவடியையுடையாய், சிந்துரத்திலகம் அணிந்த திருமுகத்தையுடைய பேரழகியே, தயிரில் கடைதற்காக அமைந்த மத்தைப்போலப் பல பிறவிகளிற் சுழன்று திரியும் அடியேனது உயிர், பிறப்பிறப்பாகிய தளர்ச்சி இல்லாததாகிய வீட்டு நிலையை அடையும்படி திருவுள்ளங் கொண்டருள்வாயாக.

"மத்துறு தண்டயி ரிற்புலன் றீக்கது வக்கலங்கி, வித்துரு வேனை விடுதிகண்டாய்" (திருவாசகம்) என்பது இங்கே ஒப்பிடற்குரியது. மூவரும் பணிதல்: "நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும், அயனும் பரவும் அபிராமவல்லி", "முதற்றேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே" .(74, 92.) சிந்துரானனம்: ஸிந்தூர திலகாஞ்சிதா (லலிதா. 636). எ

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னுண்மகி டன்றலைமேல்
அந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே.

(உரை) சுந்தரி, எந்தையாகிய சிவபெருமானுக்குரிய தேவி, என்னுடைய பாசமாகிய தளைகளையெல்லாம் அடியேன்பால் எழுந்தருளி வந்து அழிக்கும் சிந்துர நிறம் பொருந்தியவள், மகிஷாசுரனது சிரத்தின் மேல் நிற்கும் அந்தரி, நீல நிறத்தையுடையவள், என்றும் அழிவில்லாத கன்னிகை, பிரமதேவனது கபாலத்தைத் தாங்குகின்ற திருக்கரத்தை உடையவள் ஆகிய அபிராமியின் திருத்தாள்கள் என் உள்ளத்துள்ளே என்றும் எழுந்தருளியிருப்பனவாம்.

யான் புன்னெறிபற்றி ஒழுகா நிற்க என்பால் பேரருள் பூண்டு தானே வலியவந்து ஆண்டுகொண்டாள் என்பார், 'வந்து அரி சிந்தூர வண்ணத்தினுள்' என்று கூறினர். சிந்தூர வண்ணம் : 1, 6. மகிடன் தலைமேல் நின்ற கோலத்தில் அம்பிகை துர்க்கையென்றும் சாமுண்டி யென்றும் வழங்கப் பெறுவள் ; மகிஷாசுரமர்த்தனியென்னும் திருநாமம் காண்க ; "கொதியாது கொதித்தெறிந்த கோட்டெருமைத் தலையின் மிசை, மிதியாத சீறடி மிதித்தன போற்றுமென்ற" (**பழம் பாடல்.**) நீலி - காளி. அழியாத கன்னிகை - கன்னிப் பருவம் என்றும் அழியாதவ ளெனலும் ஆம். குமாரி என்ற திருநாமத்தை ஓர்க ; "கனிகை யுமை" (**திருப்புகழ்**), "அகிலாண்ட கோடி யீன்ற, அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூப மயிலே" (**தாயுமானவர் பாடல்.**) பரம சுபாலந் தரித்தவள் : "பலிகொள்கபாலி" (**திருப்புகழ்**) ; "சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரி" (**வராகி மாலை, 32.**) அ

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பும்
முருத்தன மூரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே.

(**உரை**) தாயே, எம் தந்தையாராகிய சிவபெருமானது திருவுள்ளத்தில் இருப்பனவும் திருவிழிகளில் உள்ளனவும், அழகுபெற்ற பொன் மலையாகிய மேருவைப்போலப் பருத்திருப்பனவும், அழுத திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்குப் பாலை வழங்கினவும் ஆகிய பெரிய திருவருள் மிகுந்த அழகிய திருத்தனபாரமும், அவற்றின்மேல் உள்ள முத்துமாலையும், சிவந்த திருக்கரத்திலுள்ள கருப்பு வில்லும் மலரம்புகளும், மயிலிறகின் அடிக்குருத்துப்போன்ற புன்னகையும், தேவியாகிய நின் பூரணத் திருக்கோலமும் என்முன் நின்று காட்சி யருளுக.

தனபாரம் கண்ணன : "தார்கொண்ட மதிமுடி யொருத்தன் திருக்கண்மலர் சாத்தக் கிளர்ந்து பொங்கித் - தவழுமிள வெயிலுமழ நிலவுமள வளவலாற் றண்ணென்று வெச்சென்று பொன், வார்கொண்

டளந்தமுலை மலைவல்லி" (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், 1.) ஊட்டாமல் கிண்ணத்திற் கறந்து அருத்தினமையின் நல்கின என்றார்.

ஆரம் - சகசிரதாரை என்னும் முத்துமாலை (தக்கயாகப்பரணி, 106, உரை.) முருந்து என்பது எதுகை நோக்கி முருத்தென வலித்தது. "அணிவது வெண்முத்து மாலை"; "முத்து வடங்கொண்ட கொங்கை", "பென்னம் பெரிய முலையுமுத் தாரமும்", "முலை மேன் முத்து மாலையுமே" (37, 42, 53, 85) என்பர் பின். கூ

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமரையின்
ஒன்று மரும்பொரு ளேயரு ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே.

(உரை) எழுதாமல் கேட்கப்படுகின்ற வேதத்திற் பொருந்தும் அரிய பொருளாயுள்ளாய், சிவபிரானது திருவருள் வடிவே, உமாதேவியே, அன்று இமாசலத்தில் அவதரித்தாய், அழியாத முத்தியின்பமாக உள்ளாய், அடியேன் நின்றபடியும் இருந்தபடியும் படுத்தபடியும் நடந்தபடியும் தியானம் செய்வது உன்னையே; என்றைக்கும் வழிபடுவது நின்றன் திருவடித் தாமரையையே.

"நின்று மிருந்துங் கிடந்தும் நினைமின்கள், என்றுஞ் சிவன்றாளிணை" என்பதை முதலடி நினைப்பிக்கின்றது. மறைப்பொருள்: "மறையாய் மறைப்பொருளாய்ப் பொருண்முடிவு தானாய்......இடம் பிரியா வெம்பிராட்டி" (திருவிளையாடல், 4 : 42.) அருளே: "அருளது சத்தி யாகு மரன்றனக்கு" (சிவஞானசித்தியார்); "தயா மூர்த்தி" (லலிதா. 581.) அன்றும்: உம், அசை நிலை. முத்தியானந்தம்: "முத்தியும்" (23) என்பர் பின்; "முக்திரூபிணி" (லலிதா. 737.) கo

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமுமாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்கும்

தானந்த மான சரணா ரவிந்தந் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே.

**(உரை)** ஆனந்த உருவமே தானாகி என் அறிவாகி நிரம்பிய அமுதம்போன்றவளாகி ஆகாசம் ஈறான பஞ்ச பூதங்களும் தன் வடிவாகப் பெற்ற தேவியினது, நான்கு வேதங்களுக்கும் முடிவாக நிற்கும் திருவடித் தாமரையானது, வெண்ணிறத்தையுடைய மயானத்தைத் தம்முடைய ஆடும் இடமாக உடைய எம்பெருமானாகிய சிவபிரானது திருமுடி மாலையாக உள்ளது.

ஆனந்தம் - ஆனந்த உருவம்; "பரமானந்தா" (**லலிதா. 252.**) அறிவித்தால் அறிவதே உயிர்த் தொழிலாதலின் அறிவாய் என்றார். அமுதமென்றது மரணமில்லாமையைக் குறித்துநின்று, நிலைபேறான உண்மையைப் புலப்படுத்தியது. எனவே சச்சிதானந்த உருவுடையாள் என்பதாயிற்று. வான் அந்தம் - பிருதுவி முதல் ஆகாசம் ஈறான; "உயிரொடு பூதமைந்து மொருமுத லாகிநின்ற உமை" (**திருப்புகழ்.**) எல்லாம் நீறுபட்ட இடமாதலின் மயானத்தைத் தவளநிறக் கான் என்றார்; திருவெண்காடு என்பதும் பொருந்தும். கண்ணி - தலையில் அணியும் அடையாள மாலை. "கர்ப்பூர வல்லிநின் பாதபத்மம், மதுமத் தொடுந் தம் முடிவைத்த வாமது ரேசரவர்" (**மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை,** 8); அம்பிகையின் ஊடல் தீர்க்கும் பொருட்டு இறைவன் தேவியை வணங்கியதைக் குறிப்பித்தவாறு. கக

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்துபத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்செய்த
புண்ணிய மேதென்னம் மேபுவி யேழையும் பூத்தவளே.

**(உரை)** என் தாயே, எழுலகங்களையும் பெற்ற தேவியே, அடியேன் கருதுவது உன் புகழ்; கற்பதும் உன்னுடைய நாமங்கள்; மனமுருகிப் பக்தி செய்வது உன் இரண்டு திருவடித்தாமரை மலர்களிலேதான்; பகலும் இரவுமாகப் பொருந்தியது உன்னை விரும்பிய மெய்யடியார்களது

கூட்டத்தில் ; இவ்வளவுக்கும் காரணமாக அடியேன் முன் பிறவிகளிற் செய்த புண்ணியச் செயல் யாது?

இத்தகைய செய்கைகள் முற்பிறப்பிற் புண்ணியஞ் செய்தார்க்கே வாய்ப்பனவாதலின் இங்ஙனம் வினவினர் ; "தவமும் தவமுடையார்க் காகும்" (குறள்) என்பதை நினைக்க. அவையமென்றது திருக்கூட்டத்தை. முக்கரணத்தாலும் செய்யும் வழிபாட்டை முன்னர்க் கூறினர்.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே.

(உரை) உலகம் பதினான்கையும் திருவருளால் ஈன்றோய், அவ்வாறு அருள் கொண்டு ஈன்றதுபோலவே அவற்றைப் பாதுகாத்தோய், பின்னர் அவற்றைச் சங்காரம் செய்வாய், விடத்தையுடைய நீலகண்டப்பெருமானுக்கு முன் பிறந்தோய், மூப்பை அடையாத திருமாலுக்குத் தங்கையே, பெரிய தவத்தையுடையவளே, அடியேன் உன்னையே தெய்வமாக வழிபடுவதன்றி வேறு ஒரு தெய்வத்தை வழிபடுவது ஆகுமா?

ஆக்கல் முதலிய முத்தொழிலுக்கும் மூலகாரணமா யிருத்தல்பற்றி பூத்தவளே, காத்தவளே, கரந்தவளே என்றார். "ஈரேழ் புவனமும் பூத்தவுந்திக் கொங்கிவர் பூங்குழலாள்" (75) என்பர் பின். பூத்தவண்ணம் என்ற உவமை அருள் பெருகிப் பூத்தவாறே அருள் பெருகிக் காத்தாய் என்பதைப் புலப்படுத்தியது (பயன்). பிரமன் முதலிய மூவரிடத்தும் இருந்து முத்தொழிலையும் இயற்றுபவள் அம்பிகை யென்றவாறு ; லலிதாம்பிகையின் திருநாமங்களாகிய ஸ்ருஷ்டி கர்த்ரீ, ப்ரஹ்மரூபா, கோப்த்ரீ, கோவிந்தரூபிணீ, ஸம்ஹாரிணீ, ருத்ரரூபா, த்ரிமூர்த்தி என்பவற்றைக் காண்க. சத்திதத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவம் தோன்றுதலின் மூத்தவள் என்றார். தவம்புரிபவள், . தவள் (44) ; சாரியை வேண்டிய வழி இல்லையாயிற்று. வந்திப்பதே : ஏகாரம் வினா. கங

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் றண்ணளியே.

(உரை) எம் தலைவியாகிய அபிராமியே, உன்னை வழிபடுவோர்கள் தேவர்களும் அசுரர்களும்; ஆகிய இருவகையினருமாவார். நின்னைத் தியானம் செய்பவர்கள் நல்ல பிரமதேவரும் திருமாலும்; தம் உள்ளத்துள்ளே அன்பினுற் கட்டி வைப்பவர் மேலான ஆனந்த உருவினராகிய சிவபெருமான்; ஆயினும் உன் குளிர்ந்த திருவருள் நின்னைத் தரிசிப்பவர்களுக்கும் எளிதாக இருக்கின்றது.

இத்துணை அரிய பொருளாக இருந்தும் இவ்வுலகத்தில் நின் திருவுருவைக் கோயில்களில் தரிசிப்பவர்களுக்கு நின் தண்ணளி எளிதாயிருந்தவாறு வியத்தற்குரியதென்றவாறு. சந்தித்தல் - தரிசித்தல்; "மயில் வாகனனைச் சந்திக்கிலேன்" (**கந்தரலங்காரம்.**) மூவரும் போற்றுதல் : 26. கசா

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக் குஞ்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் குஞ்செல் வமுமழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் குஞ்சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே.

(உரை) பண்ணையொத்த இனிய மொழிகளைப் பேசும் பரிமளத் திருமேனியையுடைய யாமளையாகிய பச்சைக் கிளியே, உன்னுடைய திருவருளைப் பெற வேண்டுமென்று முற்பிறப்புக்களில் பலகோடி வகையான தவங்களைப் புரிந்த அன்பர்கள், இவ்வுலகத்தைப் பாதுகாக்கும் அரசச் செல்வம் ஒன்றைத்தானு பெறுவார்கள்? யாவரும் மதிக்கின்ற தேவர்களுக்குரிய வானுலகத்தை ஆளும் செல்வத்தையும் என்றும் அழியாத மோக்ஷமாகிய வீட்டையுமன்றோ பெறுவார்கள்?

இம்மை மறுமை வீடு என்னும் மூன்று பயனும் பெறுவர் என்றபடி: "அறந்தழுவும் நெறிநின்றோர்க் கிம்போகம் வீடளிக்கும் அம்மை" (**திருவிளையாடல்.** 4 : 20).

இறைவியின் தண்ணளிக்கென்று தவஞ் செய்தாலும் அத்தவம் இப்பயன்களையும் கூட்டுவிக்கும். தண்ணளி விளையுமாறு இப்படி யாயிற்று. மதி வானவர் விண் - யாவரும் போகத்திற் சிறந்ததென்று மதிக்கும் தேவலோகம். அழியா முத்தி யென்றமையின் ஏனயவை இரண்டும் அழியுமென்பது குறிப்பாற் புலப்பட்டது. பண் அளிக்கும்: அளிக்கும், உவமவாசகம். தன் இனிமையால் பண்களைப் பாதுகாக்கும் எனலுமாம். பரிமளம்: 28, 48; "திவ்யகந்தாட்யா" (லலிதா. 631.) யாமளை - சியாமள நிறத்தை உடையவள்; அஃது ஒருவகைப் பச்சை நிறம்.

கரு

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே யொளிரு மொளிக்கிட மேயெண்ணி லொன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்க ளாகி விரிந்தவம்மே
அளியே னறிவள விற்கள வான ததிசயமே.

**(உரை)** கிளி போன்ற திருமேனியையுடைய தேவி, உறவின ராகிய அன்பர்கள் மனத்தே நிலைபெற்று ஒரு காலக்கு ஒருகால் விளங்கித் தோன்றும் ஞான ஒளியே, விளங்குகின்ற ஒளிக்கெல்லாம் ஆதாரப் பொருளே, எண்ணிப் பார்க்கும்போது எந்தத் தத்துவமும் ஆகாமல் எல்லாம் கடந்து நின்ற பரவெளியே, ஆகாசமும் முதலிய ஐம்பெரும்பூதங்களுமாகி விரிந்த தாயே, இத்துணைப் பெரிய பொருளாகிய நீ இரங்கத்தக்க அடியேனது சிற்றறிவின் எல்லைக்கு உட்பட்டது வியப்புத் தருவதாகும்.

கிளர்தல் - மேன்மேலும் எழுதல். ஒளிக்கு இடம் - சந்திர சூரி யாக்கினிகளாகிய ஒளிப் பொருள்களுக்கெல்லாம் மூல காரணம். வெளியே: 'பராகாசா' என்னும் லலிதா தேவியின் திருநாமத்தை நினைக்க. விரியும்பொழுது ஆகாசம், தீ என்னும் முறைப்படி விரிதலின் வெளிமுதற் பூதங்கள் என வெளியை முன்வைத்தார். அடங்கும் முறையில் ஆகாசம் இறுதியில் நிற்கும்; "வானந்த மான வடிவுடையாள்" (11) என்று முன்னே கூறியது காண்க.

கசு

அதிசய மான வடிவுடை யாளர விந்தமெல்லாம்
துதிசய வானன சுந்தர வல்லி துணையிரதி
பதிசய மான தபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே.

(உரை) வியப்பைத் தரும் திருவுருவத்தையுடையவள், தாமரை மலர்கள் யாவும் தம்மினும் உயர்ந்த அழகுடையதென்று துதிப்பதற்குக் காரணமாக அவற்றை வென்று பெற்ற வெற்றியையுடைய திரு முகத்தைக் கொண்ட அழகிய கொடிபோல்பவள், தனக்குத் துணையாகிய இரதிக்கு நாயகனுகிய மன்மதன் பிற இடங்களிற் பெற்ற வெற்றி யெல்லாம் தம்முன் இழந்து தோல்வியாகும்படி முற்காலத்தில் நெற்றிக் கண்ணைத் திறந்து நோக்கிய சிவபிரானது புத்தியை வெற்றிக்கொள்ள வல்லவோ அவரது இடத்திருப்பாகத்தைக் கவர்ந்துகொண்டது?

இரதிபதிசயமானது அபசயமாக. மன்மதனை எரித்த கோபத்தை யுடைய திருவுள்ளத்தைக் குழைத்து வெல்வதை மதிசயமாக என்றார்.கள

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை யாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும்போது வெளிநிற்கவே.

(உரை) தேவி, உன்னால் கொள்ளப்பட்ட வாமபாகத்தையுடைய சிவபிரானும் நீயும் இணைந்து மகிழ்ந்து ஒன்றியிருக்கும் அவசரமாகிய திருக்கோலமும், உங்கள் திருமணக்கோலமும் என் உள்ளத்துள்ளே இருந்த ஆணவத்தைப் போக்கி என்னைத் தடுத்தாட்கொண்ட பொலிவு பெற்ற திருவடிகளுமாக உருவெடுத்து வந்து வெம்மை மிக்க கூற்று வன் உயிரைக்கொள்ளும் பொருட்டு என்மேல் எதிர்த்து வரும்போது தரிசனந் தந்து நின்றருள்வீர்களாக.

முதலிற் கூறியது அர்த்தநாரீசுவரத் திருக்கோலம்; பின்னது கல் யாண சுந்தரமூர்த்தம். அவ்வியம் - ஆணவம்; "அகந்தைக் கிழங்கை யகழ்ந்தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற் கேற்றும் விளக்கே" (**மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்**). மேல்வரும்போ தென்றது மரண

காலத்தை. கூற்றுவனைக் குமைத்த திருத்தலமாதலின் யம பயத்தைத் தீர்க்க வேண்டுகிறார். கஅ

வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும்
களிநின்ற வெள்ளங் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்க ளொன்பது மேவி யுறைபவளே.

(உரை) தேசு நிறைந்து நிற்கும் நவகோணத்தைப் பொருந்தி விரும்பித் தங்கும் அபிராமியே, வெளிப்படையாக அடியேனும் காணும்படி நின்ற நின்றன் திவ்வியத் திருமேனியைப் புறத்தே கண்டு கண்களிலும், அகத்தே கண்டு நெஞ்சத்திலும் மகிழ்ச்சி நிலை பெற்றதனால் உண்டான இன்ப வெள்ளத்துக்குக் கரை காண முடியவில்லை; அடியேனது உள்ளத்துள்ளே, தெளிந்து நின்ற மெய்ஞ்ஞானம் விளங்குகின்றது; இவ்வளவு பேரருளைச் செய்தற்குக் காரணம் எத்தகைய திருவுள்ளக் குறிப்போ?

பார்த்தல் - முகக்கண்ணாலும் அகக்கண்ணாலும் பார்த்தல். முகக் கண்ணால் பார்ப்பது இறைவியின் படிமத்தை. திருமேனி - விக்கிரகம், கரை - எல்லை; முடிவுமாம். கோணங்கள் ஒன்பது: தேவிக்குரிய நவ கோணங்கள்; "வீற்றிருப்பாணவ கோணத்திலே" (வாராகிமாலை, 31.)

உறைகின்ற நின்றிருக் கோயினின் கேள்வ ரொருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்னடி யோமுடி யோவமுத
நிறைகின்ற வெண்டிங்க ளோகஞ்சமோவென்ற னெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே.

(உரை) அருளால் நிறைவு பெற்ற நிச்சலையாகிய நித்தியமங்கலையே, நீ வாசஞ்செய்கின்ற ஆலயம் நின் பதியாகிய பரமசிவத்தின் ஒரு பக்கமோ, அல்லது நின் புகழை எப்பொழுதும் சொல்கின்ற நான்கு வேதங்களின் மூலமோ, அன்றி அவற்றின் முடியாகிய உபநிடதங்களோ, அமுதம் நிறைந்திருக்கும் வெள்ளிய சந்திரனோ, வெண்டாமரையோ, அடியே

னுடைய உள்ளமோ, தன்பால் வீழும் பொருள்களெல்லாம் மறைவ தற்குக் காரணமான கடலோ ? யாதாகும் ?

ஒரு பக்கம் : " ஒரு பக்கமாய் பரம்பரன், தேவி " (**தக்கயாகப் பரணி**, 245.) நான்மறையின் அடிமுடி : " சுருதிகளின் கொழுந்தும் பதிகொண்ட வேரும் " (2) சந்திரன் தேவி வீற்றிருக்கும் இடங்களுள் ஒன்று ; " மதிமண்டலத் தமுதமயமாயம்மை தோற்றுகின்றதும் " (**மீனாட்சி:** ஊசல், 2) ' சந்த்ரமண்டலமத்யகா ' என்பது தேவியின் திரு நாமங்களுள் ஒன்று. (34, 47) வெண்மையைக் கஞ்சத்திற்கும் கூட்டுக. வாரிதி - பாற்கடல் (35) ; அம்பிகையே கலைமகளாகவும் திருமகளாக வும் விளங்குபவ ளென்றபடி. அசலமங்கலை - பார்வதியெனலுமாம்.

மங்கலை செங்கல சம்முலை யாண்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயி லாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாளுடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே.

(**உரை**) நித்திய மங்கலையாகிய அபிராமி தேவி, சிவந்த கலசத்தைப் போன்ற தனபாரங்களையுடையவள் மலைமகள் ; நிறம்பெற்ற சங்காலாகிய வளைகள் அசைகின்ற சிவந்த திருக்கரங்களையுடைய, எல்லாக் கலைக்கும் தலைவியாகி மயில்போன்றவள் ; பாய்கின்ற கங்கையின் மேலெழும் அலை கள் அடக்கித் தங்குதற்குரிய புரிந்த சடையையுடைய சிவபிரானது வாம பக்கத்தை ஆட்கொண்டவள் ; பொன்னிறம் படைத்த பிங்கலை ; நீலநிறம் படைத்த காளி ; செந்நிறம் பெற்ற லலிதாம்பிகை, வெண் ணிறம் பெற்ற வித்யாதேவி ; பச்சைநிறம் பெற்ற உமாதேவி.

மங்கலை முதல் ஆளுடையாள் வரையுள்ள இயல்பினளே பிங்கலை முதலியவளாக உள்ளாள் என்று முடிக்க.

மங்கலை - என்றும் சுமங்கலியாக இருப்பவள் ; " சங்கரனார் மனை மங்கலமாம், அவளே " (44) என்பர் பின் ; " மழுவார்திரு நெடுமங்கல மகளே " (**தக்க.** 321) ; " சுமங்கலி" (**லலிதா**, 967.) செங்கலசம் முலை யாள் : விரித்தல் விகாரம், வருணச்சங்கு - வருணனாலே அளிக்கப்பெற்ற சங்கு எனலும் ஆம். எல்லாக் கலைக்கும் தலைவியாதலின் (சகலகலா

மயில்' என்றார். "சதுஷ்ஷஷ்டி கலாமயீ", "கலாவதீ" (லலிதா. 236, 327) என்பன அம்பிகையின் திருநாமங்கள். கலா என்பது மயிற் கலாபத்துக்கு ஒரு பெயராதலின் அதனோடு சார்த்திச் சகலகலாமயி லென்று உருவகம் செய்தது ஒரு நயம் (96); "கலாமயிற் கூத்தயர்" (**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**) என்ற வழக்கை ஓர்க. 'விண்ணுக் கடங்காமல் வெற்புக்கடங்காமல் மண்ணுக்கடங்காமல்' வந்தமையால், 'தாவுகங்கை பொங்கலை' என்றார். புரி - முறுக்கு. சடையோன் புடையாள், உடையாள் எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம்.

அம்பிகை பஞ்சவர்ணங்களையும் உடையவளென்று ஈற்றடியிற் கூறினர். பிங்கலை: ஸ்வாதிஷ்டானத்தில் ஆறிதழ்த் தாமரையில் அமர்ந்திருக்கும் காகினி என்னும் அம்பிகையின் திருக்கோலத் திருமேனி பொன்னிறமுடையது; "பீதவர்ணா" (லலிதா. 507); "ஆயி சுந்தரி நீலி பிங்கலை", "குமாரி பிங்கலை" (**திருப்புகழ்.**)

நீலி: 8; மூலாதார சக்கரத்தில் ஐந்து முகத்தோடு நான்கிதழ்த்தாமரையில் சாகினி என்ற திருநாமத்தோடும் கரிய நிறத்தோடும் எழுந்தருளி யிருக்கும் அம்பிகையுமாம்.

செய்யாள்: திருமகளாக உள்ளவள் எனலும் ஆம்; டாகினி, லாகினி என்னும் திருநாமங்களோடு உள்ள அம்பிகையும் ஆம்.

வெளியாள்: கலைமகளாக உள்ளவள் என்பதும் பொருந்தும்; ஆக்ஞை என்னும் ஆதாரத்தில் ஈரிதழ்த் தாமரையில் ஆறுமுகத்தோடும் ஹாகினி என்னும் பெயரோடும் எழுந்தருளியிருக்கும் அம்பிகை வெண்ணிறமுடையவளென்பர்; "சுக்லவர்ணா" (லலிதா. 522).

பசும் பெண் கொடி: அநாகதத்திலுள்ள ராகினியுமாம். உக

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்குவம் பேபழுத்த
படியே மறையின் பரிமள மேபனி மாலிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றவம்மே
அடியே னிறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டுகொள்ளே.

(உரை) இளைய வஞ்சிக்கொடி போன்றாய், பூங்கொம்பை ஒத்தவளே, எனக்குக் காலமல்லாத காலத்திலே பழுத்த திருவுருவே, வேத

மாகிய மலரின் மணம்போன்றாய், குளிர்ச்சியையுடைய பெரிய இமாசலத்தில் விளையாடும் பெண் யானையே, பிரமன் முதலிய தேவர்களைப் பெற்ற தாயே, அடியேன் இவ்வுலகத்தில் இறந்த பின்னர் மீட்டும் பிறவாமல் இருக்கும்படி அடியேன்பால் எழுந்தருளி வந்து அடியேனை ஆண்டருள் செய்வாயாக.

காலமல்லாத காலமென்றது தம் பக்குவமின்மையை உணர்த்திய படி; "வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு" (**திருவாசகம்.**) பழுத்தபடியே - கனிந்த பழத்தின் உருவமே எனலும் ஆம்; படி - உருவம். மறையினாற் பெறும் பயன் அம்பிகையை உணர்வதாதலின் அதன் பரிமளம் என்றார். பனிமாலிமயப்பிடியே: "வளர்சிமய இமயப் பொருப்பில் விளையாடும் இளமென் பிடியே" (**மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்.**) பிரமன் முதலாய தேவரென்றது பிரமன், திருமால், இந்திரன் முதலியோர்களை; "பிரமற்கு மம்மனை" (**தக்கயாகப் பரணி, 77**) என்பதையும், 'பிரமற்கும் அம்மனை என்ற உம்மையால் விட்டுணு புரந்தராதிகட்கும் தாயாதல் முடிந்தது' என்ற அதன் உரையையும் காண்க; "பிரமனைப் பண்டு பெற்ற பெருந்திரு" (**தக்க. 752.**) பிறந்துவிட்டமையால் இறத்தல் நிச்சயம்; ஆதலின் இம்முறை இறந்தால் மீட்டும் பிறவாமல் இருக்க வேண்டுமென்ற கருத்தால், 'இறந்து இனி இங்குப் பிறவாமல்' என்றார். உஉ

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக் கும்புறம் பேயுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்குங் களியே யளியவென் கண்மணியே.

(**உரை**) பரந்த மூன்று உலகத்துக்குள்ளும் உள்ள பொருளே, ஆயினும் எல்லாப் பொருளுக்கும் புறம்பே உள்ளாய், அடியார்கள் உள்ளத்தே முற்றி விளைந்த இன்பமாகிய கள்ளே, அதனால் பிறவற்றை மறந்து ஆனந்த வெறிகொண்டு மகிழும் மகிழ்ச்சியே, இரங்கத்தக்க என் கண்ணுள் மணிபோன்றாய், அடியேன் என் உள்ளத்தில் தியானம் செய்யுங்கால் நின் திருக்கோலமல்லாத வேறொரு தெய்வத்தின் உருவத்தைச்

சிந்தியேன் ; நின்னுடைய அன்பர்களுடைய கூட்டத்தைப் பிரியேன் ; பரசமயங்களை விரும்பேன்.

உள்ளே, புறம்பே என்பன உள்ளும் புறம்பும் உள்ள பொருளே யென்னும் கருத்தையுடைய இடவாகு பெயர்கள். உள்ளத்தே விளைந்த கள்ளே, களிக்கும் களியே : " உருகியுருகி நெக்குநெக்குள் உடைந்து கசிந்திட்டசும்பூறும் உழுவலன்பிற் பழவடியார் உள்ளத் தடத்தில் ஊற் றெடுத்துப், பெருகுபரமா னந்தவெள்ளப் பெருக்கே", "விழித்துறங் குந் தொண்டர் உழுவலன் பென்புருகநெக், கள்ளூற வுள்ளே கசிந்தூறு பைந்தேறல்" (**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.**) இச்செய்யுளோடு, "கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும், நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும், எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா, உள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங் கள் உத்தமனே" (**திருவாசகம்**) என்னும் மணிவாசகம் ஒப்பு நோக்கற் குரியது.

உரு

மணியே மணியி னொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.

(**உரை**) மாணிக்கம் போன்றாய், அம்மாணிக்க மணியின்கண் உள்ள பிரகாசம் போன்றாய், விளங்குகின்ற மாணிக்கங்களால் அழகு பெறச் செய்யப்பெற்ற ஆபரணம் போன்றாய், நின் திருமேனியின்கண் அணியப்படுகின்ற மணிகளுக்கு அழகாயிருப்பாய், நின்னை அணுகாமல் வீணே பொழுது போக்குபவர்களுக்கு நோய் போன்றாய், நின்னை அணுகிய அடியவர்களது பிறவி நோய்க்கு மருந்து போன்றாய், தேவர் களுக்குப் பெரிய விருந்து போன்றாய், அடியேன் நின்னுடைய தாமரை போன்ற திருவடிகளை வணங்கிய பின்னர் வேறு எவரையும் பணியேன்.

அம்பிகை மாணிக்க நிறமுடையவளாதலின் மணியே என்றார். சிவபெருமானிடத்தினின்றும் வேறாகாத அருளே தன் உருவமாக நிற்ற லின் மணியின் ஒளியே என்றார். பிணிக்கு மருந்து : "வெம்பாசம்,

மருவிய பிணிகெட மலைதரு, மருமை மருந்தே", "பிறவிப் பெரும் பிணிக்கோர் மருந்தே" (**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**); 'ஸர்வ வியாதிப்ரசமனீ' (லலிதா, 551.) கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாதலின் விருந்தே என்றார். ஒருகாலைக்கு ஒருகால் புதிய அழகு பூத்துத் தோன்றுதலின் அங்ஙனம் கூறினார் எனலும் ஆம்; விருந்து-புதுமை. உச

பின்னே திரிந்துன் னடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கண் முயன்றுகொண் டேன்முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே.

(**உரை**) தலைமை பெற்ற மூன்று மூர்த்திகளுக்கும் தாயே, உலகிலுள்ள உயிர்கள் பிறவிப்பிணியினின்றும் நீங்க அபிராமி யென்னும் நாமத்தோடு எழுந்தருளியிருக்கும் அரிய மருந்தே, நின் அடியார்களின் பின்னே அவரை வழிபட்டு அவருடன் திரிந்து அவரை உபசரித்துப் பிறவிப் பிணியை அறுக்கும் பொருட்டு உபாயமாகிய தவங்களை முற்பிறப்பிலே செய்துவைத்தேன்; உன்னை என்றும் மறவாமல் நிலைபெற்றுத் துதி செய்வேன்; இனி எனக்கு உளதாம் குறை யாது?

முதல் மூவருக்கும் அன்னை: 22; "மும்முதற்கும் வித்தே" (**மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.**) மருந்து: "பிணிக்கு மருந்தே" (25) என்றார் முன்னும். உரு

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்தும்
காத்து மழித்துந் திரிபவ ராங்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமண நாறுநின் றாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறிய வாறு நகையுடைத்தே.

(**உரை**) கடம்பமலரை அணிகின்ற கூந்தலையுடைய தேவி, நின்னைத் துதிக்கும் அடியவர்களோ, எழு உலகங்களையும் படைத்தும் பாதுகாத்தும் சங்காரம் செய்தும் தம் தொழிலை நடத்தித் திரிகின்ற மும்மூர்த்திகளாவர்; அங்ஙனம் இருப்பவும் நின்னுடைய மணம் பொருந்திய இரண்டு திருவடிகளுக்கு ஒன்றுக்கும் பற்றாத அடியேனுடைய

நாவில் தங்கிய பொருளற்ற மொழிகளும் துதிகளாக ஏற்றுக்கொள்ளப் பெற்று, ஏற்றம் பெற்றது நகைத்தற்குரிய செயலாகும்.

மும்மூர்த்திகள் புகழும் புகழ்ச்சி நிற்கவும் என் புன்மொழி ஏற்றம் பெற்றதென்றதொரு குறிப்பும் தோற்றியது. மூவரும் புகழ்தல்: 14. அம்பிகைக்குக் கடம்பமலர் உவப்புடையது; "தாமங் கடம்பு" என்பர் பின் (73); "கதம்ப மஞ்சரீ க்லுப்தகர்ணபூரமனோஹரா" (லலிதா, 21.) புன்மொழி - பொலிவற்ற சொற்கள்; பொருட் பொலிவும் சொற் பொலிவும் இல்லாதன. உசு

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாநின் னருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

**(உரை)** பேரழகியே, அடியேனது மாயாமலத்தால் வந்த பிறவியைத் தகர்த்தாய்; என் உள்ளம் உருகும்படியான அன்பை அவ்வுள்ளத்திலே உண்டாக்கினை; தாமரை போன்ற இரண்டு திருவடிகளைத் தலையால் வணங்கும் தொண்டை எனக்கென்றே ஒப்பித்தாய், அடியேனது நெஞ்சில் இருந்த ஆணவம் முதலிய அழுக்கை எல்லாம் நினது கருணையாகிய தூய நீரால் போக்கினை; இங்ஙனம் செய்த நின் திருவருட் சிறப்பை அடியேன் என்னவென்று எடுத்துப் பாராட்டுவது!

ஆனந்தாதிசயத்தால் காரியத்தை முன் வைத்தும் காரணத்தைப் பின் வைத்தும் பேசுகிறார். பிறவி இனி இல்லை என்ற துணிபு பற்றி உடைத்தனை என்றார். அப்பிறவி தீர்வதற்குக் காரணம் உள்ளம் உருகும் அன்பு; அவ்வன்பு உண்டாதற்குக் காரணம் இறைவியை வணங்குதல்; அவை உண்டாதற்குக் காரணம் நெஞ்சிலுள்ள அறியாமை முதலியன அவளருளாலே நீங்குதல். பலகாலும் படிந்த அழுக்கை மெல்ல மெல்ல நீரால் கழுவுதல்போலத் தன் திருவடித்தொண்டு புரிய வைத்தற்குமுன் மெல்ல மெல்ல நெஞ்சத்தழுக்கைப் போக்கத் திருவருணீரைப் பெய்தாளென்றார். தாள் பணியவும் அருள் வேண்டுமென்பது, "அவனரு ளாலே அவன்றாள் வணங்கி" என்னும் **திருவாசகத்**தாற் பெறப்படும். பதயுகம் -

இரண்டு திருவடிகள். அடைத்தல் - இன்னதை இன்னார் செய்தலென வரையறுத்து ஒப்பித்தல். சுந்தரி : 5, 7, 17, 36. உஎ

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க் கேயழி யாவரசும்
செல்லுந் தவநெறி யுஞ்சிவ லோகமுஞ் சித்திக்குமே.

(உரை) ஆனந்த தாண்டவம் செய்தருளும் நாயகராகிய நடராஜ மூர்த்தியுடன் சொல்லும் பொருளும்போல இணைந்து நிற்கும் மணமலர்க் கொடிபோன்றாய், நின் நாள்மலர்போன்ற திருவடிகளை இரவும் பகலும் தொழுகின்ற தொண்டர்களுக்கே அழியாத அரச பதவியும், என்றும் நடைபெறும் தவ வாழ்க்கையும், சிவலோக பதவியும் கிடைக்கும்.

சொல்லும் பொருளுமென : "சொல்வடி வாய்நின் னிடம்பிரியா விமயப் பாவை, தன்னையுஞ்சொற் பொருளான வுன்னையுமே" (திரு விளையாடல், இடைக்காடன். 10.) நடராஜப் பெருமானுடன் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் திருநாமம் சிவகாமவல்லி யென்பதாதலின் அதனை நினைந்து கொடியென்றார். பரிமளக் கொடி : 15, குறிப்பு. அம்பிகையின் அடியார் இகலோக வாழ்வும் பரலோக வாழ்வும் பெறுவர் என்றபடி ; " இகபரங்கள் முழுதுந் தருவாய் ; (மீனாட்சி. முத்தப். 3.) இல்லற நெறி நின்று அரசாண்டு அதன் பின்னர்த் துறவற நெறி நின்று தவம்செய்து அதன் பயனாகச் சிவலோக வாழ்வு பெறுவரென்று முறையே கூறினார். உஅ

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியி னுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

(உரை) அட்டமாசித்திகளும், அச்சித்திகளைத் தரும் தெய்வமாகி விளங்குகின்ற பராசக்தியும், சக்தியைத் தம்மிடத்தே தழைக்கச் செய்த பரசிவமும், தவம்புரிவார் பெறும் மோக்ஷ ஆனந்தமும், அந்த முத்தியைப்

பெறுவதற்கு அடியிடும் மூலமாகித் தோன்றி எழுந்த சிவஞானமும் ஆகிய எல்லாமாக இருப்பவள் அறிவினுக்குள்ளே நின்று பாதுகாக்கும் திரிபுரசுந்தரியேயாகும்.

சித்தி - அணிமா முதலிய அட்ட சித்திகள்; "மகா சித்தி" (லலிதா. 224.) சித்தி தரும் தெய்வம் - சித்தர்களுக்குச் சித்திகளை அருளும் கடவுள்; "சித்தேசுவரி" என்பது அம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று. பராசக்தி (லலிதா. 572.) முத்தி : 10, குறிப்பைப் பார்க்க. புத்தி : மஹா புத்தி, மதி என்பன லலிதாம்பிகையின் திருநாமங்களாக வழங்குதல் இங்கே நினைத்தற்குரியது. புரத்தை : புரம் என்ற அடியாகப் பிறந்த பெண்பாற் பெயர். ஈண்டுப் புரமென்றது அம்பிகைக்குரிய திரிபுரத்தை. உக

அன்றே தடுத்தென்னை யாண்டுகொண் டாய்கொண்ட தல்லவென்
னன்றே யுனக்கினி நானென் செயினு நடுக்கடலுள்
சென்றே விழினுங் கரையேற் றுகைநின் றிருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேயென் னுமையவளே.

(உரை) ஒருருவாக உள்ளாய், பல உருவங்களை உடையாய், உருவமற்ற அருவே, எனக்குத் தாயாகிய உமாதேவியே, முன் ஒரு நாள் என்னைத் தடுத்தாட்கொண்டருளினை; அங்ஙனம் ஆட்கொண்டதை அல்ல என்று மறுத்தல் உனக்கு நியாயமா? இனிமேல் அடியேன் என்ன குற்றம் செய்தாலும், கடலுக்கு நடுவே சென்று விழுந்தாலும், என் குற்றத்தை மறந்து கரையேற்றிப் பாதுகாத்தல் நின் திருவுளப்பாங்குக்கு ஏற்றதாகும்.

அன்று : நெஞ்சறி சுட்டு. அல்ல : இல்லையென்னும் பொருளில் வந்தது. கடலென்றதும் கரையேற்றுகை என்பதும் உருவகக் குறிப்பால் பாசக்கடலையும் முத்திக்கரையையும் புலப்படுத்தின. திருவுளமே : ஏகாரம், தேற்றம். ஒன்றே பலவுருவே : "ஒன்று யரும்பிப் பலவாய் விரிந்து" (56) என்பர் பின். பலவுரு: "பஹுரூபா" (லலிதா. 824); "வெகுரூபிசுக நித்தியகல்யாணி", "வெகுவித சொரூபி" (திருப்புகழ்.) அருவே: "நிராகாரா" (லலிதா. 137.) உ௰

உமையு முமையொரு பாகனு மேக வுருவில்வந்திங்
கெமையுந் தமக்கன்பு செய்யவைத் தாரினி யெண்ணுதற்குச்
சமையங் களுமில்லை யீன்றெடுப் பாளொரு தாயுமில்லை
அமையு மமையுறு தோளியர் மேல்வைத்த வாசையுமே.

(உரை) உமாதேவியும், அத்தேவியை ஒரு பாகத்தில் உடைய சிவபிரானும் சேர்ந்து ஒருருவாக எழுந்தருளி வந்து, பரிபக்குவமற்ற என்போன்றாரையும் தம் திருவடிக்கு அன்பு செய்யும்படி நன்னிலையில் வைத்தருளினார்; ஆதலின் இனிமேல் கடைப்பிடிப்போமென்று எண்ணி நாம் ஆராய்தற்குரிய சமயங்கள் வேறு இல்லை; எமக்குப் பிறவிப்பிணி நீங்கியதாதலின் இனி எம்மைப் பெற்று எடுப்பதற்குரியவளாகிய தாயும் இல்லை; மூங்கிலைப்போல் உள்ள தோளையுடைய மகளிர்பால் வைத்த மோகம் போதும்.

ஏகவுருவென்றது அர்த்த நாரீசத் திருக்கோலத்தை. எமை யென்றது ஏனைய அன்பர்களையும் உளப்படுத்திக் கூறியது; ஆட்கொள்ளப்பெற்ற பெருமிதந் தோன்றக் கூறியதெனலும் ஆம். அர்த்த நாரீசுவரமூர்த்தித் தியானம் பெண்ணாசையை ஒழிக்க வழியென்பது, "நின்றனையே, பெண் பயி லுருவ மொடுநினைந் தெனது பெண்மய லகற்றுநா ளுளதோ" (**சோணசைலமாலை,** 10) என்பதனாலும் பெறப்படும். சமயங்களும் இல்லை: "வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணர்" (63), "இனி யாரொருவர், மதத்தே மதிமயங்கேன்" (92) என்று பின்வருதல் **காண்க.** ௩௧

ஆசைக் கடலி லகப்பட் டருளற்ற வந்தகன்கைப்
பாசத்தி லல்லற் படவிருந் தேனைநின் பாதமெனும்
வாசக் கமலந் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை யென்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே.

(உரை) பரமேசுவரரது வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும் நுண் ணிழைகளை அணிந்த தேவி, மண், பெண், பொன் என்னும் மூன்றன் ஆசையாகிய கடலிற் சிக்கி அதன் பயனாக இரக்கமற்ற யமனது கைப்

பாசத்திற்பட்டுத் துன்புறும்படி இருந்த அடியேனை, நின் திருவடியாகிய மணமுள்ள தாமரை மலரை அடியேன் தலையின்மேல் வலிய வைத்தருளித் தடுத்தாண்டுகொண்ட நின் கருணைப் பெருக்கை எவ்வாறு எடுத்து உரைப்பேன்!

கரைகாணற்கரிதாதலின் ஆசை கடலாயிற்று. நேசம் - தலையளி. நேர்தல் - நுணுகுதல்; நேரிழை - நுண்ணிய வேலைப்பாடு அமைந்த ஆபரணம்; இங்கே அதனை அணிந்த தேவிக்கு ஆயிற்று. ௩௨

இழைக்கும் வினைவழி யேயடுங் கால னெனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாயத்தர் சித்தமெல்லாம்
குழைக்குங் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுதுன்னை யேயன்னை யேயென்ப னோடிவந்தே.

(உரை) இறைவரது திருவுள்ளம் முழுதும் உருகும்படி செய்யும் கலவைச் சந்தனத்தைப் பூசிய குவிந்த தனபாரங்களை உடைய யாமளையாகிய மெல்லியலே, அடியேன் செய்யும் பாவத்தின் விளைவாக அது பற்றி என்னை வந்து கொல்லப்புகும் யமன் யான் நடுங்கும்படி என்னை அழைக்கும் சமயத்தில் (யான் மிக வருந்துவேன்; அவ்வாறு) வருந்தும் பொழுது நின்பால் ஓடி வந்து நின்னையே 'அன்னையே சரணம்' என்று புகலடைவேன்; அக்காலத்தில் என்பால் எழுந்தருளி, 'நீ அஞ்சற்க' என்று கூறி என்னைப் பாதுகாத்தருள வேண்டும்.

நாட்பார்த்து உழலும் கூற்றுருதலின், இழைக்கின்ற வினையின்வழி இந்நாள் இவனைக் கொளற்குரிய நாளென்று கருதிக் காலன் வருவான். அத்தர் சித்தம் குழைக்கும் நகில்: "கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை, நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி" (42) என்பர் பின்; "பாக னகங்குழை வித்த பவித்ர பயோதரி" (தக்க. 74); யாமளைக் கோமளம்: "கோமள யாமளைக் கொம்பு" (7) கோமளம் - மெல்லியல்; 'கோமலாகாரா', 'கோமலாங்கி' (லலிதா. 437, 721.) அன்னையே என்பதனோடு சரணம் என்ற ஒரு சொல்லை வருவித்து முடிக்க. ௩௩

வந்தே சரணம் புகுமடி யாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போ யிருக்குஞ் சதுமுகமும்
பைந்தே னலங்கற் பருமணி யாகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரு மலர்கதிர் ஞாயிறுந் திங்களுமே.

(உரை) அபிராமி, தன்பால் வந்து புகலடையும் அடியவர்களுக்குச் சொர்க்க லோக பதவியை அன்போடு தந்து தான் பிரம தேவனுடைய நான்கு முகத்திலும், பசிய தேனொழுகும் துழாய் மாலையும் பருத்த கவுத்துவ மணியும் அணிந்த திருமாலின் திருமார்பிலும், சிவபிரானது வாம பாகத்திலும், செந்தேன் சொரியும் பொற்றாமரை மலரிலும், பரவிய கிரணங்களையுடைய சூரியனிடத்திலும், சந்திரனிடத்திலும் போய் வீற்றிருப்பாள்.

போகப் பொருள்கள் பலவுடையதாகி விரிந்த வானுலகத்தைத் தந்துவிட்டுத் தான் குறுகிய இடங்களிற் போய் வீற்றிருப்பாளென்று நயம்பெறக் கூறினர்.

சதுர்முகம்: நான்முகன் நாவில் கலைமகளாக வீற்றிருப்பவளும் அம்பிகையே என்றபடி; "புண்டரிக வீட்டிற் பொலிந்து மதுரச், சொற் பொலி பழம்பாடல் சொல்லுகின் றவளுநின் சொருபம்" (மீனாட்சி. ஊசல். 29); "ஸரஸ்வதி" (லலிதா. 704). ஆகம்: திருமகளும் அம்பிகையே என்றபடி; "திருவே" (3) என்றனர் முன்னும். மலரில் இருத்தல்: 20, 58, 80, 82, 89, 96, 99; "பத்மாஸனா" (லலிதா. 278.) இறைவி சூரியமண்டலத்தினிடையே இருப்பவள்; "சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே" (47); "பானுமண்டல மத்யஸ்தா" (லலிதா. 275). சந்திரமண்டலத்தினிடையே அம்பிகை வீற்றிருத்தல்: 20, குறிப்பு.

ரு௬

திங்கட் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட் கொருதவ மெய்திய வாவெண் ணிறந்தவிண்ணோர்
தங்கட்கு மிந்தத் தவமெய்து மோதரங் கக்கடலுள்
வெங்கட் பணியணை மேற்றுயில் கூரும் விழுப்பொருளே.

(உரை) அலை வீசும் பாற்கடலில் வெவ்விய கண்ணையுடைய ஆதிசேடனாகிய பாயலின்மீது துயிலும் மேலான பரம்பொருளே, சிவபிரா

னது திருமுடியிலுள்ள பிறைச் சந்திரனது மணம் வீசும் நின்னுடைய சிறிய அடி ஒன்றுக்கும் பற்றுத எங்கள் சிரத்திலே நீ வைத்தருள எங்களுக்கு ஒப்பற்ற தவம் அமைந்தவாறு என்ன வியப்பு! கணக்கில்லாத பல தேவர்களுக்கும் இத்தகைய சிறந்த தவம் கிடைக்குமோ? கிடையாது.

திங்கட் பகவு - சந்திரனதுகீற்று; பிறை. சிவபிரான் தேவியினது ஊடலைத் தீர்க்கும்பொருட்டு வணங்குங்கால் அவர் திருமுடிப் பிறை அம்பிகையின் திருவடியிற்பட்டு அவ்வடி திங்கட்பகவின் மணம் நாறியது; "சரணாரவிந்தம்......எம்பிரான் முடிக் கண்ணியதே" (11) என்றார் முன்னும்; 60, 98-ஆம் செய்யுளையும் பார்க்க; "கூன்பிறைக்கோடுழுத பொலன்சீறடி" (மீனாட்சி. முத்தப். 3.); "பிறை நாறுஞ் சீறடியைப் பாடுவனே" (மீனாட்சி குறம், 45); "பிள்ளைப் பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்" (சிவகாமியம்மை இரட்டைமணி மாலை, 19); "தருணசந்த்ரரேகை விரவு மணநாறு பாதாரவிந்த விதரண விநோத மாதா" (சித்துவகுப்பு.) அடிசென்னி வைக்கத் தவம்: 41. அம்பிகை வைஷ்ணவி யென்னும் பெயரோடு திருமாலை இடமாகக் கொண்டு தொழில் புரிபவளாதலின் ஆதிசேடனில் துயில்பவளாகக் கூறினர்; "பொங்கமளிப் புணரித்துயில்வல்லி", "வலையவா ளராமீது துயில் விடாத தாள்" (தக்க, 73, 111.) துயிலென்றது யோக நித்திரையை.

பொருளே பொருண்முடிக் கும்போக மேயரும் போகஞ்செய்
மருளே மருளில் வருந்தெரு ளேயென் மனத்துவஞ்சத் [யும்
திருளேது மின்றி யொளிவெளி யாகி யிருக்குமுன்றன்
அருளே தறிகின்றி லேனம்பு யாதனத் தம்பிகையே.

(உரை) பலவகைச் செல்வமாக உள்ளாய், அச்செல்வத்தால் நிறைவேறும் போகமே, அரிய போகங்களைத் துய்க்கும்படி செய்யும் மாயா ரூபியே, அம்மயக்கத்தின் முடிவில் உண்டாகும் தெளிந்த ஞானமே, தாமரையாகிய இருக்கையில் எழுந்தருளிய தாயே, அடியேனது மனத்தில் மாயையிருள் சிறிதும் இல்லாது ஒழியச் சுடர்வீசும் பராகாசமாக இருக்கும் நின் திருவருள் எத்தகையதென்று அடியேன் அறியவில்லை.

ஐசுவரியத்தைத் தருபவளும் ஐசுவரியமே உருவமாக இருப்பவளும் தேவியே. போகமே: "மகாபோகா" (லலிதா. 219.) மருள்: "மகாமாயா", "மாயா" (லலிதா. 215, 716.) வஞ்சத்து இருள்: அத்து, அல்வழிச்சாரியை. அம்புயாதனத்தம்பிகை: 5, 20. ருகூ

கைக்கே யணிவது கன்னலும் பூவுங் கமலமன்ன
மெய்க்கே யணிவது வெண்முத்து மாலை விடவரவின்
பைக்கே யணிவது பன்மணிக் கோவையும் பட்டுமெட்டுத்
திக்கே யணியுந் திருவுடை யானிடஞ் சேர்பவளே.

(உரை) எட்டுத் திசையையே உடுத்த அழகிய உடையாக உடைய சிவபெருமானது வாமபாகத்தைப் பொருந்திய அபிராமி, தன் திருக்கரத்தில் அணிந்திருப்பன கரும்பாகிய வில்லும் மலராகிய அம்புகளும் ஆம்; செந்தாமரை போன்ற நிறமுடைய திருமேனியில் அணிவது வெள்ளிய முத்துமாலையாம்; விஷம் பொருந்திய நாகத்தின் படம் போன்ற குஹ்ய ஸ்தானத்தில் தரிப்பவை பல மணிகளால் ஆகிய மேகலை வகைகளும் பட்டும் ஆம்.

சேர்பவளே என்பதை விளியாகக் கொண்டு முன்னிலைப்படுத்திப் பொருளுரைத்தலும் பொருந்தும். "ஆரமும் செங்கைச் சிலையு மம்பும்" (9) என்றார் முன்னும். பன்மணிக்கோவை யென்றது மேகலை, பருமம், காஞ்சி, கலாபம், விரிசிகை என்னும் ஆபரணவகைகளை. அம்பிகை இடையில் பட்டு அணிதல்: "ஒல்குசெம் பட்டுடை யாளை" (84); "சாத்துவன கோசிகமோ" (தக்க. 117); "த்ரிபுரை செம்பட்டுக்கட்டு நசுப்பின் திரு" (திருப்புகழ்.) திக்கே யணியும் திருவுடையான் - திகம்பரன்.

பவளக் கொடியிற் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யுந்துணை யாவெங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்குந் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீரம ராவதி யாளுகைக்கே.

(உரை) நல்ல இன்பப்பதவி வேண்டுமென்று நினைக்கும் மனிதர்களே, இந்திர பதவியைப் பெற்றுத் தேவலோகராசதானியாகிய அமரா

வதியை ஆளவேண்டுமெனில் அதன் பொருட்டு, பவளக்கொடிபோலக் கனிந்த செவ்வாயும் குளிர்ந்த புன்னகையோடு கூடிய வெள்ளிய அழகிய பல்வரிசையும் தமக்குத் துணையாக நிற்க, எங்கள் கடவுளாகிய சிவபெருமானைக் குழையும்படியாக எதிர்ப்பட்டுத் துடிபோன்ற இடையைக் கனத்தால் மறையச் செய்யும் இரண்டு தனங்களையுடையாளாகிய அபிராமியை வழிபடுவீர்களாக.

காதற்குறிப்புணர்த்துவது திருவாயும் அது மலர வெளிப்பட்ட முறுவலுமாதலின் அவற்றைத் தனபாரங்கள் துணையாகக் கொண்டன. சிவபிரானைத் துவளச் செய்தல்: "எந்தை...திருமேனி குழையக் குழைத்திட்ட அணிமணிக் கிம்புரிக்கோ டாகத்ததாக" (மீனாட்சி. காப்பு,9) காஞ்சித்தலத்தில் அம்பிகை தழுவ இறைவர் குழைந்தார். ௯அ

ஆளுகைக் குன்ற னடித்தா மரைகளுண் டந்தகன்பால்
மீளுகைக் குன்றன் விழியின் கடையுண்டு மேலிவற்றின்
மூளுகைக் கென்குறை நின்குறை யேயன்று முப்புரங்கள்
மாளுகைக் கம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாணுதலே.

(உரை) திரிபுரங்களும் அழியும்பொருட்டுத் திருமாலாகிய அம்பைத் தொடுத்த மேருமலையாகிய வில்லையுடைய சிவபிரானது வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும் ஒளி படர்ந்த திருநுதலையுடைய தேவி, அடியேனை ஆட்கொண்டருளுதற்கு நின் திருவடித் தாமரை மலர்கள் இருக்கின்றன; காலன்பாற் செல்லாமல் மீண்டு உய்வதற்கு உபகாரமாக நின் கடாக்ஷவீக்ஷண்யம் இருக்கிறது; இவற்றின்மேல் கருத்தைப் பொருத்துகைக்கு இன்னும் காலம் வராமல் இருப்பது என் குறைதான்; நின் திருவருட்குறை அன்று.

நான் முயலத் தொடங்கியவுடன் அருள் செய்கைக்கு நீ காத்திருக்கின்றாயென்றபடி. விழியின் கடை, கடைக்கண் பார்வைக்கு ஆயிற்று.

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற் கெண்ணிய வெம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சிற்

காணுதற் கண்ணிய ளல்லாத கன்னியைக் காணுமன்பு
பூணுதற் கெண்ணிய வெண்ணமன் றேமுன்செய் புண்ணியமே.

(உரை) ஒளி பொருந்திய நெற்றியிலே திருவிழி படைத்தவளை, தேவர்களெல்லோரும் வந்து வழிபட்டுப் பூசை செய்ய நினைத்தற்கு இடமாகிய எம் தலைவியை, அறியாமையையுடைய நெஞ்சினாற் காண்பதற்கு அருகே உள்ளவளல்லாத கன்னிகையைத் தரிசித்துப் பேறுபெறும் அன்பை மேற்கொள்வதற்கு எண்ணிய எண்ணமன்றோ முற்பிறவிகளிலே செய்த புண்ணியத்தின் பயனாவது ?

முற்பிறப்பிற் புண்ணியஞ் செய்தாருக்கே இப்பிறப்பில் தேவியைத் தரிசித்து வழிபடும் பேறு கிடைக்கும் என்றபடி. அம்பிகைக்கு நெற்றிக் கண்ணோடு சேர்ந்து முக்கண் உளவாதலை, "ஒன்றோ டிரண்டு நயனங்களே", "முக்கண்ணியை" (73, 101) என்று பின்னர் வருதலால் உணரலாம். அண்ணியளல்லாத வென்றது நெடுந்தூரத்தில் இருப்பவளென்றபடி. விண்ணவர் பேணுதல் : 4. கன்னி : 8. ௨௦

புண்ணியஞ் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியுஞ் செய்ய கணவருங் கூடிநங் காரணத்தால்
நண்ணியிங் கேவந்து தம்மடி யார்க ணடுவிருக்கப்
பண்ணிநஞ் சென்னியின் மேற்பத்ம பாதம் பதித்திடவே.

(உரை) மனமே, அன்றலர்ந்த புதிய குவளை மலரைப்போன்ற திருவிழிகளையுடைய அபிராமியும், அப்பிராட்டியின் செந்நிறத்தையுடைய பதியும் சேர்ந்து நம்மை ஆட்கொள்ளும் காரணத்தால் நாம் இருக்குமிடத்தை அணுகி வந்து நம்மைத் தம் அடியார்களிடையே இருக்கும்படி திருவருள் பாலித்து நம்முடைய தலையின் மேலே தம் திருவடி மலர்களைப் பதிப்பதற்கு உரிய புண்ணியச் செயலை முற்பிறவியில் செய்திருக்கின்றோம் ; இது வியத்தற்குரியது.

செய்தனமே : வினாவும் ஆம். மனத்தையும் உளப்படுத்தலின் தன்மைப் பன்மையிற் கூறினார். "குவளைக் கண்ணி கூறன் காண்க" என்பது திருவாசகம். செய்ய கணவர் : "சிவனெனு நாமந் தனக்கே யுடையசெம் மேனியெம்மான்" (தேவாரம்.)

இச்செய்யுளோடு, "உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி, அடியார் நடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியே னுன், அடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்துள், முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே" என்ற திருவாசகச் செய்யுள் ஒப்பு நோக்குதற்குரியது. சக

இடங்கொண்டு விம்மி யிணைகொண் டிறுகி யிளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண் டிறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட வல்குற் பனிமொழி வேதப் பரிபுரையே.

(உரை) பரந்த இடத்தைக்கொண்டு பருத்து ஒன்றோடொன்று ஒக்க வளர்ந்து தளர்ச்சியின்றிச் செறிந்து மெத்தெனக் குழைந்து முத்து மாலையை அணியாகக்கொண்ட தனமென்னும் மலையைக்கொண்டு சிவ பிரானது வன்மைபெற்ற நெஞ்சைத் தான் நினைத்தவாறெல்லாம் ஆட்டி வைக்கும் விரதத்தையும் அதற்கேற்ற அழகையும் உடைய தேவி, நல்ல பாம்பின் படத்தையொத்த நிதம்பத்தையும் குளிர்ச்சியையுடைய திரு வார்த்தைகளையும் வேதமாகிய சிலம்பையும் உடையவளாகும்.

முத்து வடங்கொண்ட கொங்கை: 9, 37. அம்பிகையின் நகில் சிவபிரான் திருவுள்ளத்தை அலைத்தல்: 33. கொள்கை - விரதம்; இங்கே பதிவிரதம். பரிபுரம் - சிலம்பு. வேதம் அம்பிகையின் சிலம்பு: "அடிச்சூட்டு நூபுரமோ வாரணங்க ளனைத்துமே" (**தக்க.** 119); "ஆரணநூ புரஞ்சிலம்பு மடிகள் போற்றி" (**திருவிளை யாடல்.** காப்பு); "வேதங்க ளொருநான்கு மெல்லடிமேல் வியன் சிலம்போ" (**பாசவதைப்பரணி**, 192.) சஉ

பரிபுரச் சீறடிப் பாசாங் குசைபஞ்ச பாணியின்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனிய ளைமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை யஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி யிறைவர்செம் பாகத் திருந்தவளே.

(உரை) சிலம்பை அணிந்த சிறிய திருவடிகளையும் பாசாங்குசத் தையும் உடையவள்; ஐந்து மலர்ப் பாணங்களைத் தரித்தவள்; இனிய

சொல்லையுடைய திரிபுரசுந்தரி; சிந்துரம்போலச் சிவந்த திருமேனியை யுடையவள்; நெஞ்சினால் நினைந்து தேவர்களுக்குத் தீங்குகள் செய்த திரிபுரத்தில் உள்ள வஞ்சகராகிய அசுரர்களை அஞ்சுவிக்க வளைத்த மேரு மலையாகிய வில்லையுடைய திருக்கரத்தையும் நெருப்பை யொத்த திருமேனியையும் உடைய சிவபிரானது ஒத்த ஒரு பாதியில் எழுந் தருளியிருந்தவளாகும்.

பாசாங்குசை பஞ்சபாணி: 77. சிந்துர மேனியள் இருந்தவ ளென்று முடிக்க. சிந்துரமேனியள்: 1, 6, 7. செம்பாகம் - நேர்பாதி; "தம்பிரான் றிருமேனியிற், செம்பாதி யுங்கொண்ட தையலுயகி" (**முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்,** செங்கீரை, 2.) சஉ

தவளே யிவளெங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே யவர்தமக் கன்னையு மாயின ளாகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கு மேலை யிறைவியுமாம் [தே.
துவளே னினியொரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டுசெய்

**(உரை)** நெஞ்சிற்கு அணிய தியானப் பொருளாக உள்ள இப் பிராட்டி தவம் செய்யும் உமாதேவியே; எங்கள் பிரானாகிய சங்கரனார் மனைக்கு மங்கலமாகிய பத்தினி ஆகிய அவளே அவருக்கு ஒரு திறத்தில் தாயுமாயினாள்; ஆகையினால் இவளே தேவர் யாவருக்கும் மேலான தலைவியாவாள்; இவளைத் தெய்வமாகக்கொண்டு தொண்டு புரித லல்லது வேறொரு தெய்வம் உண்டென்பதாக எண்ணி மெய்யால் தொழும்பு செய்து தளர்ச்சி அடையேன்.

தவள்: "மாத்தவளே" (13) என்றார் முன்னும். "மங்கல மென்ப மனைமாட்சி" என்றலின் பத்தினி யென்னாது "மனை மங்கல மாமவள்" என்றார். சத்தி தத்துவத்தினின்றும் சதாசிவ தத்துவந் தோன்றுதலின் 'அவர் தமக்கன்னையு மாயினள்' என்றார்; "இம வான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன்" (**திருவாசகம்,** பொற் **சுண்ணம்,** 13); "தவளத்த நீறணி யுந்தடந் தோளண்ண றன்னொருபால், அவளத்த னாமக னாந்தில்லையான்" (**சிற்றம்பலக்கோவை,** 112); "சத்திதான் சிவத்தை யீன்றும்" (**சிவஞானசித்தியார்**); "தனிமுதல்

யாமென்பார்க் கம்மனை யாயவர் தம்மனை யானவள்" (மீனாட்சி. அம்மானை. 9); "அனக நாட கற்கெம் மன்னை, மனைவி தாய்" (சிதம்பரச் செய்யுட்கோவை, 33.)

௩௩

தொண்டுசெய் யாதுநின் பாதந் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தாருள ரோவில ரோவப் பரிசடியேன்
கண்டுசெய் தாலது கைதவ மோவன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன் [றே.

(உரை) தேவி, நின் திருவடிக்குத் தொண்டு செய்யாமலும் நின் பாத சேவை செய்யாமலும் உண்மைப் பொருள் இன்னதென்று தெளிந்து தம் மனம் விரும்பியவற்றையே பழங்காலத்திற் செய்த மெய்ஞ்ஞானியராகிய நின் அடியார்கள் இருந்தனரோ, இல்லையோ; (இருந்தனராதலின்) அவரைப்போலவே அடியேனும் தெரிந்து என் இச்சைக்குரிய செயல்களைச் செய்தால் அது வஞ்சகமாகுமா? அல்லது அந்த மெய்ஞ்ஞானியர் செய்கையெல்லாம் தவமாதலைப்போல இவையும் யான் செய்யும் தவமாகுமோ? அடியேன் மாறுபாடான செயல்களைச் செய்தாலும் நீ பொறுத்தல் நலமாம்; என்னை அதனால் வெறுத்து ஒதுக்கல் நன்றன்று.

சரியை, கிரியை, யோகம் கடந்த ஞானச் செல்வர் எதுசெய்யினும் அதுவே தவமாகுமாதலின் அத்தகையோரைப் பண்டு செய்தாரென்பதனாற் சுட்டினர்; "தேறு மோனமா ஞான போதனர் செய்த செய்கையே செய்யு மாதவம், கூறும் வாசகம் யாவு மந்திரம் கொண்ட கோலமே கோல மாகுமால்" (பாசவதைப் பரணி, 305.)

௩௫

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்தபொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யானுன்னை வாழ்த்துவனே.

(உரை) புதிய ஆலகாலவிடத்தை நுகர்ந்து கறுத்த திருக்கழுத்தை உடைய சிவபிரானது வாமபாகத்திற் பொருந்திய பொன்னிற மேனிப்

பெருமாட்டியே, தாம் வெறுப்பதற்குரிய இயல்பினவாகிய செயல்களைத் தம் அடியவர்கள் செய்தாலும் அவர்களை அறிவினால் மிக்க பெரியோர்கள் பொறுத்தருளும் இயல்பு இவ்வுலகத்தில் இன்று நேற்று வந்த புதிய வழக்கம் அன்றே; ஆதலால் நீ ஏற்றுக்கொள்ளாது விலக்கும் இயல்புடைய காரியங்களை அடியேன் செய்தாலும், (அவற்றை நீ பொறுத் தருள்வாய் என்ற தைரியத்தால் மீட்டும்) நின்னை வாழ்த்தித் துதிப்பேன்.

பொன்னே: அம்பிகை பொன்னிறமுள்ள திருக்கோலத்தோடும் காகினி யென்னும் திருநாமத்தோடும் ஸ்வாதிஷ்டானத்தில் எழுந்தருளி யிருப்பாளென்பர்; "பீதவர்ணா" (லலிதா. 507.) மறுக்கும் தகைமைகள் என்பதைத் தேவி செயலாகக் கோடலும் ஒன்று; நீ மறுத்தாலும் நான் விடேனென்றபடி; "துடைக்கினும் போகேன்" (**தேவாரம்**). ௪௬

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டுமெட் டாம விரவுபகல்
சூழுஞ் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

(**உரை**) அழிவற்ற இன்பத்தில் வாழும்படியாக ஒரு பரவஸ்துவை மெய்ஞ்ஞானத்தால் அறிந்து கொண்டேன்; அது மனத்தில் ஒருவர் விரும்பித் தியானிக்குமாறு உள்ளதன்று; வாயினால் இப்படி இருப்ப தென்று உரைப்பதற்கும் உரியதன்று. கடலேழும் உலகேழும் பெரிய அட்டகுலாசலங்களும் அணுகாமல் இரவையும் பகலையும் முறையே செய்யும் சுடர்களாகிய சந்திர சூரியர்களுக்கு நடுவே அமைந்து விளங்குகின் றது அப்பொருள்.

பேரின்ப வாழ்வு வாழ்வதற்குப் பற்றுக்கோடாகிய ஒன்று என்றபடி. மனத்தாலும் வாக்காலும் அணுகுதற்கரியவள் பராசக்தி; "மனோ வாசா மகோசரா" (லலிதா. 415.) வேலையேழும் நிலமேழும் என்று தனித்தனியே கூட்டுக. சூழ்தல் - செய்தல். "காலை சூழ்செங் கதிர்" (**தக்க.** 279) என்பதனையும் அதன் உரையையும், "பகற்செய்யுஞ் செஞ்ஞாயிறும், இரவுச்செய்யும் வெண்டிங்களும்" (**மதுரைக் காஞ்சி**, 7 - 8) என்னும் வழக்கையும் அறிக. திவாகரன் என்பது பகலைச்

செய்வோனென்ற பொருள்பட்டுச் சூரியனுக்கு ஆதலையும் காண்க. அம்பிகை சந்திர சூரியரிடையே எழுந்தருளியிருத்தலை 20, 34, 44-ஆம் செய்யுட்களாலும் உணரலாம். ௩௭

சுடருங் கலைமதி துன்றுஞ் சடைமுடிக் குன்றிலொன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்
இடருந் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னு மெய்துவரோ
குடருங் கொழுவுங் குருதியுந் தோயுங் குரம்பையிலே.

(உரை) பிரகாசிக்கும் கலைகளையுடைய பிறை பொருந்திய சடையோடு கூடிய திருமுடியையுடைய மேருமலை போன்ற சிவபெருமானோடு இணைந்து படர்கின்ற மணமுள்ள பசுங்கொடியாகிய அபிராமவல்லியைத் தம் நெஞ்சில் தியானித்து, அதனால் துன்பம் நீங்கி, இமைக்கும் ஒரு கணப் போதாவது பரமானந்த நிலையில் இருப்பவர்கள், மீட்டும் குடரும் நிணமும் இரத்தமும் சேர்ந்த கூடாகிய தேகத்தை அடைவார்களோ; அடையார்.

தேவியைத் தியானித்து இன்புற்றவருக்குப் பிறவியில்லை யென்றபடி. சிவபெருமானைக் குன்றமென்றதற்கேற்ப அம்பிகையைக் கொடி என்றார்; "பங்காயோர், தமனிய மலைபடர் கொடியென வடிவு தழைந்தாய்" (மீனாட்சி. செங்கீரை. 101.) பரிமளப் பச்சைக்கொடி: 15, குறிப்பு. ௩௮

குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை யடுத்து மறுகுமப் போது வளைக்கையமைத்
தரம்பை யடுத்த வரிவையர் சூழவந் தஞ்சலென்பாய்
நரம்பை யடுத்த விசைவடி வாய்நின்ற நாயகியே.

(உரை) யாழ் நரம்பைப் பொருந்தி இசையின் வடிவாக நின்ற ஈசுவரியே, உடம்பாகிய கூட்டை யடுத்துக் குடியாகப் புகுந்த உயிரானது, வெவ்விய கூற்றுவனுக்கு இந்நாளில் நீ கொள் என்று பிரமன் குறித்த நாளாகிய எல்லையை அடைந்து சுழலுகின்ற அக்காலத்தில், நீ உன்னைத் தொழும் அரம்பையும் அவளை அடுத்த தேவ மகளிரும் சுற்றிச் சேவியா

நிற்க எழுந்தருளி வந்து நின் வளையையணிந்த திருகரத்தை அமைத்துக் காட்டி அஞ்சாதே என்று திருவாய்மலர்ந் தருளுவாயாக.

"உடம்பினுள், துச்சி லிருந்த உயிர்க்கு" (**குறள்**) என்பாராதலின் 'குரம்பை யடுத்துக் குடிபுக்க வாவி' என்றார். "இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக், கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை" (**நாலடியார்**) என்புழிக்கூறிய நாளெல்லையை இங்கே வரம்பு என்றார். கையமைத்தல் அபயக் குறிப்பு; "தோன்றுந் திதியமைப்பில்" (**உண்மை விளக்கம்.**) 'ரம்பாதி வந்திதா' என்பது லலிதாம்பிகையின் திருநாமங்களில் ஒன்று. நரம்பு - ஸ்வரஸ்தான மெனலுமாம். அம்பிகை யமபயத்தை நீக்குபவளென்பதை, "யமபட ரெனதுயிர் கொளவரின் யானேங்குதல் கண்டெதிர் தானேன்று கொளுங் குயில்" (**தேவேந்திர சங்க வகுப்பு**) என்பதனாலும் உணரலாம்.

சுகூ

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்
றாயகி யாதி யுடையாள் சரண மரணமக்கே.

**(உரை)** ஈசுவரி, நான்கு முகங்களை உடையவள், நாராயணி, கைத் தாமரையில் ஐந்து மலரம்புகளைத் தரித்தவள், சம்புவின் மனைவி, சங்கரி, சாமளை, நஞ்சை வாயிலே உடைய நல்ல சாதிப் பாம்பை மாலையாக உடையவள், வாராகி, சூலினி, மாதங்கி என்று ஆகிய புகழை உடையவளாகிய அபிராமியின் திருவடிகள் நமக்குப் பாதுகாப்பாகும்.

அம்பிகையே பிரமாவிடத்தும், திருமாலிடத்தும் இருந்து சிருட்டி, திதியாகிய தொழிலை நடத்துதலின் நான்முகி யென்றும் நாராயணி யென்றும் கூறினர். பிரம்ம சக்தியைப் பிராம்மி என்றும் விஷ்ணு சக்தியை வைஷ்ணவி யென்றும் கூறுவர். நான்முகி - காகினி யென்னும் அம்பிகையின் மூர்த்தி யெனலுமாம்; ஸ்வாதிஷ்டானத்தில் ஆறிதழ்த் தாமரையில் காகினி யென்னும் திருநாமத்துடன் பொன்னிறம் பூண்டு நான்கு முகங்களோடு அம்பிகை வீற்றிருப்பதாகக் கூறுவர் யோக நூலார்; "சதுர்வக்த்ர மனோஹரா" (**லலிதா.** 505.)

நாராயணி - ஸுபார்சுவமென்னும் தலத்தில் எழுந்தருளியிருக்கும் தேவியின் திருநாமம் என்பர்; நாராயணன் தங்கையுமாம்.

சாம்பவி - சம்புவின் சக்தி. சங்கரி - இன்பத்தை உண்டாக்குபவள். சாமளை - சாமள நிறம் பொருந்தியவள்; அஃது ஒருவகைப் பச்சை நிறம். அகி - பாம்பு. அம்பிகை பாம்பை ஆபரணமாக உடையவள்; "சோதி படலகூடி காகோடி பணிமதாணி மார்பாளே" (**தக்க.** 105); "நாக பூஷணத்தி யண்டம் உண்ட நாரணி" (**திருப்புகழ்.**)

வாராகி: 77; விஷ்ணுசத்தி வகையில் ஒன்று. அம்பிகையின் அமிச சக்திகளுள் தண்டினி என்னும் பெயருடையவள். த்ரிபுரா சித்தாந்தமென்னும் நூல், 'பராசக்தி வராஹானந்தநாதர் என்பவருக்கு வராஹத் திருமுகத்துடன் தரிசனம் தந்தமையின் வாராகி யென்னும் பெயர் பெற்றாள்' என்று கூறும் என்பர். தமிழில் வாராகியை 32 செய்யுட்களால் துதிக்கும் மாலை ஒன்று உண்டு. சூலினி - திரிசூலத்தைத் தரித்தவள்; 77.

மாதங்கி: மதங்கமுனிவரின் குமாரி; யாழ்ப்பாணர்களாகிய மதங்கர் குலத்துப் பெண்ணாகத் தோன்றியவளெனலுமாம் (70); "மாதங்கி வேதஞ்சொல் பேதைநெடு நீலி" (**திருப்புகழ்.**) கியாதி - புகழ். ருo

அரணம் பொருளென் றருளொன் றிலாத வசுரர்தங்கள்
முரணன் றழிய முனிந்தபெம் மானு முகுந்தனுமே
சரணஞ் சரண மெனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி யிரண்டுமெய் தாரிந்த வையகத்தே.

(**உரை**) பொன் வெள்ளி இரும்பென்பவற்றாலாகிய திரிபுரமதில்களே உண்மையான செல்வமென்று எண்ணி இரக்கம் சிறிதும் இல்லாத வித்யுன்மாலி, தாரகாக்ஷன், வாணன் என்னும் மூன்று அசுரர்களுடைய வலிமையும் அன்றொரு நாள் அழிந்து போகும்படி கோபித்த பெருமானாகிய சிவபிரானும், திருமாலுமே, நின்திருவடியே எமக்குப் புகல் என்று கூறுநிற்க நின்ற தலைவியின் அடியார்கள் இறப்பு, பிறப்பு என்னும் இரண்டையும் இவ்வுலகத்தில் அடையார்.

பொருள் - உறுதிப் பொருளுமாம். அன்று: பண்டறி சுட்டு. சரணம் சரணம் - அடைக்கலம், அடைக்கலம் என்று கூறினும் பொருந்தும். இருவரும் பணிதல்: 7, 56. ருக

வையந் துரக மதகரி மாமகு டஞ்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த
ஐயன் றிருமனை யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந் தவமுடை யார்க்குள வாகிய சின்னங்களே.

(உரை) தேர், குதிரை, மதமிக்க களிறு, பெரியகிரீடம், பல்லக்கு, பிறமன்னர்கள் திறையாக வழங்கும் பொன், மிக்க விலையையுடைய பொன்னாரம் முத்து மாலை என்பன, பிறையைத் திருமுடிக்கண் சூடிய சிவபெருமானுடைய அழகிய பத்தினியாகிய அபிராமியின் திருவடித் தாமரைக்குப் பூர்வஜன்மங்களில் அன்பு செய்த தவமுடைய அடியார்களுக்கு உண்டாகிய அடையாளங்களாம்.

தேவியைப் பூர்வஜன்மத்தில் வழிபட்டவர்கள் இந்த ஜன்மத்தில் சக்கரவர்த்திகளாகத் திகழ்வரென்பது கருத்து.

வையம் - தேர். காலாளையும் கூட்டிக்கொள்க. நாற்படையும் முடியும் சிவிகையும் திறைப்பொருளும் உடையார் முடிமன்னர். “ஸாம்ராஜ்யதாயினி” என்பது லலிதாம்பிகையின் திருநாமங்களுள் ஒன்று.௫௨

சின்னஞ் சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையுமுத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலுந் தவமில்லையே.

(உரை) தேவி மிகச் சிறிய தன் திருவிடையிலே சாத்திய சிவந்த பட்டாடையும், மிகப் பெரிய நகிலும், அவற்றின் மேலணிந்த முத்து மாலையும், பிச்சிமலர் நெருங்கிய மிகக் கரிய கூந்தலும், மூன்று கண்களும் தம் சிந்தையிலே தியானித்துத் தனித்திருந்து யோகம் செய்வாருக்கு இங்ஙனம் தியானிக்கும் செயலையன்றி வேறு பயனுடைய தவம் ஒன்றில்லை.

தியானமே பெரிய தவம் என்றவாறு. சின்னஞ்சிறிய, பென்னம் பெரிய, கன்னங்கரிய, தன்னந்தனி : வழக்குத் தொடர்கள் ; “சின்னஞ் சிறியோர் சிதைவே செயினும், பென்னம் பெரியோர் பிழை செய்

குவரோ, கன்னங் கரியோன் மருகா கழியத், தன்னந் தனியேன் றனை யாண் டவனே" (கந்தரநுபூதி, 64.) பட்டு: 37-ஆம் செய்யுட் குறிப் பைப் பார்க்க. முத்தாரம்: 9, 37, 42. பிச்சி மொய்த்த குழல்: "பிச்சிமலர்க் கொந்தளபாரை, அறவி" (திருப்புகழ்.) கண்மூன்று: 73, 101; "த்ரிநயனா", "த்ரிலோசனா", "த்ரயம்பிகா" (லலிதா. 453, 477, 726.)

௫௩

இல்லாமை சொல்லி யொருவர்தம் பாற்சென் றிழிவுபட்டு
நில்லாமை நெஞ்சி னினைகுவி ரேனித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பாலொரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

(உரை) ஒரு செல்வரிடத்திலே போய் உங்களுடைய வறுமை நிலையைச் சொல்லி அவர்களால் அவமானப்பட்டு நில்லாத் நிலை வேண்டு மென்று நெஞ்சில் கருதுவீர்களானால், தினந்தோறும் உயர்ந்த தவத்தைப் பயிலாமையைக் கற்ற இழிகுணத்தவரிடம் ஒருபொழுதும் செல்லாத பெருமிதத்தை என்பால் அருளிவைத்த திரிபுரசுந்தரியின் திருவடிகளைப் புகலாக அடைவீர்களாக.

இல்லாமை - பொருள் இல்லாத வறுமை. நித்தம் கற்ற எனக் கூட்டிப் பொருளுரைத்தலும் ஆம். சேர்தல் - இடைவிடாது நினைத் தலுமாம்; "மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்" (குறள்) என்ப தற்குப் பரிமேலழகர் எழுதிய உரையைக் காண்க. அம்பிகையைத் தியானித்தால் வறுமை தீருமென்பதாம்.

௫௪

மின்னா யிரமொரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னா ளகமகி ழானந்த வல்லி யருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்வி தன்னை
உன்னா தொழியினு முன்னினும் வேண்டுவ தொன்றில்லையே.

(உரை) பல ஆயிர மின்னல்கள் ஒரு திருமேனியின் உருவெடுத்து விளங்குவது போன்ற கோலத்தையுடையவள்; அடியவர் நெஞ்சத்தில் துய்க்கும் ஆனந்தமயமான கொடி போன்றவள்; அரிய வேதத்திற்கு

முன்னாகி நடுமுழுவதுமாகி முடிவும் ஆகிய முதல்வியை உலகத்து உயிர்கள் நினையா தொழிந்தாலும் நினைத்தாலும் அவளுக்கு அவர்களால் வேண்டப்படுவது ஒரு பொருளும் இல்லை.

உயிர்கள் தம் நன்மையின் பொருட்டே தியானிக்கின்றார்களென்ற படி. "பொன்னாற்ப்ர யோசனம் பொன்படைத் தாற்குண்டு பொன் படைத்தான், தன்னாற்ப்ர யோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மை யைப்போல், உன்னாற்ப்ர யோசனம் வேணதெல் லாமுண்டிங் குன்றனக் கென், றன்னாற்ப்ர யோசனம் ஏதுண்டு காண்கச்சி யேகம்பனே" என்ற பட்டினத்தார் பாடல் இங்கே நினைத்தற்குரியது.

மின்வடிவு : "மின்கொடி" (1.) ஆனந்தவல்லி : "பரமானந்தா" (லலிதா. 252) ; "பழவடியார் உள்ளத் தடத்தி லூற்றெடுத்துப் பெருகு பரமா னந்தவெள்ளப் பெருக்கே" (**மீனாட்சி**. முத்தப். 2.) முன் நடு முடி: முன்னே பனை, கொழுந்து, வேர் என்றதை ஓர்க (2.)

௫௫

ஒன்றா யரும்பிப் பலவாய் விரிந்திவ் வுலகெங்குமாய்
நின்றா ளனைத்தையு நீங்கிநிற் பாளென்ற னெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாவிப் பொருளறிவார்
அன்றா லிலையிற் றுயின்றபெம் மானுமென் னையனுமே.

(உரை) ஒரு பொருளாகிய பராசக்தியாய்த் தோன்றிப் பலபல சக்திகளாகி விரிந்து இந்த உலகெங்கும் நிறைந்து நின்றவளாய், அவ்வனைத்துப் பொருள்களையும் நீங்கி நிற்பவளாகிய அபிராமி என் கருத்துக்குள்ளே நீங்காமல் நிலைபெற்று விரும்பியருள்வது என்ன வியப்பு! இக் கருத்தை அறிவார் பிரளய காலமாகிய அன்று ஆலிலையில் யோகத்துயில் கூர்ந்தபெருமானாகிய திருமாலும், என் தந்தையாகிய சிவபிரானுமேயாவர்.

ஒன்றும் பலவுமாதல் : 'யாவையுமாம் ஏகம் - பராசக்தி' (**திருக்கோவையார்**, 71, உரை.) பல : 30, குறிப்பு. புரிதல் - விரும்புதல்.

ஐய னளந்த படியிரு நாழிகொண் டண்டமெல்லாம்
உய்ய வறஞ்செயு முன்னையும் போற்றி யொருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யு மியம்பவைத் தாயிது வோவுன்றன் மெய்யருளே.

(உரை) தேவி, சிவபிரான் அளந்தளித்த இரண்டுபடி நெல்லைக் கொண்டு உலகமெல்லாம் பசி நீங்கிப் பிழைக்கும்படித் தர்மம் செய்கின்ற நின்னையும் துதித்து, மானிடராகிய செல்வர் ஒருவரிடத்தில் அவரைப் பாடிய செம்மையும் பசுமையும் உடைய தமிழ்ப்பாமாலையையும் கைக் கொண்டு போய்ப் பொய்யையும் மெய்யையும் கலந்து சொல்லும்படி அடியேனை வைத்தாய்; இதுவா நின் உண்மையான திருவருள்?

காஞ்சீபுரத்தில் இறைவன் அருளிய இரு நாழிகை நெற்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் அம்பிகை வளர்த்தா ளென்பது புராண வரலாறு; "தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை, எல்லை யிருநாழி நெற்கொண்டோர் - மெல்லியலாள், ஓங்குலகில் வாழும் உயி ரனைத்து மூட்டுமால், ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை" (**பழம் பாடல்**); "அபிராமி, எக்கு லங்குடி லோடுலெ கியாவையும் இற்பதிந்திரு நாழிநெ லாலறம் எப்பொதும் பகிர்வாள்", "இருநாழி படிகொ டறங்காத்த மாபரைச்சி" (**திருப்புகழ்.**) செம்மை-இலக்கணங்களாற் குறைவின்மை. பசுமை - புதுமை. பொய்யென்றது, உயர்வு நவிற்சிபடப் புகழ்தலை. தடுத்தாட்கொள்ளாமல் வாளா இருத்தலினுல் பொய்யும் மெய்யும் இயம் பும் நிலை வந்ததென்னும் கருத்தால், 'இயம்ப வைத்தாய்' என்று அம்பி கையைக் காரண பூதையாக்கினுர். ௫௭

அருணம் புயத்துமென் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும்
தருணம் புயமுலைத் தையனல் லாடகை சேர்நயனக்
கருணம் புயமும் வதனும் புயமுங் கராம்புயமும்
சரணம் புயமுமல் லாற்கண்டி லேனொரு தஞ்சமுமே.

(உரை) செந்தாமரை மலரிலும் என் உள்ளத் தாமரையிலும் எழுந் தருளி யிருக்கும், தாமரை அரும்புபோன்ற நகிலையுடைய பாலாம்பிகை யின் அழகு சேர்ந்த கருணை விழியாகிய தாமரையும், திருமுகத் தாமரை யும், திருக்கர மலரும், திருவடிக் கமலமும் ஆகிய பற்றுக்கோடுகளை யன்றி வேறொரு பற்றுக்கோட்டையும் யான் அறிந்திலேன்.

அருணம்புயத்து அமர்ந்திருத்தல்: "அம்புயமேல் திருந்திய சுந் தரி" (5) என்பதன் குறிப்பைப் பார்க்க. சித்தாம்புயம் - இருதய கம

லம். தருணம்புயம் - தாமரை யரும்பு ; தருணம் - இளமை. தையல் - பாலாம்பிகை ; அலங்காரத்தையுடையவ ளெனலுமாம். ருஅ

தஞ்சம் பிறிதில்லை யீதல்ல தென்றுன் றவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யாரடி யார்பெற்ற பாலரையே.

(உரை) நீண்ட தனி வில்லும், ஐந்து அம்புகளும் முறையே கரும்பாகவும் மலராகவும் கைக்கொண்டு நின்ற தேவி, இஃதன்றி வேறு பற்றுக்கோடு இல்லையென்று நின்னைத் தியானிக்கும் தவ வழியில் மனத்தைப் பழகும்படிசெய்ய எண்ணினேனில்லை ; பஞ்சை மிதிப்பதாயினும் அஞ்சுகின்ற மென்மையான அடிகளையுடைய தாய்மார் தாம் பெற்ற பிள்ளைகள் அறியாமையை உடையவர்களாக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க மாட்டார்கள்.

அதுபோல நீ என்னைப் புறக்கணித்துத் தண்டியாமல் அருள்புரிய வேண்டுமென்பது கருத்து. இதன்கண் வேற்றுப் பொருள்வைப் பணி வந்தது. பஞ்சு - செம்பஞ்சுக் குழம்புமாம். பஞ்சஞ்சும் மெல்லடியார் : “ பஞ்செனச் சிவக்கு மென்காற் றேவி ” (**கம்ப ராமாயணம்,** விபீடணன் அடைக்கலம்.) ருக

பாலினுஞ் சொல்லினி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினுந் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினுங் கீழ்நின்று வேதங்கள் பாடுமெய்ப் பீடமொரு
நாலினுஞ் சாலநன் றோவடி யேன்முடை நாய்த்தலையே.

(உரை) பாலைக் காட்டிலும் இனிய சொல்லையுடைய தேவி, குளிர்ச்சியையுடைய தாமரை மலர்போன்ற நின் திருவடிகளை வைத்தருள, திருமாலும் மற்றும் உள்ள தேவர்களும் வணங்கும்படி நின்ற சிவபிரானது கொன்றைக் கண்ணியை அணிந்த நீண்ட சடையின் மேலிடத்தைக் காட்டிலும், கீழே நின்று வேதங்கள் பாடுகின்ற உண்மையான

பிரணவ பீடங்கள் நான்கைக் காட்டிலும் அடியேனுடைய நாற்றமுடைய நாய்த்தலையைப்போன்ற தலையானது மிகவும் நன்றோ ?

சிவபிரான் முடிக்கண் அம்பிகையின் திருவடி பதிதல் : 11, 35, குறிப்பு. நான்கு பீடம் : தூலப் பிரணவ பீடம் ; சூக்குமப் பிரணவ பீடம், காரணப் பிரணவ பீடம், மகாகாரணப் பிரணவ பீடம் ; நான்கு வேதமாகிய நான்கு பீடங்களுமாம். நன்று - நன்மையுடையது ; தகுதியுடையது. முடை - புலால் நாற்றம். கூO

நாயேனை யுமிங் கொருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி யாண்டுகொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மாறிருத் தங்கைச்சியே.

(உரை) உலகத்து உயிர்க்கெல்லாம் மாதாவே, பார்வதி தேவியே, சிவந்த கண்ணையுடைய திருமாலுடைய அழகிய தங்கையே, நாய்போன்ற என்னையும் நீ இங்கே நின் பார்வைக்கு விஷயமாகிற பொருளாகத் திருவுள்ளங்கொண்டு விரும்பி நீயே வலிய வந்து, இவனை ஆட்கொள்ளலாகும், ஆகாது என்று ஆராயும் நினைவு இல்லாமல் அடியேனை அடிமைகொண்டாய் ; நீ இருந்தபடி நின்னைப் பேய்போன்ற யான் அறியும் ஞானத்தை அருளினாய் ; அடியேன் எத்தகைய பாக்கியத்தை அடைந்தேன் !

நினைவின்றி : நினைந்து பார்ப்பதாயின் யான் ஆட்கொள்ளற் குரியவனுகேனென்ற குறிப்பினது ; "யானுமென் னுள்ளமார் ஞானங்களாரென்னை யாரறிவார், வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி" (திருவாசகம்) என்புழி 'மதிமயங்கி' என வைத்ததுபோல இதையுங் கொள்க. என் நினைவின்றியே நீ வந்து ஆண்டுகொண்டாய் என்பதும் ஒன்று. செங்கண்மால் திருத்தங்கைச்சி : "மால் தங்கைச்சி கனிகை யுமை" (திருப்புகழ்.) கூக

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரஞ் சாய்த்துமத
வெங்கட் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்

கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பு மலருமெப் போதுமென் சிந்தையதே.

(உரை) மேரு மலையாகிய பொன்வில்லைக் கொண்டு அசுரர்களுக் குரிய திரிபுரத்தை அழித்து, மதம் பொருந்திய வெவ்விய கண்ணை யுடைய யானையின் தோலைப் போர்த்த செவ்விய வீரனாகிய சிவபெரு மான் திருமேனி முழுவதும் நகிலாகிய குரும்பை யடையாளத்தை வைத்த பிராணேசுவரியினுடைய தாமரை மலரைப்போன்ற சிவந்த கையிலுள்ள கரும்பு வில்லும், மலரம்புகளும் எக்காலத்திலும் என் மனத் துள்ளே இருப்பனவாகும்.

செஞ்சேவகம்-வஞ்சியாது எதிர்நின்று கொல்லும் வீரம்; "செஞ்சே வகஞ்செய்த சோழன் றிருக்குமர" (குலோத்துங்க சோழன் பிள் ளைத் தமிழ்.) கரும்பும் மலரும் சிந்தையது : பன்மை ஒருமை மயக்கம் ; தனித்தனியே கூட்டினும் அமையும் ; தொகுதியொருமையுமாம். ௬௨

தேறும் படிசில வேதுவுங் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றிற் கொட்டுந் தறிகுறிக் குஞ்சமயம்
ஆறுந் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறுஞ் சமயமுண் டென்றுகொண் டாடிய வீணருக்கே.

(உரை) பெரியோர்களால் எடுத்தோதப்படும் ஆறு சமயங்களுக்கும் தெய்வம் அபிராமியாகிய இவளாக இருப்பதை அறிந்திருந்தாலும், இவளையன்றி வேறு தெய்வத்தைக் கூறும் சமயமும் உண்டு என்று அதனைப் பாராட்டிய வீணர்களுக்கு அவர்கள் உண்மை தெளியும்படி சில பிரமாணங்களைக் காட்டி, அவர்கள் மேலே செல்லும் நற்கதிக்கு உபகார மாக அறிவுறுத்தப்படும் பொருள்கள் மலைப் பாறையிலே அதனைத் தகர்க்கும்பொருட்டு முட்டும் மரத்தூணை ஒக்கும்.

எடுத்துரைப்பார் தளர்ச்சி யடைவதன்றி அவ்வீணர் உள்ளந் தெளியாரென்றபடி. சமயமாறும் தலைவி : "நாரணி யறத்தினாரி யாறுசமய சத்தி" (திருப்புகழ்.) ௬௩

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கவன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன் றிப்
பேணே னொருபொழு துந்திரு மேனிப்ர காசமன் றிக்
காணே னிருநில முந்திசை நான்குங் ககனமுமே.

**(உரை)** தேவி, வீணாக உயிர்ப்பலியை ஏற்றுக்கொள்ளும் புன்சிறு தெய்வங்களிடம் போய் மிக்க பக்தி கொள்ளேன்; நினக்கே அன்பு மேற்கொண்டேன்; ஆதலின் எந்தக் காலத்திலும் நின் தோத்திரமன்றி வேறொருவர் துதியைச் செய்யேன்; பெரிய பூமியிலும் நான்கு திசைகளிலும் ஆகாயத்திலுமாகிய எங்கும் நின் திருமேனியின் ஒளியன்றி வேறு ஒன்றைக் காணேன்.

தேவியின் திருமேனிப் பிரகாசம் யாண்டும் பரவியது; "இறைவியொளிவெளி யெங்குமே" (தக்க. 166.) ௬௨

ககனமும் வானும் புவனமுங் காணவிற் காமனங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையுஞ்செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே.

**(உரை)** அபிராம வல்லியே, நீ இயற்றிய வலிமைச் செயல், மேலுள்ள உலகங்களும் தேவலோகமும் பூவுலகமும் பார்க்கும்படியாகக் காமனது உடலை முன் ஒரு காலத்து எரித்த யோகியாகிய சிவபெருமானுக்கு விசாலமான திருக்கரங்களும், திருமுகங்களும் முறையே பன்னிரண்டும் ஆறும் என்று அமைய அவதரித்த பழைய ஞானத்தையுடைய குமாரனும் உண்டாகியதல்லவா?

வல்லபம் உண்டாயது அன்றோ என்க. தவத்திருவேடம் பூண்ட சிவபெருமான் அக்கோலம் நீங்கி இன்புற்றதோடு அதன் பயனாக ஒரு குழந்தையையும் பெற்றானென்பதைக் குறித்து நின்றது 'மகனும்' என்பதிலுள்ள இறந்தது தழீஇய எச்சவும்மை. தவப்பெருமான்: "தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே". (**புறநானூறு**, கடவுள்.)
வல்லபம் - வலிமை. ௬௩

வல்லப மொன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்ருென்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்ருெடுத்த
சொல்லவ மாயினு நின்றிரு நாமங்க டோத்திரமே.

(உரை) பசும்பொன் மலையாகிய மேருவை வில்லாகக் கொண்ட சிவபெருமானுடன் கவலையின்றி எழுந்தருளியிருக்கும் தேவி, அறிவாற்றல் ஒன்றையும் அடியேன் அறியமாட்டேன்; சிற்றறிவினனுகிய யான் எங்கும் வியாபித்த நின் திருவடியாகிய சிவந்த தளிரையல்லாமல் வேருெரு பற்றையுடையே னல்லேன்; தீவினையையுடைய யான் அந்தாதியாகத் தொடுத்த சொற்கள் பொருளில்லாத வீண் சொற்களாயினும் இடையிடையே வைத்த நின் திருநாமங்கள் தோத்திரமாக உதவும். (ஆதலின் நான் தொடுக்கும் அந்தாதி பயன் உடையதேயாம்.)

வல்லபம் - கல்வியாற்றல் எனலும் ஆம். மலரடி - மலர்ந்த அடி. வீற்றிருத்தல் - கவலையின்றி யிருத்தல்; தனிச் சிறப்புடன் இருத்தலுமாம். சா சா

தோத்திரஞ் செய்து தொழுதுமின் போலுநின் ருேற்றமொரு
மாத்திரைப் போது மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரங் கல்வி குணங்குன்றி நாளுங் குடில்கடொறும்
பாத்திரங் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே.

(உரை) தேவி, நின்னை வாயால் துதிசெய்து, உடம்பால் வணங்கி, மின்னலைப்போலச் சுடர்விடும் நின் திருமேனித் தோற்றத்தை ஒரு கணப் போதாவது மனத்தில் இருத்தித் தியானம் செய்யாதவர், கொடைத் தன்மை, குடிப் பிறப்பு, கோத்திரம், கல்வி, நல்ல குணம் முதலியவற்றிற் குறைபாடுடையராகி உலக முழுவதும் ஒவ்வொரு நாளும் பிச்சைப் பாத்திரத்தைக் கைக்கொண்டு குடிசைகள் தோறும் பிச்சைக்காகத் திரிவார்கள்.

மின்போலும் தோற்றம்: 1, 55. ஒரு மாத்திரைப்போது தியானித்தல்: 48. "கரவோடு நின்ருர் கடிமனையிற் கையேற், றிரவோடு நிற்பித்த தெம்மை - அரவோடு, மோட்டாமை பூண்ட முதல்வனை முன்

வணங்க, மாட்டாமை பூண்ட மனம்" (**பழம்பாட்டு**) என்பது இங்கே ஒப்புநோக்கற் குரியது.

சுஎ

பாரும் புனலுங் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊருமுருகு சுவையொளி யூறொலி யொன்றுபடச்
சேருந் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவமுடை யார்படை யாத தனமில்லையே.

(**உரை**) பிருதிவியும் அப்புவும் அக்கினியும் வேகமாகிய வாயுவும் படர்ந்த ஆகாசமும் ஆகிய ஐந்து பூதங்களிலும் முறையே பரவிய கந்தமும், சுவையும், ஒளியும், பரிசமும், சத்தமுமாகிய தன்மாத்திரைகள் இயையும்படி அவற்றினிடத்தே வியாபித்து நிற்கும் பரமேசுவரியாகிய சிவகாமசுந்தரியின் சிறிய திருவடிக்கண்ணே சார்ந்து நிற்கும் தவத்தை உடைய அடியார்கள் தமக்கே உரியனவாகப் பெறாத செல்வம் ஒன்றும் இல்லை.

எல்லாச் செல்வமும் அவர் அடைவர் என்பதாம்.

சக்தியின் அமிசம் யாண்டும் கலத்தலினால்தான் பார் முதலியன கந்தம் முதலியவற்றோடு இணைந்தன. சிவகாமசுந்தரி - தில்லைவாணர் தேவி; "தில்லை யூரர்தம் பாகத்துமை" (**காப்பு**.)

சுஅ

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே.

(**உரை**) பூவை அணிந்த கேச பாரத்தையுடைய அபிராமியின் கடைக்கண்கள், அத்தேவியின் அன்பர்களுக்கு எல்லாவகை ஐசுவரியங்களையும் தரும்; கல்வியைக் கொடுக்கும்; ஒரு நாளேனும் தளர்ச்சியை அறியாத உறுதியான மனத்தை அளிக்கும்; தெய்விக அழகை வழங்கும்; மனத்தில் வஞ்சகமில்லாத உறவினரை ஈயும்; இன்னும் எவை எவை நல்ல பொருள்களோ அவை எல்லாவற்றையும் வழங்கும்.

" கல்வியை, நிச்ச நிரப்புக்கொன் றுங்கு " (குறள்) என்று கூறுதலின் முதலில் செல்வத்தைத் தந்து பிறகு கல்வியைத் தரும்; " தளர்ந்துழி யுதவுங் கல்வி " (பிரபுலிங்க லீலை) ஆதலின் அது பெற்றார்க்குத் தளராமனந் தருதல் எளிதாம். சுசு

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் குங்குரல் வீணையுங் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களிற் றோன்றிய வெம்பெரு மாட்டிதன் பேரழகே.

(உரை) கடம்பவனத்தில், பண்களாற் களிக்கும் குரலோடு இசைந்த வீணையும், அதனை ஏந்திய திருக்கரமும், திருத்தன பாரமும், பூவுலகமெல்லாம் தரிசித்துக் களிக்கும் பச்சைத் திருநிறமும் ஆகத் திருக்கோலங்கொண்டு, மதங்கரென்னும் யாழ்ப்பாணர் குலப் பெண்களில் ஒருத்தியாக அவதரித்த எம்பெருமாட்டியின் அளவிடற்கரிய பெரிய அழகை அடியேன் விழிகள் மகிழும்படி தரிசனம் செய்தேன்.

சியாமளா தேவி யுருவைக் கூறியவாறு; சியாமளா தண்டகத்தில் இத்திருக்கோல வருணனையைக் காணலாம். கடம்பாடவி: அம்பிகை எழுந்தருளியிருக்கும் சிந்தாமணிக் கிருகம் உள்ள வனம்; " கதம்பவன வாசினி " (லலிதா. 60); " கடம்பபொதி காடும் " (மீனாட்சி. சப்பாணி, 4); மதுரையுமாம்.

பண்களெல்லாம் கண்டு களித்தற்குக் காரணமான குரல் எனலுமாம். சியாமளா தேவி கையில் வீணை ஏந்திப் பாடுவதாகக் கூறுவர்; " வீறு மிக்கமா வீணை கரே " (திருப்புகழ்) கண்ணுக்குக் குளிர்ச்சி தருதலின் 'மண் களிக்கும் பச்சை வண்ணம்' என்றார். மதங்கர் குலப் பெண்ணாகத் திருவவதாரஞ் செய்ததுபற்றி மாதங்கி என்னும் திருநாமம் தேவிக்கு வழங்கும் (50.) எ௦

அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி யருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்

குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக் கென்குறையே.

(உரை) கழிந்ததற்கு வருந்தி நின்ற நெஞ்சமே, தன் அழகுக்கு வேறு யாரும் ஒப்பற்ற கொடிபோன்ற அபிராமி, அரிய வேதங்களிலே பயிலுவதனால் சிவந்த திருவடி மலர்களையுடையாள், குளிர்ச்சியும் பெருமையும் உடைய பிறையைத் திருமுடியிலே சூடும் மெல்லியலாகிய யாமளையென்னும் கற்பகப் பூங்கொம்பு இருக்கும்போது நீ இரங்குதலை ஒழிவாயாக ; உனக்கு வரும் குறை யாதுளது ?

மறைகளின் அடியிலும் நடுவிலும் முடிவிலும் நின்று பழகி அதனாற் கன்றிச் சிவந்த திருவடி. பிறையணிந்த முடியினள் : "ஒளிர் மதிச்செஞ் சடையாளை" (84) ; "சாரு சந்த்ர கலாதரா" (லலிதா. 243) ; "இமயக் கிழவி, தனிக்கண் விளங்கும் நுதற்பிறை மேலோர், மிகைப்பிறை கதுப்பிற் சூடி" (ஆசிரிய மாலை) ; "சடையும் பிறையுந் தாழ்ந்த சென்னிக், குவளை யுண்கட் பவளவாண் முகத்தி" (சிலப். 23 : 1-2); "தருண வாணிலாவீசு சடிலமோலி மாகாளி" (தக்க. 107.) கோமள யாமளை : 33. எக

என்குறை தீரநின் றேத்துகின் றேனினி யான்பிறக்கின்
நின்குறை யேயன்றி யார்குறை காணிரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரவெங் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

(உரை) அகன்ற உயர்ந்த வானத்தின்கண் மின்னலுக்கு ஒரு குற்றத்தைக் கற்பித்து அதனினும் மெலிந்து நின்ற நுணுகிய திருவிடையையும் மென்மையாகிய இயல்பையும் உடையாய், எம்பிரானாகிய சிவபெருமான் நின் ஊடல் கண்டு தன் குறையை நீக்கி அவ்வூடலைத் தீர்க்கும் பொருட்டு நின்னை வணங்கித் தன் சடாபாரத்தின்மேல் வைத்த நின்றன் திருவடித் தாமரைகளையே என் குறைகள் நீங்கும்படி நின்று துதிக்கின்றேன் ; இனிமேல் யான் பிறவியை அடைந்தால் அது நின் குற்றமே ; அல்லாமல் வேறு யார் குற்றம் ?

நின்னை வாழ்த்தும் என் பிறவித் துன்பத்தைத் தீர்த்தல் நின் கடமை யென்றவாறு. நேர்தல் - நுணுகுதல். மெல்லியல் - கோமளை. எங்கோன் சடைமேல் வைத்த தாமரை : 11, 35, 60. எஉ

தாமங் கடம்பு படைபஞ்ச பாணந் தனுக்கரும்பு
யாமம் வயிரவ ரேத்தும் பொழுதெமக் கென்றுவைத்த
சேமந் திருவடி செங்கைக ணான்கொளி செம்மையம்மை
நாமந் திரிபுரை யொன்றோ டிரண்டு நயனங்களே.

(உரை) அபிராமி அம்மைக்கு உரிய மாலை கடம்பு ; ஆயுதம் பஞ்ச புட்ப பாணம்; வில் கரும்பு ; அவளுடைய மந்திர சாதகர்களாகிய பைர வர்கள் அவளைத் துதிக்கும் காலம் அர்த்த யாமம்; எமக்கு உய்வைத் தருவ தற்கு என்று வைத்த பாதுகாப்பு அவள் திருவடி ; அவளுடைய சிவந்த திருக்கரங்கள் நான்கு ; திருமேனி ஒளி சிவப்பு ; திருநாமம் திரிபுரை என்பது ; கண்கள் மூன்று ஆம்.

கடம்பு : 26. வயிரவர் : 'மூயான வாசினியது மந்திர சாதகரான பைரவ வேஷதாரிகள்' (தக்க. 51, உரை); "இறைவி பைரவர்களே" (தக்க. 429) ; சிவபெருமானுமாம்; "மகா பைரவ பூஜிதா", "மார்த் தாண்ட பைரவா ராத்யா" (லலிதா. 231, 785.) சேமம் திருவடி : "சரண மரணமக்கே" (50) என்றார் முன்னும். ஒளி செம்மை : முதற் செய்யுளைக் காண்க. மூன்று கண்கள் : 53-ஆம் செய்யுட் குறிப்பைக் காண்க. எங

நயனங்கண் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவு மபிராம வல்லி யடியிணையைப்
பயனென்று கொண்டவர் பாவைய ராடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினிற் றங்குவரே.

(உரை) மூன்று கண்களையுடைய சிவபிரானும் வேதங்களும் திரு மாலும் பிரமதேவனும் புகழ்ந்து பாராட்டுகின்ற அபிராமவல்லியின் இரண்டு திருவடிகளையே முத்திப் பயனென்றுகொண்டு தியானிப்பவர், அரம்பை மகளிர் நடம்புரியவும், பாடல்களைப் பாடவும் அவற்றைக்

கண்டும்கேட்டும் இன்புற்றுப் பொன்னிறம்பெற்ற பாயலில் அவர்களோடு பொருந்தி இன்புறும் பொன்னிறமாகிய கற்பகச் சோலையில் இந்திரராகி வீற்றிருப்பார்களா?

தேவியின் அடியார் இந்திர பதவியையும் மதியாரென்றபடி; "கூடுங் கொள்கையிற் கும்பிட லேயன்றி, வீடும் வேண்டா விறல்" (பெரிய புராணம்) என்பதை ஓர்க. மூவரும் போற்றுதல்: 7. திருவடியே வீடாக இருக்குமாதலின் 'அடியிணையைப் பயனென்று கொண்டவர்' என்றார். "சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு" (திருமுருகாற்றுப்படை, 62) என்பதன் உரையில் நச்சினார்க்கினியர், "திருவடியே வீடாயிருக்குமென்றார்; அது 'தென்னன் பெருந்துறையான், காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி' என்பதனானும் பிறரும் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க" என்றெழுதியது இங்கே நினைக்கத்தக்கது.

'தங்குவரே' என்பதை உடம்பாடாக்கி, தேவியின் திருவடியையே பயனாகக் கொண்டவர் இந்திர பதவியை எளிதிற் பெறுவர் என்று கூறுதலும் ஒன்று. எச

தங்குவர் கற்பக தாருவி னீழலிற் றாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவ ராழியு மீரேழ் புவனமும் பூத்தவுந்திக்
கொங்கிவர் பூங்குழ லாடிரு மேனி குறித்தவரே.

(உரை) அட்டகுலாசலங்களையும், மேலே கிளரும் உப்புத் தன்மையையுடைய கடல் முதலிய ஏழு கடலையும், பதினான்கு புவனங்களையும் பெற்றெடுத்த திரு வயிற்றையும், வாசனை பரவிய மலரை யணிந்த கூந்தலையும் உடைய தேவியின் திருவுருவத்தைத் தியானம் செய்யும் அடியார், இந்திர பதவி பெற்றுக் கற்பக விருட்சத்தின் நிழலில் வீற்றிருப்பர்; பின்பு பூமியில் பிறந்திறந்து இடையறவின்றி வரும் பிறவியைத் தம்மைப் பெறுந் தாய்மார் இல்லாமையாலே மங்கச் செய்வர்.

மங்குவர்: தன் வினை பிறவினைப் பொருளில் வந்தது. தாயரின்றி: "ஈன்றெடுப் பாளொரு தாயுமில்லை" (37.) ஈரேழ்புவனமும் பூத்த

உந்தி : 13. தேவியைத் தியானித்தவர்கள் சொர்க்க போகமும் பிறகு வீடும் பெறுவர் என்றபடி. ௭௫

குறித்தேன் மனத்தினின் கோலமெல் லாநின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தே னவிழ்கொன்றை வேணிப் பிரானொரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பயிரவியே.

(உரை) வண்டுகள் கிண்டுவதனால் மணமுடைய தேன் கட்டவிழ்ந்து சொரிகின்ற கொன்றைக் கண்ணியைத் திருமுடியிலணிந்த சிவபிரானது ஒரு பகுதியை அவர் திருமேனியினின்றும் வலியக்கவர்ந்து அங்கே குடி புகுந்தருளிய பஞ்சபுட்பபாணத்தையுடைய பைரவியே, நின்திருமேனிக் கோலத்தை யெல்லாம் அடியேன் மனத்துள் தியானம் செய்தேன்; அதன் பயனாக நின் திருவுள்ளக் குறிப்பை உணர்ந்து யமன் என் உயிரைக் கொள்வதற்கு வருகின்ற நுணுகிய வழியை அடைத்துவிட்டேன்.

யமவாதனை ஒழிந்ததென்றபடி. பிறர் அறிவதற்கு அரிய நுண்மையதாதலின் 'நேர்வழி' என்றார். பயிரவி - பைரவராகிய சிவபிரானது பத்தினி (லலிதா. 276); "த்ரிபுர பயிரவி" (தக்க.) ௭௬

பயிரவி பஞ்சமி பாசாங் குசைபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி யுண்ணு முயர்சண்டி காளி யொளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

(உரை) பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சகர் உயிரைப் பலியாகக் கொள்ளும் உயர்ந்த பெருமையையுடைய சண்டிகா தேவி, காளி, விளங்குகின்ற கலைகளாகிய வயிரங்களையுடைய சிறந்த வட்டமான மேகலையையுடையவள், மாலினி, சூலி, வராகி என்று குற்றந் தீர்த்த நான்கு வேதங்களில் சேர்ந்த தேவியின் திருநாமங்களை அறிந்தோர் கூறுவர்.

பயிரவி-அச்சந் தருபவளெனலும் ஆம்; இப்பொருள் கொண்டால் பின்னே வயிரவி எனவும் மண்டலி யெனவும் தனித்தனியே பிரித்துப்

பொருள் கொள்க. பஞ்சமி - சதாசிவத்தின் சத்தியாகிய பராசக்தி (லலிதா. 948); ஐந்தாவது சத்தியாகிய அநுக்கிரக சக்தி; " நீடு பஞ்சமி சூலினி மாலினி ", " கவுரி பஞ்சமி யாயீ மாயீ " (திருப்புகழ்), "படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமி ", " கருத்திற் பயிலும் வராகியெம் பஞ்சமி", " பாடகச் சீறடிப் பஞ்சமி " (வராகிமாலை, 4, 9, 19.) வஞ்சர் உயிர் அவி உண்ணுதல் : " கனைகழ னிணையல ருயிரவி பயிரவி" (தேவேந்திர சங்க வதுப்பு.) சண்டி - சண்டிகா; கோபமுடையவள் (லலிதா. 755.) காளி - கருநிறமுடையவள். கலா வயிரவி மண்டலி : " மெய்ம்மறையார் கலையனைத்து மேகலையா மருங்கசைத்த விமலை யம்மா " (திருவிளை. 4: 34.) மண்டலி எனத் தனியே கொள்ளின் சூரியசந்திரமண்டலங்களில் வீற்றிருப்பவளெனப் பொருள் கொள்க. மாலினி - மாலையை அணிந்தவள் (லலிதா. 455); அக்ஷரங்களின் தெய்வமாக இருப்பவ ளெனலும் ஆம். சூலி : 50. வராகி : 50. எஎ

செப்புங் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்புங் களப வபிராம வல்லி யணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பு நிலவு மெழுதிவைத் தேனென் றுணைவிழிக்கே.

(உரை) தந்தத்தாற் கடைந்த செப்பும், பொற்கலசமும் போன்ற அழகிய நகிலின்மேல் அப்பிய கலவைச் சந்தனத்தையுடைய அபிராம வல்லி காதில் அணிந்த முத்துக்கொப்பையும், வயிரக்குழையையும், திருவிழியின் கொழுத்த கடைசியையும், பவளம் போன்ற திருவாயையும், அதன்கண் மலர்ந்த புன்னகையாகிய நிலவையும் என் இரண்டு கண்களிலும் எழுதிவைத்தேன்.

தியானத்தின் வன்மையினால் எங்கே நோக்கினும் அங்கே திருக்கோலம் தோன்றுதலின் கண்ணில் எழுதிவைத்தேனென்றார்; "கருணை வதன பற்பமும் கமலவிழியும் விழியு மனமும் எழுதி " (முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ், முத்தப். 10) எனப் பிறரும் விழியில் எழுது தலைக் கூறுதல் காண்க.

கொப்பு, மேற்காதில் அணிவது; " காதுக்கொர் தமனியக் கொப்பு மிட்டு " (மீனாட்சி. செங்கீரைப். 1.) எஅ

விழிக்கே யருளுண் டபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண் டெமக்கவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே யழுந்துங் கயவர்தம் மோடென்ன கூட்டினியே.

(உரை) அபிராமவல்லிக்குத் திருவிழியில் எமக்கு வழங்கும் திருவருள் இருக்கின்றது; அவ்வருளைப் பெறும் பொருட்டு வேதங்கள் கூறியுள்ள நன்னெறியின்படியே அவளை வழிபட்டுத் தியானிக்க எமக்கு அநுகூலமாகிய நெஞ்சம் இருக்கிறது; அந்த வேதநெறி இருக்கவும், பழிச்செயல்களிலே ஈடுபட்டுத் திரிந்து கொடிய பாவங்களையே செய்து பாழான நரகக்குழியில் அழுந்துகின்ற கீழ் மக்களோடு இனி என்ன சம்பந்தம் நமக்கு உண்டு?

விழிக்கு அருள் உண்டு: "அருள் விழியொடும் வளர்கருணை" (மீனாட்சி. செங்கீரை. 8.) வேதஞ் சொன்னபடி வழிபடுதல்: "மறை சொல்லிய வண்ணந் தொழுமடி யாரை" (91) என்பர் பின். எக.

கூட்டிய வாவென்னைத் தன்னடி யாரிற் கொடியவினை
ஓட்டிய வாவென்க ணோடிய வாதன்னை யுள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணு மனமுங் களிக்கின்றவா
ஆட்டிய வாநட மாடகத் தாமரை யாரணங்கே.

(உரை) பொற்றாமரையில் எழுந்தருளி யிருக்கும் அரிய அழகியாகிய தேவி, ஒன்றுக்கும் பற்றாத என்னைத் தன் அடியாருள் ஒருவனாகச் சேர்த்தருளியவாறும், அங்ஙனம் சேர்த்துப் பின் என்பாலுள்ள கொடிய இருவினைகளையும் போக்கியவாறும், என்பால் அருள் புரியஓடி வந்தவாறும், தன் திருக்கோலத்தை உள்ளபடியே காட்டியவாறும், அதனைத் தரிசித்து அறிந்த கண்ணும் மனமும் ஆனந்த மேலீட்டால் மகிழ்கின்றவாறும், இவ்வாறெல்லாம் என்னைத் திருவருள் நாடகம் ஆட்டியவாறும் என்ன அதிசயம்!

ஆடகத் தாமரை அணங்கு: 5, 20, 58, 82. அ०

அணங்கே யணங்குக ணின்பரி வாரங்க ளாகையினல்
வணங்கே னொருவரை வாழ்த்துகி லேனெஞ்சில் வஞ்சகரோ
டிணங்கே னெனது னதென்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கே னறிவொன்றி லேனென்க ணீவைத்த பேரளியே.

**(உரை)** தேவி, தேவ மாதர் நின் பரிவார சக்திகளாக இருத்தலினால் உன்னையன்றி வேறு ஒருவரை நான் வணங்கேன்; வாழ்த்துதலும் செய்யேன்; நெஞ்சில் வஞ்சகத்தையுடைய மக்களோடு தொடர்பு பூணேன்; எனது பொருளெல்லாம் நின்னதேயென்று எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து நிச்சலனமாக இருக்கும் யோகியர் சிலர்; அவர் யாவரோடும் மாறுபடாமல் உறவு பூண்டிருப்பேன்; அறிவு சிறிதும் இலேனாயினும் என்பால் நீ வைத்த பெரிய கருணை இருந்தவாறு என்னே!

வேறொரு தெய்வப் பெண்ணைத் தொழலாமெனின் யாவரும் நின் ஏவற் குழுவினராக இருத்தலின் நீயே யாவருக்கும் தலைவியா யிருத்தலை யறிந்து அவரைத் தொழுதலை ஒழிந்து நின்னையே தொழுதேன் (49.) எனது உனது என்றிருப்பார்: "எனக் குள்ளவெல்லாம், அன்றே யுனதென் றளித்து விட்டேன்" (95.) அக

அளியார் கமலத்தி லாரணங் கேயகி லாண்டமுநின்
ஒளியாக நின்ற வொளிர்திரு மேனியை யுள்ளுதொறும்
களியாகி யந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடினெங்ங னேமறப் பேனின் விரகினையே.

**(உரை)** வண்டுகள் மொய்க்கும் தாமரை மலரில் எழுந்தருளிய தேவி, சகல அண்டங்களும் நின் ஒளியாகப் பரவி நிற்கக் காரணமான பிரகாசிக்கும் அழகிய நின்றன் திருமேனியைத் தியானிக்குந்தோறும் என் அந்தக்கரணங்கள் ஆனந்த மயமாகிப் பூரித்துத் தத்துவ எல்லைகளைக் கடந்து பரவெளியாகி விடுவதாயின், நீ இயற்றிய இந்த அதிசய உபாயத்தை எவ்வாறு அடியேன் மறப்பேன்?

"வெளிநின்ற நின்றிரு மேனியைப் பார்த்தென் விழியுநெஞ்சும், களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை" (19) என்றார் முன்னும். தியானத்தால் அந்தக்கரணத்தில் இன்பம் உண்டாவதும், தியானம் வலி

பெறப் பெறக் கருவி கரணங் கழன்ற நிலையில் பர வெளியில் லயித்துச் சிவானந்த அனுபவம் பெறுதலும் கூறினர்.

கமலத் தணங்கு : 1, 5, 20, 58, 80. அகிலாண்டமும் நின் ஒளி: "இறைவி யொளிவெளி யெங்குமே" (தக்க. 166); "சகலமு நின்றிருச் சொருபமென் றேலிடும் சதுர்மறைப் பொருள்" (மீனாட்சி. நீராடல். 3); "அனைத்துந் தன் மயமெனுஞ் சுருதி" (முத்துக்குமார. செங்கீரை. 2.) வெளியாதல் - அதீத நிலையை அடைதல். அஉ

விரவும் புதுமல ரிட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலு மிறைஞ்சவல் லாரிமை யோரெவரும்
பரவும் பதமு மயிரா வதமும் பகீரதியும்
உரவுங் குலிசமுங் கற்பகக் காவு முடையவரே.

(உரை) அபிராமியே, நின்றன் திருவடியாகிய மணமுடைய தாமரை மலர்க் கண் பலவகையாக விரவிய அன்றலர்ந்த மலர்களை அருச்சித்து இரவும் பகலும் அவற்றை வழிபடும் சக்தி உடையவர்கள், தேவர்கள் யாவரும் பரவும் பதவியையும் ஐராவதத்தையும் ஆகாச கங்கையையும் வலிமையையும் வச்சிராயுதத்தையும் கற்பகச் சோலையையும் உடைய இந்திரர் ஆவர்.

பதம் - தேவலோகத்தை ஆட்சி புரியும் இந்திர பதவி; 74, 75-ஆம் பாடல்களைப் பார்க்க. அங

உடையாளை யொல்குசெம் பட்டுடை யாளை யொளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை யெங்கள்பெம் மானிடை யாளையிங் கென்னையினிப்
படையாளை யுங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே.

(உரை) நம்மவரே, எல்லாவற்றையும் உடையவளாகிய பரமேசுவரியை, திருவிடையில் துவளுகின்ற செம்பட்டாகிய உடையையுடையவளை, விளங்குகின்ற பிறையை அணிந்த சிவந்த சடையையுடையவளை, வஞ்சகர் நெஞ்சினிடத்தே ஒருகாலும் எழுந்தருளாதவளை, விளங்குகின்ற நுண்ணிய நூலைப்போன்ற திருவிடையை உடையவளை, எங்கள் பெரு

மாளுகிய சிவபிரானது இடப்பாகத்தில் வீற்றிருப்பவளை, இனி இந்த உலகத்தில் என்னை மீட்டும் படையாமல் இருக்கப் போகிறவளை, உங்களையும் இனிப் படையாத வண்ணம் தரிசனம்செய்து கவலையற்று இருங்கள்.

பட்டுடையாள் : 37. மதிச்சடையாள் : 71.

இதன்கண் அடிதோறும் மடக்கு வந்தது. அச

பார்க்குந் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்
டார்க்கும் புதுமல ரைந்துங் கரும்புமென் னல்லலெல்லாம்
தீர்க்குந் திரிபுரை யாடிரு மேனியுஞ் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேன்முத்து மாலையுமே.

**(உரை)** அடியேனுடைய துக்கங்களை யெல்லாம் போக்குகின்ற திரிபுரசுந்தரியின் திருக்கையிலுள்ள பாசாங்குசமும், குளிர்ச்சியைப் பெற்ற சிறகையுடைய வண்டுகள் முழங்கும் புது மலர்களாகிய ஐந்து அம்புகளும், கரும்பாகிய வில்லும், அவள் திருமேனியும், சிறிய திருவிடையும், கச்சை யணிந்து குங்குமக் குழம்பு பூசிய நகிலும், அவற்றின் மேல் அணிந்த முத்துமாலையும் பார்க்கும் திசைதோறும் தோன்றும்.

தோன்றும் என்ற ஒரு சொல்லை அவாய் நிலையால் வருவித்து முடிக்க. முலையும் முத்துமாலையும் : "திருத்தன பாரமும் ஆரமும்" (9.)

மாலயன் றேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையுஞ் சூடகக் கையையுங் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலனென் மேல்விடும் போது வெளிநில்கண்டாய்
பாலையுந் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே.

**(உரை)** பாலையும் தேனையும் வெல்லப் பாகையும்போன்ற இனிமையையுடைய மெல்லிய சொற்களைப் பேசும் தேவி, திருமாலும் அயனும் தேடவும், வேதம் தேடவும், தேவர் தேடவும் அவர்களுக்கு அரியனவாய் நின்ற நின் திருவடிகளையும், வளையலணிந்த திருக்கரங்களையும் தாங்கியபடி, மேலெழுந்த மூன்று கிளைகளையுடைய வேலாகிய திரிசூலத்தை யமன் என்மேல் விடும் அக்காலத்தில் என் முன்னே வெளிப்படையாக வந்து சேவை சாதித்தருள்வாயாக.

கப்பு - கிளை. சூலம், யமன் ஆயுதம்; "சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவரும், காலன்" (கந்தரலங்காரம்.) அசு

மொழிக்கு நினைவுக்கு மெட்டாத நின்றிரு மூர்த்தியென்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யான்மதனை
அழிக்குந் தலைவ ரழியா விரதத்தை யண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே.

(உரை) தம் நெற்றித் திருக்கண்ணால் மன்மதனை எரிக்கும் பரமேசுவரரது அழிவில்லாத தவ விரதத்தை உலக முழுவதும் பழிக்கும்படி குலைத்து அவர் திருமேனியில் ஒரு பாகத்தைக் கைக்கொண்டு ஆட்சி செய்யும் பராபரையே, சொல்லுக்கும் எண்ணத்திற்கும் எட்டாத நின் திருவுருவமானது அடியேனுடைய கண்களுக்கும் பூசை முதலிய கிரியைக்கும் வெளிப்பட்டு நின்றது; இஃது என்ன ஆச்சரியம்!

அம்பிகை அவாங் மனோ கோசரமூர்த்தியை உடையவள்; "மனோ வாசாமகோசரா" (லலிதா.415.) வினை - செயல்; இங்கே பூசை முதலிய க்ரியாபாதத்துக்குரியவற்றை. வினைக்கு - வினையின் விளைவாக. இச் செய்யுளுடன் 65-ஆம் செய்யுள் ஒப்பு நோக்குதற்குரியது. பராபரை - மேலானவற்றினும் மேலானவள். அஎ

பரமென் றுனையடைந் தேன்றமி யேனுமுன் பத்தருக்குள்
தரமன் றிவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன் றெரியப் பொருப்புவில் வாங்கிய போதிலயன்
சிரமொன்று செற்றகை யானிடப் பாகஞ் சிறந்தவளே.

(உரை) பகைவராகிய அசுரருடைய முப்புரங்களும் அன்று எரியுமாறு மேருமலையாகிய வில்லை வளைத்த திருக்கரத்தானும், வெண்டாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனது தலையொன்றைத் தடிந்த திருக்கரத்தானுமாகிய சிவபிரானது வாமபாகத்தில் எழுந்தருளிச் சிறப்புற்றோய், வேறொரு பற்றுக்கோடற்ற தமியேனாகிய யானும் உன் பாரம் என்று முறையிட்டு நின்னைப் புகல் அடைந்தேன்; நின் பத்தருக்குள் சேரும் தகுதியுடையவனல்லன் இவன் என்று கருதி நீ தள்ளினால் அது நின் பெருமைக்குத் தகாது.

பரம் - பாரம்; நீயே பரம்பொருள் என்று எனலும் ஆம். தமியேனும் என்ற உம்மை இழிவு சிறப்பு. அன்று: பண்டறிசுட்டு. வாங்கிய கையான், செற்ற கையான் எனத் தனித்தனியே கூட்டுக. அஅ

சிறக்குங் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கந் தருநின் றுணைவரு நீயுந் துரியமற்ற
உறக்கந் தரவந் துடம்போ டுயிருற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே.

(உரை) சிறப்புற்ற தாமரையில் வீற்றிருக்கும் திருமகளாக உள்ள தேவி, நின் சிவந்த திருவடியைத் தன் சென்னியிலே ஒருவன் வைக்க அவனுக்கு மோட்ச பதவியைத் தரும் நின்னுடைய பதியாகிய பரமேசுவரரும் நீயும் உடம்போடு உயிருக்கு உள்ள நட்பு அற்று அறிவு அழிந்து எல்லாம் மறக்கின்ற மரணகாலத்தில் துரியநிலை கடந்த நிலையில்வரும் சிவானந்த அனுபவமாகிய தூக்கத்தைத் தரும் பொருட்டு எழுந்தருளி வந்து, அங்ஙனம் வருதல் வருத்தம் தருவதாயினும் அவ்வருத்தத்தை ஏற்று அடியேனுக்கு முன்னேவந்து காட்சி கொடுத்தருளுதல் வேண்டும்.

சென்னி வைக்கவும் உறக்கந் தரவும் என்று கூட்டிப் பொருள் செய்தலும் பொருந்தும்.

கமலத்திரு: 5,20,58,80,82. தரும் என்பது நின் என்பதனோடு மாத்திரம் முடிந்தது. துரியமற்ற உறக்கமாவது துரியாதீதமாகிய துவாதசாந்த வெளியில் உண்டாம் அனுபவம். "துவாதசாந்தப் பெருவெளியில் துரியங்கடந்த பரநாத, மூலத்தலம்" (**மீனாட்சி. முத்தப். 1**), "துரியங்கடந்த துவாத சாந்தப் பெருவெளிவளாகத் தொருபெருங் கோயிலுள்" (**மதுரைக் கலம்பகம், 103**) என்பவற்றால் அந்நிலையையும், "குரவரிருவீரும் உற்றிடு துவாத சாந்தத், தொருபெரு வெளிக்கே விழித்துறங்குத் தொண்டர்" (**மீனாட்சி. அம்மானை. 3**) என்பதனால் அங்கே சிவயோகிகள் பெறும் அனுபவமும் விளங்கும். உடம்போடுயிர் உறவு: "உடம்போ டுயிரிடை நட்பு" (**குறள்.**) அறிவு மறக்கும்பொழுது: "அறிவழிந்திட் டைம்மே லுந்தி, அலமந்த பொழுதாக" (**தேவாரம்.**)

அகூ

வருந்தா வகையென் மனத்தா மரையினில் வந்துபுகுந்
திருந்தாள் பழைய விருப்பிட மாக வினியெனக்குப்
பொருந்தா தொருபொரு ளில்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கு மெல்லியலே.

(உரை) வானுலகத்தில் வாழும் தேவர்களுக்கு விருந்தாகப் பாற் கடலிலே பிறந்த அமுதத்தை வழங்கிய கோமளையாகிய தேவி, அடியேன் ஜனன மரணங்களில் வருந்தாத வண்ணம் என் இருதய கமலத்தில் தானே வந்து புகுந்து அதுவே தன் பழைய இருப்பிடம்போல ஆகும்படி இருந்தாள்; இனிமேல் எனக்குக் கைவராத அரிய பொருள் ஒன்றும் இல்லை.

மனத்தாமரை : "என் சித்தாம் புயத்து மமர்ந்திருக்கும், தருணம் புயமுலைத் தையல்" (58.) பழைய இருப்பிடமென்றது அம்பிகை வீற்றிருக்கும் தாமரையை. பொருந்தாதது ஒரு பொருளென்பது விகா ரப்பட்டது. தேவர்கட்கு விருந்தை அளித்த மோகினி அம்பிகையின் அமிசமாதலின் 'புலவருக்கு விருந்தானதை நல்கும் மெல்லியல்' என்றார்; "அமரர் வாழ்வு வாழ்வாக வவுணர் வாழ்வு பாழாக அருளு மோகி னீயாகி யமுத பான மீவாளே" (தக்க. 107.) இத்தலத்தில் தேவரமு தம் பருக அபிராமி அருள் செய்தாளென்பது புராண வரலாறு. ௬0

மெல்லிய நுண்ணிடை மின்னனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்னனை யாளைப் புகழ்ந்துமறை
சொல்லிய வண்ணந் தொழுமடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லிய மார்த்தெழ வெண்பக டூரும் பதந்தருமே.

(உரை) மெல்லிய நுணுகிய திருவிடை மின்னலைப்போல உள்ள வளை, விரிந்த சடாபாரத்தையுடைய சிவபிரான் தழுவிய மெல்லிய நகி லின் நிறம் பொன்னைப்போல இருப்பவளாகிய அபிராமியை வேதம் புகழ்ந்து சொல்லியபடி வழிபடும் அடியவர்களைத் தொழுகின்றவர்களுக்கு அத்தேவி பல வாத்தியங்கள் ஆரவாரித்து எழ வெள்ளை யானையின்மேல் ஏறிச் செல்லும் இந்திர பதவியை அருள் செய்வாள்.

மறை சொல்லிய வண்ணம் தொழுதலை முன்பும் (79) கூறினார். அடியார்க்கடியாரே இந்திர பதவி பெறுவாரெனின் அவ்வடியார் பெறும் பயன் அதனினும் பெரிதாம் என்பது குறிப்பு. கக

பதத்தே யுருகிநின் பாதத்தி லேமனம் பற்றியுன்றன்
இதத்தே யொழுக வடிமைகொண் டாயினி யாதொருவர்
மதத்தே மதிமயங் கேனவர் போன வழியுஞ்செல்லேன்
முதற்றேவர் மூவரும் யாவரும் போற்று முகிழ்நகையே.

(உரை) மும்மூர்த்திகளும் பிறர் யாவரும் வணங்கித் துதிக்கும் அரும்புகின்ற புன்னகையையுடைய தேவி, நல்ல பக்குவம் பெற்று அப் பக்குவத்தில் என் உள்ளம் உருகி நின் திருவடியில் பற்றுக்கொண்டு நின் திருவுள்ளத்துக்கு உவப்பான நெறியிலே ஒழுகும்படி அடியேனை ஆட்கொண்டாய்; ஆதலின் யான் இனிமேல் வேறொருவர் சமயக்கொள்கையைப் பெரிதென்று எண்ணி அறிவு கலங்கேன்; அச்சமயத்தினர் ஒழுகும் வழியிலும் போகமாட்டேன்.

பதம் - அன்பு நிறைந்து நிற்கும் பரிபக்குவம். இதம் - இங்கிதமுமாம். ஒருவர் மதமென்றது பரசமயத்தை; "இனி யெண்ணுதற்குச், சமயங்களு மில்லை" (31.) மூவர் போற்றுதல்: 7. 'முதத்தேவர்' என்னும் பாடத்திற்கு மனமகிழ்ச்சியையுடைய தேவரென்று பொருள் கொள்க. கஉ

நகையே யிஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவிலந்த
வகையே பிறவியும் வம்பே மலைமக ளென்பதுநாம்
மிகையே யிவடன் றகைமையை நாடி விரும்புவதே.

(உரை) இந்த உலகங்களை யெல்லாம் ஈன்றெடுத்த பரமேசுவரிக்கு அரும்பிய முலை தாமரை யரும்பு; அருளால் நிரம்பி முதிர்ந்த கண் மருட்சியைப் பெற்ற மான் கண்; இங்ஙனம் கூறுதல் சிரிப்புக்கு இடமாம். அவளுக்கு முடிவும் இல்லை; அவ்வாறே பிறவியும் இல்லை; அப்படியிருக்க அவளை மலைக்குமகள் என்று கூறுவது வீணே; இங்ஙனம்

இவளுடைய ஒன்றற்கொன்று ஒவ்வாத இயல்புகளை ஆராய்ந்து போற்றுதல் நம் அளவுக்கு மிஞ்சிய செயலாம்.

அம்பிகையின் இயல்புகளுள் ஒன்றற்கு ஒன்று மாறாக இருப்பது போலத் தோற்றுவதைச் சமற்காரம்படக் கூறுகிறார். ஞாலமெல்லாம் பெற்றவளுக்கு நகில் தாழாமல் இருத்தல் ஒரு முரண்பாடு; "இங்கயற் கண் ணகனுலகம் எண்ணிறந்த சராசரங்க ளீன்றுந் தாழாக், கொங்கை" (**திருவிளையாடல்.**) கருணை விளைந்து முதிர்ந்த விழியில் இளம் பெண்ணிற்குரிய மருட்சியிருத்தல் முரண்பாடு. மான்கண்: "ம்ருகாக்ஷி" (**லலிதா.** 561.) இவ்விரண்டையும் ஒன்றாக்கி 'நகையே இஃது' என்றார். முடிவுஇல் - அந்தம் இல்லை. பிறவியில்லாதவளை மலைக்கு மகளாகப் பிறந்தாளெனல் முரண்பாடு. கூக

விரும்பித் தொழுமடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய வானந்த மாகி யறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னவெல்லாம்
தரும்பித்த ராவரென் றாலபி ராமி சமயநன்றே.

(**உரை**) தன்னை விரும்பிப் பணியும் அடியார்கள், கண்களில் நீர் மல்க உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய ஆனந்தம் மேன்மேலும் பொங்க ஆன்மபோதத்தை இழந்து தேனுள் மயங்கிய வண்டுபோல மயங்கி வார்த்தை குழறி முன்னே தாம் நினையாது சொன்னவையும் பொருளுடையனவாகத் தரும் பித்தராவரென்றால், அவர் கடைப்பிடிக்கும் அபிராமிக்குரிய சமயம் நன்மையையுடையது.

விழிநீர் மல்குதல் முதலியவை அம்பிகையின் அடியார்கள்பால் உண்டாகும் மெய்ப்பாடுகள். இந்தச் சிவானந்தானுபவத்தை, "புளக மெய் போர்ப்ப மொழிதடு மாற, உள்ளொலி நாதப் புள்ளொலி முழங்க, ஞானவா ரமுத பானம தார்ந்து, கருவிகள் கழன்று பரவச மாகிப், பரமானந்தப் பரவையுட் படிந்து, பேரா வியற்கை பெற்றினி திருப்ப, ஆரா வின்ப மளித்தரு ளெமக்கே" (**பண்டார மும்மணிக்கோவை**) என்னும் அருமைச் செய்யுட் பகுதி விளக்குதல் காண்க. உண்மைச் சிவயோகிகள் மறந்து கூறினவும் பலிக்குமாதலின் 'சொன்ன வெல்லாம் தரும்' என்றார்; இதுபற்றியே அவர்களைச் சத்திய சங்கற்பர்கள் என்பர். கூ௪

நன்றே வருகினுந் தீதே விளைகினு நானறிவ
தொன்றேயு மில்லை யுனக்கே பரமெனக் குள்ளவெல்லாம்
அன்றே யுனதென் றளித்துவிட் டேனழி யாதகுணக்
குன்றே யருட்கட லேயிம வான்பெற்ற கோமளமே.

(உரை) என்றும் அழிவற்ற குணமலையே, கருணைசமுத்திரமே, பருவதராசன் பெற்ற மெல்லியலே, நன்மையே வந்தாலும் தீமையே விளைந்தாலும் அவற்றைக் குறித்து நான் நினைப்பது ஒன்றும் இல்லை; என்னைப்பற்றி வருவதெல்லாம் உனக்கே பாரம்; எனக்கு உள்ள உடல் பொருள் ஆவி எல்லாம் என்னை நீ ஆட்கொண்ட அன்றே உன்னுடைய பொருளென்று அர்ப்பணம் செய்துவிட்டேன்.

நன்று - இன்பம்; தீது - துன்பம். உனது: தொகுதி ஒருமை. "அன்றே யென்ற னாவியும் உடலு முடைமை யெல்லாமும், குன்றே யனையாய் என்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" (**திருவாசகம்**) என்பது இங்கே ஒப்புநோக்குதற்கு உரியது. கரு

கோமள வல்லியை யல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை யேதமி லாளை யெழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயி றன்னைத் தம்மால்
ஆமள வுந்தொழு வாரெழு பாருக்கு மாதிபரே.

(உரை) மெல்லிய கொடி போன்றவளை, அகவிதழையுடைய தாமரையாகிய ஆலயத்தில் எழுந்தருளி யிருக்கும் யாமளாகமத்தினால் புகழப்பட்ட வலிமையுடையவளை, குற்றமற்றவளை, ஓவியத்தில் எழுதுதற்கு அரிய சாமள நிறம் பொருந்திய சகல கலைக்கும் தலைவியாகிய மயில் போன்றவளை, தம்மால் இயன்ற அளவும் உபாசிப்பவர்கள் எழுலகிற்கும் அரசர்களாவார்கள்.

யாமளம் - அம்பிகையின் பெருமையை உரைக்கும் ஆகமம்; "பரவுவன யாமளமோ", "யோக யாமளத்தினுள்" (**தக்க்.** 113, 136.) சகலகலாமயில்: 21, குறிப்பு. கசு

ஆதித்த னம்புலி யங்கி குபேர னமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணிய ரெண்ணிலர் போற்றுவர் தையலையே.

(உரை) சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், இந்திரன், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், புராரி, திருமால், அகத்தியர், மோதிப் போர் செய்கின்ற வேற்படையையுடைய முருகன், விநாயகர், மன்மதன் முதலாகப் புண்ணியச் செயல்களைச் சாதனை செய்தவர்களாகிய கணக்கில்லாத பேர்கள் பாலாம்பிகையாகிய அபிராமியை வழிபடுவர்.

தையல் - அலங்காரமுடையவள் எனலுமாம். கூஎ

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயுந் தலைவந்த வாறுங் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சினல் லாலொரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சிற் புகவறி யாமடப் பூங்குயிலே.

(உரை) உண்மை யுணர்வு பொருந்திய அடியார்களது மனத்திலன்றி வஞ்சகருடைய பொய் நிரம்பிய மனத்தில் ஒருகாலும் புகுதலை அறியாத இளமையையுடைய பொலிவு பெற்ற குயில்போலும் தேவி, நின் ஊடலைத் தீர்க்கும் பொருட்டு நின் திருவடித் தாமரையை வருடி, அதனால் ஊடல் தீராமை உணர்ந்து பின் அத்தாமரையைத் தம் திருமுடி மேற் சூட்டிக்கொண்ட சிவபிரானுக்கு, அக்காலத்தில் திருக்கரத்தில் இருந்த அக்கினியும், திருமுடியில் இருந்த கங்கையும் மறைந்து போனது எவ்விடத்தில் ?

சிவபிரான் அம்பிகையின் ஊடல் தீர்க்க வணங்குதல் : 11, 35, 60. அடியை வருடும்போது கையில் தீ இருப்பின் தாமரைபோன்ற அதற்கு வெம்மை தந்து ஊடலை மிகுவிக்கும் ; அங்ஙனமே, பணியுங்கால் கங்கை இருப்பின் மாற்றாளாகிய அவளைக் கண்டு பின்னும் ஊடல் அம்பிகைக்கு மிகும் ; ஆதலின் இறைவர் அவ்விரண்டையும் மறையச் செய்தனர். கூஅ

குயிலா யிருக்குங் கடம்பா டவியிடைக் கோலவியன்
மயிலா யிருக்கு மிமயா சலத்திடை வந்துதித்த
வெயிலா யிருக்கும் விசும்பிற் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்கன் றிமவா னளித்த கனங்குழையே.

(உரை) கயிலாய மலையாளராகிய சிவபிரானுக்கு இமவான் திருமணம் செய்து கொடுத்த கனவிய பொற்குழையை அணிந்த தேவியானவள், கடம்பவனத்தில் குயிலாக விளங்குவாள்; இமாசலத்தில் அழகும் பெருமையும் உடைய மயிலாக இருப்பாள் ; வானத்தின்மேல் வந்து உதித்த சூரியனாக இருப்பாள்; தாமரையின்மேல் அன்னமாக எழுந்தருளியிருப்பாள்.

குயிலைப்போல விளங்குவாளென உவம வாசகம்படச் சொல்லுதலும் பொருந்தும். ௬௬

குழையத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப் போது முதிக்கின்றவே.

(உரை) குழையும்படி தன்னைத் தழுவிய சிவபிரானது திருமார்பின் மாலையாகிய கொன்றையின் மணம் வீசுகின்ற நகிலையுடைய கொடி போன்ற அபிராமியினுடைய மூங்கிலைப் பொருது வென்ற அழகிய நீண்ட திருத்தோள்களும், கரும்பாகிய வில்லும், ஆண் பெண்கள் ஒருவரை ஒருவர் விரும்பும்படி பொரும் வலிமையையுடைய தேனையுடைய அழகிய மலரம்புகளும், வெள்ளிய புன்முறுவலும், மான் கண்ணைவென்ற திருவிழியும் அடியேனது நெஞ்சில் எக்காலத்தும் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

தார் குழையும்படி தழுவுதல் : " மூங்கைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் றார் " (கலித்தொகை, 68 : 14.) ௬00

## பயன்

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசங் குசுமங் கரும்புமங்கை [யே.
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லை

(உரை) எங்கள் தாயை, அபிராமவல்லியை, அகிலாண்டங்களையும் ஈன்றருளியவளை, மாதுளம் பூவைப்போன்ற செந்நிறம் பொருந்தியவளை, புவி முழுவதும் பாதுகாத்தவளை, அங்குசமும் பாசமும் மலர்ப்பாணமும் கரும்புவில்லும் தன் நான்கு அழகிய திருக்கைகளிலே வைத்தவளை, மூன்று கண்களையுடையவளை வணங்கும் அடியவர்களுக்கு வருவதொரு துன்பமும் இல்லை.

ஆத்தாள் : "ஆத்தாள் மால்தங்கைச்சி" (திருப்புகழ்.) அண்டமெல்லாம் பூத்தாள், காத்தாள் : 13. மாதுளம் பூ நிறத்தாள் : 1. அடங்க - முழுவதும். 'அங்குச பாசாங் குசமுங் கரும்பும்' என்ற பாடத்தில் அங்குசம் இரண்டு முறை வருகிறது. அம்பிகையின் திருக்கரங்கள் நான்கிலும் உள்ள பொருள்களைச் சொல்ல வந்தவர் மலர்ப்பாணத்தைச் சொல்லாது விட்டாரென்று கொள்ளுதல் பொருத்தமன்று. ஆகவே இங்குள்ள பாடம் ஊகித்து அறியப்பட்டது.

# செய்யுள் முதற்குறிப் பகராதி


| முதற்குறிப்பு | பக்கம் | முதற்குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| அணங்கே | 55 | கிளியே ... | 13 |
| அதிசய ... | 14 | குரம்பை ... | 35 |
| அரணம் ... | 37 | குயிலாயிருக் ... | 65 |
| அருணம்புயத் ... | 41 | குழையத்தழு ... | 65 |
| அழகுக்கொரு ... | 48 | குறித்தேன் ... | 52 |
| அளியார் ... | 55 | கூட்டியவா ... | 54 |
| அறிந்தே ... | 3 | கைக்கேயணி ... | 28 |
| அன்றேதடுத் ... | 23 | கொடியே ... | 17 |
| ஆசைக்கட ... | 24 | கொள்ளேன் ... | 18 |
| ஆத்தாளை ... | 66 | கோமள ... | 63 |
| ஆதித்த ... | 64 | சித்தியுங் ... | 22 |
| ஆளுகைக் ... | 29 | சிறக்குங் ... | 59 |
| ஆனந்த ... | 9 | சின்னஞ் ... | 38 |
| இடங்கொண்டு ... | 31 | சுடருங் ... | 35 |
| இல்லாமை ... | 39 | சுந்தரி ... | 7 |
| இழைக்கும் ... | 25 | செப்புங் ... | 53 |
| உடைத்தனை ... | 21 | சென்னிய ... | 6 |
| உடையாளை ... | 56 | சொல்லும் ... | 22 |
| உதிக்கின்ற ... | 2 | தங்கச்சிலை ... | 43 |
| உமையு ... | 24 | தங்குவர் ... | 51 |
| உறைகின்ற ... | 15 | தஞ்சம் ... | 42 |
| என்குறை ... | 49 | தண்ணளிக் ... | 12 |
| எத்து ... | 20 | ததியுறு ... | 6 |
| ஐயனளந்த ... | 40 | தவளேயிவ ... | 32 |
| ஒன்று ... | 40 | தனந்தருங் ... | 47 |
| ககனமும் ... | 45 | தாமங் ... | 50 |
| கண்களிக் ... | 48 | தாரமர் ... | 1 |
| கண்ணிய ... | 10 | திங்கட்பகவின் ... | 26 |
| கருத்தன ... | 8 | துணையுந் ... | 3 |

| முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| தேறும்படி | ... | 44 |
| தைவந்து | ... | 64 |
| தொண்டுசெய் | ... | 33 |
| தோத்திரஞ் | ... | 46 |
| நகையே | ... | 61 |
| நயனங்கண் | ... | 50 |
| நன்றேவரு | ... | 63 |
| நாயகி | ... | 36 |
| நாயேனை | ... | 43 |
| நின்று | ... | 9 |
| பதத்தே | ... | 61 |
| பயிரவி | ... | 52 |
| பரமென்றுனை | ... | 58 |
| பரிபுரச் | ... | 31 |
| பவளக்கொடி | ... | 28 |
| பார்க்குந் | ... | 57 |
| பாரும்புன | ... | 47 |
| பாலினுஞ் | ... | 42 |
| பின்னே | ... | 20 |
| புண்ணியஞ் | ... | 30 |
| பூத்தவ | ... | 11 |
| பொருந்திய | ... | 5 |

| முதற்குறிப்பு | | பக்கம் |
|---|---|---|
| பொருளே | ... | 27 |
| மங்கலை | ... | 16 |
| மணியே | ... | 19 |
| மணிதருந் | ... | 4 |
| மாலயன் | ... | 57 |
| மின்னாயிர | ... | 39 |
| மெல்லிய | ... | 60 |
| மொழிக்கு | ... | 58 |
| வந்திப்பவ | ... | 12 |
| வந்தேசர | ... | 26 |
| வருந்தாவகை | ... | 60 |
| வல்லப | ... | 46 |
| வவ்விய | ... | 14 |
| வாணுதற் | ... | 29 |
| வாழும்படி | ... | 34 |
| விரவும் | ... | 56 |
| விரும்பித் | ... | 62 |
| விழிக்கே | ... | 54 |
| வீணேபலி | ... | 45 |
| வெளிநின்ற | ... | 15 |
| வெறுக்குந் | ... | 33 |
| வையந்துரக | ... | 38 |